AstroVed

டிசம்பர், 2022

# சத்வித்யா

மாலை: 3 மலர்: 38

பிரின்ஸ் இன்ஃபோ பார்க், பிளாட் எண்.81-பி, ஏ-பிளாக், 4வது தளம்,
2வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒருமுறை வெளிவரும்



மந்திர மகிமை

நல்ல தூக்கத்தைப் பெற...

மகான் ஷீர்டி சாய்பாபா உண்மை பக்தி!

அற்புத பலன்களைக் கொடுக்கும்

## செல்லப்பிராட்டி பரப்பிரம்ம சக்தி ஸ்ரீ அக்ஷரலலிதா செல்வாம்பிகை!

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



கல்லாடம் என்பது ஒரு சுவையான நூல். ‘கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே’ என்னும் வழக்கு மொழியே உண்டு! இந்த கல்லாடம் தோன்றியது ஓர் அற்புதமான நிகழ்வினை பின்னணியாகக் கொண்டுதான்!

மாணிக்கவாசகர் இறைவனின் பெருமை, சிறப்பினை நெஞ்சுருகிப்பாடி ‘திருக்கோவையார்’ என்னும் அற்புத நூலைப் படைத்தார். ஆனால், இந்த திருக்கோவையில் பக்திச்சுவையைவிட காமச்சுவையே மிகுந்துள்ளது என ஒரு சாரார் ஏற்க மறுத்த நிலையில், புலவர் கல்லாடனார் அக்கூற்றினை மாற்ற முனைந்தார். திருக்கோவையிலிருந்து 100 பாடல்களை எடுத்து, அப்பாடல்களுக்கு விளக்கம் தந்தார்.

திருக்கோவையாரில் தெய்வீகச் சுவையே மிகுந்து காணப்படுகிறது என்பதனை தனது விளக்க நூலில் பதிவு செய்தார். இதுவே ‘கல்லாடம்’ என்னும் நூல்!

இந்த கல்லாடம் நூலினைப் படித்த பின்பே, நான் திருவாசகத்தின் பால் ஈர்ப்பு ஏற்பட்டு, திருவாசகத்தை ஆய்வு செய்து மூன்றாண்டு காலத்தில் பட்டம் பெற்றேன்

Dr. Baskaran Pillai



அருமை சத்வித்யா வாசகர்களே!

பனிவாடை வீசும்முன்னே குளிர்வாடை வீசத் தொடங்கிவிட்டது. இறைவன் ஈசன், ஜோதிவடிவாய் காட்சி கொடுக்கும் கார்த்திகை தீபத்தின் பேரொளியும், அதனால் ஏற்படும் வெப்ப நிலையும் குளிர்கால மேகங்களை சூடேற்றிச் செல்லும் அற்புத காலம் இது.

இதோ... திருமாலின் புகழ்பாடும் திருப்பாவையும், தேவாதிதேவனான மகாதேவனின் அருள் உணர்த்தும் திருவெம்பாவையும் மார்கழிப் பனிமூட்டத்தையும் மீறி பக்தி மனங்களில் பரவசத்தை ஏற்படுத்தும் பலன் நிறைந்த மாதம்!

திருவாதிரைக் களியும் திருவரங்கம் காணுகின்ற வைகுண்ட வாசலும் திக்கெல்லாம் திருவருளை பொழியட்டும்! போனவை போக... பூத்துக் குலுங்கும் புத்தாண்டு பொன்னையும் மணியையும் வாரிக் கொடுக்கட்டும். போகியில் புன்மைகளைக் கொளுத்தி, பொங்கலிலே இன்பம் குவிக்க, எதிர்பார்த்திருப்போம்.

‘மாதங்களில் நான் மார்கழி’ என்றார், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்! அந்த பகவானின் பேரருளைப் பெற்று, நாடும் மக்களும் நலங்கள் பல பெற்று, வளமுடன் வாழ...

இறைவனை பிரார்த்திக்கின்றோம்!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்

அன்புடன்
Astroved.com



# சூடிக் கொடுத்த சுடர்க்கொடி!



பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய பெரியாழ்வாரின் திருமகளாகிய ஸ்ரீ ஆண்டாள் சிறுமியாக இருக்கும் போதே ஸ்ரீ கண்ணபிரானிடம் தூய பக்தி வளரலாயிற்று.

மணப்பருவம் எட்டியதும் “மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன்” என்றார். கண்ணனையே மணக்க வேண்டும் என்ற உறுதியை தன் மனதில் கொண்டார்.

சகல ஐஸ்வர்யங்களும் தரும் திருத்துழாய் என்னும் துளசி தோட்டத்தில் அவதரித்தவள் ஸ்ரீ ஆண்டாள் என்பது புராணச்செய்தி.

ஸ்ரீ ஆண்டாள் கி.பி எட்டாம் நூற்றாண்டில் நள ஆண்டில் ஆடி மாதம் பூர நன்னாளில் திருவில்லிபுத்தூரில் பூமி பிராட்டியின் அம்சமாக, விஷ்ணு சித்தர் என்னும் பெரியாழ்வார் மகளாக தோன்றினார்.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஸ்ரீரங்க மன்னாரை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பக்தி பெருங்காதல் கொண்டு, அப்பெருமாள் பெருமைகளையே எப்போதும் நினைத்து வந்தாள் கோதை ஆண்டாள்.

பெரியாழ்வார் பெருமாளுக்கு சாத்துவதற்காக வைத்திருக்கும் மாலையை அணிந்து கொண்டு, ஆபரணங்களையும் அணிந்து கொண்டு அப்பெருமாளுக்கு தான் பொருத்தமானவளா என்று தன் அழகை கண்ணாடியில் கண்டு ஆழ்வார் வருவதற்கு முன்பே மலர் மாலையைக் கழற்றி முன்போலவே பூக்கூடையில் நலங்காமல் வைத்தாள்.

நடந்ததை அறியாத ஆழ்வாரும் அம்மாலையை பெருமாளுக்குச் சாத்தி வந்தார். இப்படி பல நாட்கள் கழிந்த பின் ஒரு நாள் வெளியே போயிருந்த ஆழ்வார் விரைவாக திரும்பி வந்தபோது கோதை பூமாலையை சூடி இருப்பதைக் கண்டு கோபம் கொண்டு தன் பெண் இப்படி ஒரு தவறு செய்துவருவதை அறிந்து, "இனி அவ்வாறு செய்யக்கூடாது" என்று அவளைக் கண்டித்தார். அன்று பெருமாளுக்கு மாலை சாத்தாமல் மனம் வருந்தியிருந்தார்.

அன்றிரவு வட பெருங்கோயிலுடையான் பெரியாழ்வார் கனவிலே தோன்றி, "இன்று நீ நமக்கு மாலை கொண்டு வராததேன்?" என்று கேட்க, ஆழ்வாரும் நடந்ததைக் கூற,

அதைக் கேட்ட பெருமாள், "கோதை சூடிக்கொடுத்த மாலையை அணியவே நமக்கு விருப்பம். அதனால் அவள் சூடிக்கொடுத்த மாலையையே நீர் நமக்கு கொண்டு வருவீர்" என்று கூறி மறைந்தார்.

கண்விழித்த ஆழ்வாரும் தான் வளர்த்துவரும் பெண் பெருமாளுடைய தேவியர்களில் ஒருவர் என்று உணர்ந்து அவளை ஆண்டாள் என்றும், 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்றும் 'ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார்' என்றும் அழைத்து மகிழ்ந்தார்.

பிருந்தாவனத்தில் ஸ்ரீ கண்ணபிரானோடு ஆடிப்பாடி மகிழ்ந்த கோபிகைகள் அவன் பிரிந்து சென்றவுடன், தங்களை கண்ணனாக பாவித்து உயிர் வாழ்ந்தனர் என்பது புராணச் செய்தி. அதுபோன்று, ஸ்ரீ ஆண்டாளும் தன்னை உருவகித்து, ஸ்ரீ வில்லிபுத்தூரை திரு ஆய்பாடியாகவும், வடபெருங் கோயிலையே நந்தகோபனது மாளிகையாகவும், அங்குள்ள பெருமாளையே கண்ணனாகப் பாவித்து, கண்ணனுக்காக கோபிகைகள் நோற்ற நோன்பை தானும் நோற்று, திருப்பாவை பாசுரங்களை பாடி மகிழ்ந்தார், ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார்!

திருப்பாவை முப்பது பாசுரங்களைக் கொண்டது. முப்பது பாசுரங்களும் திவ்ய பிரபந்தமாக அனைத்து ஆலயங்களிலும் பாடப்படுகிறது. உலகத்து மொழிகளில் பெண்களுக்கு என்று ஓர் இறை இலக்கியம் இருக்குமானால் அது திருப்பாவை எனலாம்.

தாம் விரும்பிய கணவனை அடைவதற்கு நீர்த்துறைகளில் பாவை அமைத்து விளையாடினார்கள் என்று பரிபாடலுக்கு உரை எழுதிய பரிமேலழகர் கூறுகிறார். சங்ககாலத்தில் பாவை நோன்பு 'அம்பாவாடல்' எனப்பட்டது. 'தைந்நீராடல்' என்றும் இதற்குப் பெயர் உண்டு. பழங்காலத்தில் ஆதிரை பௌர்ணமி இரவோடு மார்கழி முடிவுற்று தை மாதம் தொடங்கியது. எனவே இது 'தைந்நீராடல்' என அழைக்கப்பெற்றது.



ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் மிகவும் பழமை வாய்ந்ததாகும். பெரியாழ்வார்,

ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் அவதரித்த தலமாகும்.

ஸ்ரீ ஆண்டாள், தம் திருப்பாவை பாசுரங்கள்

மூலம் உயிர்களுக்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பினையும், உயிர்கள் இறைவனோடு கூடியிருத்தலே இன்பம் என்றும், இறை அடியார்களுடன் கூடி வாழ்வதே செம்மையானது என்பதையும் உலகிற்கு உணர்த்திய, உயரிய தெய்வப் பெண்பாற் புலவர், ஸ்ரீ கோதை ஆண்டாள்!

இத் திருப்பாவை பாசுரங்களில் ஆயர்குல பெண்கள் ஸ்ரீ கண்ணபிரானை துயிலெழுப்பி, அவருக்கே வேதாந்த பொருளை, அவர் திருவருளாலே உணர்த்துகின்றனர். இறைவனிடத்து அன்பை விளக்கும் இந்நூலில் வேதத்தின் உயரிய கருத்துகள் இனிதே இடம் பெற்றுள்ளன.

இறைவனை எழுப்பி, அவனது திருவடிகளை வணங்கிய பிறகே மற்ற கடமைகளில் ஈடுபட வேண்டும் என்ற உயர்ந்த கருத்தை உள்ளடக்கிய அற்புத தெய்வப்பனுவலே

ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் அருளிய ‘திருப்பாவை’ ஆகும்.

‘திருப்பாவை’ எந்த அளவிற்கு இனிமை வாய்ந்ததோ அதேபோன்றே நாச்சியார் திருமொழியும் அற்புதமான தெய்வப் பனுவலாகும்.

மார்கழி மாண்பு நிறை மாதமாகும்! மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று ஸ்ரீ கண்ணபிரான் அருளியுள்ளார். மார்கழித் திங்களில் வைகறைப் பொழுதில் எழுந்து நீராடி வாசல்களில் வண்ண வண்ணக் கோலங்கள் போட்டு, கோலத்தின் நடுவில் பசுஞ்சாணத்தில் பரங்கிப் பூவை வைத்தும், வாசற்படிகளில் மஞ்சள் குங்குமம் வைத்து, மகாலட்சுமியாக பாவித்து தூப தீபம் காட்டி, விளக்குகளை ஏற்றிவைத்து, ஆலயங்களுக்கு அதிகாலையிலேயே சென்று மனம், மொழி, மெய் ஒன்றுபட ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை பாசுரங்களையும், மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையும் பாடி இறையருளை இனிதே பெறலாம்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்...

“மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத

முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்

மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்

கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்”

என்ற ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரின் திருமொழியை மனம், மொழி, மெய் ஒன்றுபட பாடித் துதித்தால் நல்ல இல்லறம் கிடைக்கும்.



சைவ சித்தாந்த செம்மல்
**கவிஞர். சீனு. செந்தாமரை**
கடலூர்


# சித்தர் பூமி

## சுப்பையா சுவாமிகள்

## திருக்கழுக்குன்றத்தின திருமகனார்!



ரா. பன்னீர்செல்வம்



ஓரிடத்தில் விழுகின்ற விதைகள், அங்கேயே மரம், செடி, கொடியாய் முளைத்து, நாடிவரும் அனைவருக்கும் நற்பயனை விளைக்கின்றன. ஆனால், நதிகளோ... பிறந்த இடம் ஒன்றாக இருந்தாலும் தான் நடைபோடும் இடங்களில் எல்லாம் நன்மையை நல்கி, கடல் என்னும் பேரலையில் ஐக்கியமாகி, எல்லோருக்கும் நன்மையளித்த திருப்தியோடு கலந்து விடுகின்றன.

இதில்... ஞானியரும், மகான்களும் எவ்வகையைச் சேர்ந்தவர்கள்?... நிச்சயமாகச் சொல்ல முடியும்! ஞானிகள் அனைவரும் நதியைப் போன்றவர்கள்தாம்! பிறப்பது ஓரிடம்; இறையன்பைப் பெறுவது வேறிடம்; பெற்ற அருளை - சக்தியை உற்ற மாந்தர்க்கு உணர்த்துதல் பலவிடம்! இறுதியில் இறைவன் என்னும் பெருங்கடலில் ஐக்கியமாகி, இறைத்தன்மை அடைவது என ஞானியர் யாவரும் ஒரு நதியினைப் போலவே நடைபோடுபவர்களே! அவர்களில் ஒருவர் தான் கடந்த நூற்றாண்டில் அவதரித்த சுப்பையா சுவாமிகள்!

இவர் இறையருளைப் பெற்றது எவ்விதம்?

ஞானியாய் நன்மைகள் செய்தது எப்படி?

'திருக்கழுக் குன்றம் சித்தர்' என்னும் அடையாளப் பெயரால் அழைக்கப்பட்டது ஏன்? என்னும் விபரங்களைப் பார்க்கலாம்.

தமிழகத்தின் முத்துநகரம் என போற்றப்படுகின்ற தூத்துக்குடி மாவட்டத்தில் வைணவ திருத்தலமான ஆழ்வார் திருநகரிக்கு அருகில் உள்ள கடையனோடை என்னும் புண்ணிய பூமியில் தவசீலர் வில்லிமுத்துவுக்கும் அவரது சகதர்மியான நாராயண வடிவுக்கும் பூர்வஜென்ம புண்ணியத்தின் பயனாக 1908 ஆம் ஆண்டு ஓர் ஆண் மகவு

அவதரித்தது; அந்த குழந்தைக்கு சுப்பையா என்று பெயர்சூட்டி சீராட்டி வளர்த்து வந்தனர்!

அந்த சிறுவயதிலேயே அந்த குழந்தையின் முகத்தில் ஆன்மிக பேரொளி இழையோடியது. பள்ளி செல்லும் பருவத்தில் கூட, ஏட்டுக்கல்வி தந்த இன்னறிவோடு ஆன்மிக அறிவும் போட்டி போட்டு வளர்ந்து வந்தது, சுப்பையாவிடம்!

ஒரு பள்ளி மாணவன், பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கோ அல்லது விளையாடவோ போகவேண்டும் என்றுதான் விரும்புவான். ஆனால், நமது சுப்பையாவோ... அருள் வெள்ளம் பொங்கி பிரவாகம் எடுக்கும் ஆலயங்களை நோக்கி செல்லலானான்.

ஆம்!... இவர் பிறந்த ஊரைச் சுற்றிலும் அரங்கனின் அருள் சுரக்கும் நவதிருப்பதிகள் என்கிற புண்ணியத் தலங்கள் அமைந்திருந்தன. கருவிலேயே இறையருள் நிறைந்திருந்த காரணத்தால் அந்த ஐந்து வயது இளம் பிராயத்திலேயே அந்த ஆலயங்களை நாடிச்சென்று வணங்கத் தொடங்கினார்.

ஒரு மலர் மலர்வது போல இறைத்தன்மை இவரது இதயத்தில் மெல்ல மெல்ல மலர்ந்தது. ஓரிரு ஆண்டுகள் சென்றன. சற்று வயது முதிர்ந்த பக்தர்களோடு சேர்ந்து அடிக்கடி, அருகிலே இருந்த அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர் திருத்தலத்திற்கு வந்து முருகனை தரிசனம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அழகன் முருகனை ஆசைதீர... கண்குளிர தரிசனம் செய்யும் சுப்பையா, இந்த திருச்செந்தூர் ஆலயத்தை நிர்மாணம் செய்த சித்தர்களான காசி சுவாமிகள், ஆறுமுக சுவாமிகள், மௌன சுவாமிகள் ஆகியோர் அமர்ந்து தவம் செய்த குகைகளுக்கு சென்று தியானம் செய்யத் தொடங்கினார்.

அப்போதிலிருந்து சித்தர்கள் மூவருடைய அருளாசி இவருக்குக் கிடைக்கப்பெற்றது. தொடர்ந்து அந்த குகைகளில் தவம் இயற்ற முற்பட்டபோது, அங்கே வருகின்ற பல சித்தர்களின் நட்பும் ஆசியும் சுப்பையாவுக்குக் கிடைத்தது. இப்படி வந்த சில சித்தர்கள் சுப்பையாவுக்கு மூலிகை பற்றிய ரகசியங்களை கற்றுத்தந்தனர்.

அந்த வகையில் மூலிகைகள் பற்றிய தெளிந்த ஞானம் பெற்று, மூலிகைகளின் தன்மைகளை ஆராயத் தொடங்கினார். பல்வேறு சித்தர்களின் வழிகாட்டுதலோடு மூலிகைகளின் சக்தியை சரியான முறையில் பயன்படுத்தி பற்பல நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். இதன் காரணமாக, 15 வயதிலேயே மூலிகைகளைக் கொண்டு மருத்துவ உதவிகள் செய்தார். இவருடைய ஆற்றலை அறிந்து சிகிச்சை பெற்ற அநேகர் நோய் நீங்கி, நலம் வாய்க்கப் பெற்றனர்.

குலசையில் பள்ளிக்கல்வியை முடித்தவுடன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பட்டப் படிப்பை மேற்கொண்டார். ஒருபுறம் கல்வியில் நேர்த்தியாக இருந்தாலும் ஆன்மிக பற்று அதையும் மீறி வளர்ந்து கொண்டே வந்தது.

இந்த சமயத்தில்தான், கல்யாணம் ராமசாமி என்பவரின் தொடர்பு ஏற்பட்டு, அஷ்டமா சித்திகளை அவரிடம் கற்றுத் தெளிந்தார். இந்த நிலையில் பட்டப் படிப்பை முடித்திருந்தாலும் முழுமையான ஆன்மீக வாதியாய், சித்த புருஷராய் பரிமளிக்கலானார், சுப்பையா சுவாமிகள்!

போதும் என்னும் அளவிற்கு கல்வியின் எல்லையைத் தொட்ட சுப்பையாவுக்கு அவரது பெற்றோர் திருமணம் செய்து வைத்து, தங்கள் கடமையை நிறைவேற்ற நினைத்தனர். ஆனால், இறைநாட்டம் இவரை இல்லத்திலிருந்து ஈர்த்ததால் திருமணம் வேண்டாம் என அறுதியிட்டுக் கூறிவிட்டு, வட இந்திய யாத்திரையைத் தொடங்கினார். இந்த புனித யாத்திரை தான் இவரை பூரணத்துவம் பெற்ற சித்தபுருஷராக மாற்றியது எனலாம்.

இமயமலைச் சாரல், காசி, கங்கை நீராடல் என இந்தப் புண்ணிய யாத்திரையின் மூலம் இறையருள் நிரம்பப் பெற்றவராய் தனது 40 வது வயதுவரை இப்படியே புனித தரிசனங்களைப் பெற்றவர், தனது 40 வது வயதில் வடலூரில் உள்ள புனிதத்தை அறிந்தவராய் அங்கு வந்து வள்ளலார் ராமலிங்க சுவாமிகளின் வழியினைப் பின்பற்றி ஜீவகாருண்யம், சுத்த சன்மார்க்கம் என்னும் பாதைகளில் பயணப்பட்டு, அன்பு, பொறுமை ஆகியவற்றின் சிகரமாக தன்னை பக்குவப்படுத்திக் கொண்டார்.

வள்ளல் பெருமானார் மீது கொண்ட அளவற்ற ஈடுபட்டால் அங்கேயே பலகாலம் தங்கியிருந்து இறைப்பணியோடு மக்கள் நலமும் போற்றி செயல்பட்டவர், 1951 ஆம் ஆண்டு, வள்ளலாரின் வழிகாட்டுதலை உணர்ந்து அவருடைய உத்தரவினைப் பெற்றார். அந்த உத்தரவானது; "உடனே, திருக்கழுகுன்றம் செல்" என்பதாகும்.

படையல் போடும் நேரத்தில் சரியாக, அந்த மலைக்கு இரண்டு கழுகுகள் வரும் என்பது

ஆன்மிக உலகமே அறிந்த உண்மை. அந்த கழுகுகளைப் பார்க்க, தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மலைக்கு வந்து போவது வழக்கம். அப்படி வருகின்ற பக்தர்கள் எல்லோருடைய பார்வையும், மலைமேல் உள்ள குகையில் தவம் செய்துகொண்டிருக்கும் நம் சுப்பையா சுவாமிகளின் மீது பட்டது. அதைவிட, வருகின்ற பக்தர்களில்... துன்பப்படுவோர் அனைவர் மீதும் நம் சுவாமிகள் பார்வை பட்டது! யாராக இருந்தாலும் இவரது முகத்தைப் பார்த்ததும் ஓர் ஈர்ப்பு உண்டானது. இவருடைய தோற்றத்தில் தென்பட்ட தெய்வீகத் தன்மை அனைவரையும் அவர்பால் இழுத்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

அவரிடம் வந்து தங்களது துன்பத்தைக் கூறுவோர்க்கு அவர்கள் துயரம் போக்கும் வழிகளைத் தீர்வாகச் சொல்வார். ஒரு சிலரை இவரே இனங்கண்டு அழைத்து, அவர்களுடைய துன்பத்தை எடுத்துச் சொல்லி, நல்வாழ்வுக்கு வழிகாட்டுவதோடு மக்களின் உடலை வருத்தும் நோய்களையும் பார்வை பட்ட மாத்திரத்திலேயே தீர்த்து வைத்தார்.

யாரோ, எவரோ என்று நினைத்து ஒதுங்கிச் சென்றவர்களும் சுப்பையா சுவாமிகளின் சக்தியையும் சித்திகளையும் கண்டு வணங்கத் தலைப்பட்டனர்.

'நடக்கவிருப்பதை எடுத்துச் சொல்லி, நல்வழி காட்டுகிறார்'

'அவரைப் பார்த்தாலே உடலில் உள்ள நோய்கள் காணாமல் போகிறது'

'அவர் சொல்லுகின்ற வார்த்தைகள் எல்லாமே வேதம்'

இப்படியே ஒவ்வொருவரும் பலவாறு இவரைப்பற்றி பேசினர். இன்னும் சிலருக்கோ வேறு ஒரு கவலை...

"ஒருநாள் கூட சுவாமிகள் என்னை அழைத்ததில்லையே..."

"சுவாமிகள் என்னிடம் பேசவே இல்லை" என்ற சொற்களும் சிலரிடம் வெளிப்பட்டது.

சுவாமிகளின் சொல்லும், அவரது செயல்களும் இறைவனையே கண்முன் நிறுத்துவதாய் உள்ளது என அங்கு வரும் பக்தர்கள் அனைவரும் மெய்சிலிர்த்தனர். வருவோர் ஒவ்வொருவரும் அவரது பெயரை கேட்டுத் தெரிந்துகொள்ள முடியுமா?... சில பக்தர்கள் தங்களுக்கு வழிகாட்டியாய் இருக்கும் இந்த சித்தரை அடையாளப்படுத்த ஒரு பெயரை வைக்க வேண்டும் என நினைத்தனர்! அப்படி பக்தர்கள் இவருக்கு சூட்டிய பெயர்தான்

'திருக்கழுக்குன்றம் சித்தர்!' ...

திருக்கழுக்குன்றத்துக் குகையில் நமது சுப்பையா சுவாமிகள் இருந்த காலம் 9 ஆண்டுகள்! இந்த 9 ஆண்டுகளில் இவருடைய அருட்பார்வை தங்கள் மீது பட்டதால் துன்பங்கள் நீங்கப் பெற்றோர் பலர்! இன்ப வாழ்வினை இனிமையுடன் பெற்றவர் பலர்! பலகாலம் பாடாய்படுத்திய உடற்பிணிகள் தீர்ந்து சுகமுடன் வாழ்ந்தவர் பலர்!

ஆலயத்தில் உறைகின்ற ஆண்டவன், கண்முன்னே வடிவெடுத்து வந்து நம்மை காத்தருள்வார் என்று சொன்னால் நம்ப முடியுமா? இந்த கலியுகத்தில் அப்படி எந்த அதிசயமும் நிகழ்ந்ததில்லை; நிகழப் போவதும் இல்லை! ஆனால், அந்த கடவுள் தனது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, இங்கு அனுப்பி வைத்து சாமான்ய மக்களின் துன்பங்களைத் தீர்த்து வைக்கிறார்.

அப்படிப்பட்ட இறைத்தன்மை பொருந்திய மகான்தான் 'திருக்கழுக்குன்றம் சித்தர்' என போற்றப்பட்ட நம் சுப்பையா சுவாமிகள்!

மலைக் குகையில் இவர் தங்கியிருந்த அந்த 9 ஆண்டுகளில் சில காலம் தொடர்ச்சியாக மௌன விரதத்தினை கடைபிடித்தார், சுவாமிகள்! அந்த நேரங்களில் எதையாவது சொல்ல வேண்டும் என்று தோன்றினால் ஒரு சிலேட்டில் எழுதிக் காட்டுவாராம். எப்படியோ... நாடி வந்த அனைவருக்கும் இவர் தனது அதீத சித்திகளால் அருள்புரிந்து வந்ததோடு ஆன்மிக சிந்தனையையும் இறையருளையும் உலகறியச் செய்த அருளாளராக விளங்கி வந்தார்.



சரியாக, 1960 ஆம் ஆண்டு... அதாவது சுவாமிகளின் 51வது வயதில் முக்தி அடைந்தார். மலைக்குகையில் பூரணத்துவம் பெற்ற சுப்பையா சுவாமிகளின் உடலை வேதகிரீஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான இடத்தினில் ஜீவசமாதி அமைத்தனர்.

ஒருவரது கனவில் வந்த கட்டளைப்படி சரியாக 40 வது நாளில் அந்த சமாதியை திறந்து பார்த்த அனைவரும் ஆனந்த அதிர்ச்சியும், ஆச்சர்யமும் பெற்றனர். ஆமாம்... சமாதியில் அடக்கம் செய்யப்பட்டு 40 நாட்கள் ஆன நிலையிலும் அவரது உடல் எந்த பாதிப்பும் அடையாமல் அப்படியே இருந்தது. இதுதான் சுவாமிகளின் இறைத்தன்மைக்கு சிறந்த சாட்சியாய் அமைந்தது.

மேலும், அவரது தலைமுடி அனைத்தும் மேல் நோக்கி எழுந்திருந்தது. ஜீவசமாதி நிலையில் இந்த நிலையை ‘உச்சிப் பார்த்தல்’ என்பர்.

இத்தனை ஆற்றலும் அருளொளியும் பெற்ற நம் சுப்பையா சித்தர், வேதங்களே மலையாய் இருந்து அருள் சுரக்கும் அருட்குன்றத்தில், ஆன்மிக பேரொளியை வழங்கினார். ஜீவசமாதி அடைந்த பின்னரும் பக்தர்களின் வாழ்வில் இன்பம் பெருகிட இன்னருள் புரிகின்றார்!

திருக்கழுகுன்றம் சென்று இன்றும் இன்னருளை வாரிவழங்கும் சுப்பையா சித்தரை வணங்கி, வாழ்வில் நிம்மதி அடைவோம்.

# ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் அவதரித்த ஸ்ரீ வில்லிபுத்தூர்



ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயில் மிக மிக தொன்மையானது. பன்னிரு ஆழ்வார்களில் பெரியாழ்வாரும், ஸ்ரீ ஆண்டாளும் அவதரித்த அற்புத வைணவத் திருத்தலம். 108 திருப்பதிகள் என்று புகழ்மிக்க ஆழ்வார்களால் பாடப் பெற்ற, முக்கிய வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகும்.

இந்தக் கோயில் இரு பகுதிகளாக உள்ளது. முதல் பகுதியில் ஸ்ரீ வடபத்ர சயனர் கோயில் அமைந்துள்ளது. ஸ்ரீ வடபத்ர சயனருக்குத்தான் ஸ்ரீ ஆண்டாள் தன் மலர்க் கரங்களால் தொடுத்த பூமாலையை தான் அணிந்து மகிழ்ந்து சூடிய மாலையை கொடுத்தாள்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயில் முதல் பிரகார சுற்றில் 108 திருப்பதி பெருமாள்களின் திரு உருவங்கள் ஓவியமாக வரையப்பட்டுள்ளதை மனமுருக தரிசிக்கலாம்.

ஸ்ரீ ஆண்டாள், இத்தல பெருமாளை உள்ளம் உருக வேண்டி, திருப்பாவை 30 பாசுரங்களும், நாச்சியார் திருமொழி 143 பாசுரங்களும் பாடியது மிகுந்த தெய்வநலம் மிக்கவை.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் பிறந்த பெரியாழ்வார், ஸ்ரீ கருடாழ்வாரின் அம்சம் என்பது ஐதீகம். திருமாலுக்கு ஸ்ரீ ஆண்டாளை திருமணம் செய்து கொடுத்த சமயத்தில் திருமால் அருகில் நின்றதாகவும், இத்தலத்தில் ஸ்ரீ கருடாழ்வார் சுவாமிக்கு அருகில் எழுந்தருளியிருப்பது மிகுந்த சிறப்பு!

ஸ்ரீ வில்லிபுத்தூர் திருக்கோயில் கோபுரம் தமிழக அரசின் சின்னமாக அமைந்துள்ளது கூடுதல் சிறப்பாகும்.

"அன்ன வயல் புதுவை ஆண்டாள் - அரங்கற்குப்

பன்னு திருப்பாவைப் பல் பதியம் - இன்னிசையால்

பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை பூமாலை

சூடிக் கொடுத்தாளைச் சொல்லு!"

கோதை ஆண்டாள் தமிழை மட்டுமா ஆண்டாள் - அந்த கோவிந்தனையே ஆண்டாள்!



சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்



# குரு பக்தி மனம்!

குரு பக்தி தொடர்பான இக்கட்டுரையில் பகவான் கண்ணனையே, தனது வழிகாட்டியாகவும், மகா குருநாதராகவும் பாவித்துப் போற்றிய வீரன் அர்ஜுனன் பற்றியும், அவனது சீட மனப்பான்மையும் அறிய ஸ்ரீமத் பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள சில விஷயங்கள் குறித்து அறிய வியப்பு பெறுவோம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணனைக் காட்டிலும் சிறந்த குருநாதர் தனக்கு எங்கே கிடைப்பார்? ஆனால் குருநாதன் உபதேச ரூபமான அமுத மழை, சிஷ்யன் என்ற வயலில் தானே பொழியும் என்று அர்ஜுனன் என்ற சீடனின் மனதில் உதிக்கவே, அவர் குருக்ஷேத்திர போர்க்களத்தில் தனக்கு தேர் சாரதியாக விளங்கும் பகவானிடம் கூறுகிறார், "கண்ணா, நான் தங்களுடைய சீடன்!" என்று.

சீடர்கள் பலவிதம். தன் குருவிடம் உபதேசம் பெற்றுக்கொண்டு, தன் திறமையில் செருக்கு கொள்பவனுக்கோ, குருவைத் தவிர மற்றொருவரிடம் வெட்டுக்கிளி போன்று தாவிச் செல்வனுக்கோ, குரு க்ருபையின் உண்மையான லாபம் கிடைக்காது.

பகவானிடம் நான் உங்கள் சீடன் என்று சொன்னதோடு அர்ஜுனன் நிறுத்திக் கொள்ளாமல் வேறு புகலிடம் எனக்குக் கிடையாது என்ற மனதிடமுடன் ஒத்துக் கொள்கிறார். தன்னை அந்த குருவிடமே அர்ப்பணித்துக் கொள்ளும் முறையில் 'நின்னைச் சரண் புகுந்தேன்' என்றும் பணிவுடன் அறிவிக்கிறார். பிறகு அவர் மிக வினயமுடன் 'நீங்கள் கூறியபடி கேட்டு நடக்கிறேன்' என்றும் உறுதியாகச் சொல்கிறார்.

இதுவே உண்மையான ஒரு சீடன் கொண்ட குரு பக்தி மனமாகிறது.

தான் வரித்துக்கொண்ட குருவின் கட்டளைகளை தன் சிரசின் மீது தாங்கி, அதனை நிறைவேற்றும் சீடன் என்றுமே வீண் போவதில்லை என்பதற்குச் சான்றாக திகழ்ந்தான் 'மிஸ்ரன்' என்பவன்.

மிஸ்ரனின் குருநாதராகத் திகழ்ந்த மகரிஷிக்கு அந்த சிஷ்யன் கொண்ட திறமைகளும், குரு பக்தியும் மிகப் பிடித்திருந்தது. குருவின் ஆணைகளுக்கு கட்டுப்படும் மிஸ்ரனுக்கு பரிசாக தன் மகள் பாமதியை திருமணம் செய்விக்க வேண்டும் என்ற சிந்தையை அவர் கொண்டிருந்தார்.

முதுமையின் உச்சியில் இருந்த அம் மகரிஷிக்கு உடல் தள்ளாமை பற்றியிருந்தது. விரைவில் தான் இறைவன் திருவடிகளை அடைந்து விடுவோம் என்று அவருக்குத் தெரிந்து விட்டது.

ஒரு நாள் சீடன் மிஸ்ரனை தன்னருகே அழைத்த மகரிஷி, “சீடனே! இன்னும் சில காலம் மட்டுமே என் பூதவுடல் இங்கு இருக்கும். நான் சிவனின் பாத கமலங்களைச் சேரும் முன்பாக உன் சம்மதம் பெற்று ஒரு காரியத்தை முடிக்க எண்ணம் கொண்டுள்ளேன்” என்று பீடிகை போட்டார்.

எப்பொழுதும் தன் குருநாதரின் ஆக்ஞைகளுக்குக் கட்டுப்படும் இயல்புள்ள மிஸ்ரன், “ஐயனே! இதுவரை யான் தங்களிடம் கற்றுக்கொண்ட அனைத்து கலைகள், பாடமாக அருளப்பட்ட உலக தத்துவங்கள் என பல இருக்க, குருதட்சணையாக இதுவரை எதுவும் யான் சமர்ப்பிக்கவில்லை, எனவே தாங்கள் இப்பொழுது இடப்போகும் ஆக்ஞையை மகிழ்ச்சியோடு ஏற்று முடிப்பேன்!” என ஆனந்தக் கண்ணீர் மல்க சொன்னான்.

இதனால் திருப்தியுற்ற மகரிஷி, “மிக சந்தோஷம் மிஸ்ரா! என் நீண்ட நாளைய லட்சியம் என்ன தெரியுமா? புண்ணியம் கூடிய பிரம்ம சூத்திரத்திற்கு நான் உரை எழுத வேண்டும் என்பது. ஆனால் இன்று வரை அந்த பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை.

அடுத்து என்னால் பாசமுடன் வளர்க்கப்பட்ட என் குமாரத்தி பாமதியை உன் இசைவுடன் உனக்கு மணமுடிக்க விருப்பப் படுகின்றேன்” என்று சொல்லிவிட்டு பதிலுக்காக அவன் முகத்தை ஆவலோடு பார்த்தார்.

“குருஜி! தன்யனானேன். தங்கள் சிந்தைப்படி இந்த இரண்டு விருப்பங்களையும் முழு மனதுடன் ஏற்று முடிக்கிறேன்” என ஆனந்தமுடன் சீடன் பதிலளிக்க மகரிஷி களிப்புற்றார்.

ஒரு நல்ல முகூர்த்த நாளில் குருஜி ஆசீர்வதிக்க, அவருடைய மகள் பாமதியை கல்யாணம் செய்து கொண்டான் மிஸ்ரன்.

ஒரு சிறிய குடிலை அமைத்து, மிஸ்ரன், பாமதியை அழைத்துக்கொண்டு தனிக்குடித்தனம் தொடங்கி விட்டார்.

அக்குடிலில் இருவரும் கால் வைத்ததும், பாமதியிடம் மிஸ்ரன், “என் பிரிய சகியே! குரு தட்சணையாக, உன் தகப்பனார் எனக்கிட்ட ஆணைப்படி நான் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதி முடித்த பிறகே இல்லற சுகத்தை அனுபவிக்க வேண்டும். இதற்கு உன் முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும்!” என அன்புடன் கோர, பாமதி நிறை மனதுடன் தன் தலையை ஆட்டி சம்மதம் தந்தாள்.

தினமும் தர்ப்பாசனத்தில் மிஸ்ரன் ஓலைச்சுவடி, எழுத்தாணி கொண்டு அமர, பிரம்ம சூத்திர ஓலைச் சுவடியில் வரும் சுலோகங்களை பாமதி படிக்க, உடனுக்குடன் அவர் உரை எழுதுவது தினசரி வழக்கமானது.

இப்படி ஆரம்பித்த பணி தினமும் தொடர, நாட்கள் வேகமாய் ஓடி, மாதங்கள் வருடங்கள் என போய்க்கொண்டே இருந்தன.

இந்த புனித உரையை எழுத ஆரம்பித்த நாளிலிருந்து, மிஸ்ரனோ, பாமதியோ ஒருவரை ஒருவர் தொடக்கூட இல்லை! தவிர பாமதியும் அனைத்தையும் தன் தந்தையிடம் கற்று அறிந்துள்ளவள். ஆதலால் பிரம்ம சூத்திரத்தின் உரை சம்பந்தப்பட்ட மாறுபாடான கருத்துகள் எழும் போது இருவரும் ஆரோக்கியமான மனநிலை கொண்டு விவாதித்து அதனை முடிவுக்குக் கொண்டு வருவதும் உண்டு!

அன்றுதான் மிஸ்ரனுக்கு ஒரு முக்கியமான நாள். தன் குருநாதரின் ஆக்ஞையின்படி அவர் பிரம்ம சாஸ்திரத்திற்கு முழு உரையும் முடித்துவிட்ட புண்ணிய தினமாகிவிட்டது அன்று. இதனால் மகிழ்ச்சி பொங்க மிஸ்ரனின் இணையற்ற துணைவி பாமதி, “மிக்க களிப்புடன் இருக்கும் என்னை ஆசீர்வதியுங்கள்” எனக் கூறியபடியே அவரை நமஸ்கரித்தாள்.

பாமதியை குனிந்து பார்த்து மிஸ்ரன் ஆசீர்வதிக்கும் போது தான் அவர் கவனித்தார், அவள் தலை முடி நன்றாக நரைத்துக் காணப்பட்டதோடு, முதுமை பெற்றுவிட்டதால் உண்டான சுருக்க முகம், உடலுடனும் இருப்பதை!

“அப்பப்பா! பிரம்ம சூத்திர உரை பணியை நாம் முடிக்க இத்தனை ஆண்டுகளா ஆகிவிட்டன!?” என மலைத்துப்போனவர், தனது தலை, உடலை

பார்த்துவிட்டு, “அட! நானும் தான் வயோதிகத் தோற்றம், உடலைப் பெற்றுள்ளேன்!” என ஆச்சர்யப் பட்டுக்கொண்டார் மிஸ்ரன்.

அப்பொழுது அவர் துணைவியிடம், “பாமதி! இந்த உரை எழுதும் பணியில் உன் இளமையையும், கூடவே இல்லற சுகத்தையும் எனக்காக இழந்து தியாகம் புரிந்து விட்டாய்! இது மகத்தான ஒன்று! நான் என் குருநாதரின் மீது கொண்ட பக்தி மனதால் குரு காணிக்கையை நிறைவேற்ற உன் அயராத ஒத்துழைப்பு பணிதான் காரணம்! எனவே உன் பெயரான “பாமதி“ யையே, எனது இந்த பிரம்ம சூத்திர உரைக்கு திருநாமமாகச் சூட்டுகிறேன்” என்று குதூகலத்துடன் கூற, அந்த தர்மபத்தினி மெய்சிலிர்த்துப் போனாள், யாருக்கு இத்தகைய பாக்கியம் கிட்டும் என்று!

குரு காணிக்கையாக தங்கள் இளமையையும், குடும்ப சுகத்தையும் காணிக்கையாக சமர்ப்பித்த அந்த லட்சிய தம்பதிகளின் நினைவு, இன்றும் பாமதி நூலை கற்போர் மனதில் இளமையோடுதான் உலவி வருகிறது!

எந்தக் கலையையுமே, எந்த மந்திரத்தையுமே, தக்க குருவிடம் ஒழுங்காக, அவரை பக்தியுடனும், மதிப்புடனும் அணுகி பாடம் கேட்டுக் கற்றால்தான் வழிவழியாக இன்று வரை நிலைத்து நிற்கும்.

குருபக்தி, சிரத்தை, அறிவுத்திறன் என்ற மூன்றும் அமையப்பெற்ற சீடன் தான், குரு கற்பித்த விஷயத்தில் தேர்ந்து, வாழ்வில் பிரகாசிக்க முடியும் என்பதை பழைய புராண, சரித்திரங்கள் மூலமும், தற்காலத்தில் கல்வி உள்ளிட்ட பல கலைகளை தக்கவர் மூலம் அறியும் நிகழ்கால மனிதர்கள் மூலமும் எவரும் உணர முடியும்!

கற்றுக்கொள்ளும் விஷயங்கள் அல்லது பாடங்கள் சமஸ்கிருத மொழியில் இருந்தாலும், இல்லை தமிழ் உள்ளிட்ட அவரவர் தாய் மொழியில் இருந்தாலும், கூறப்படுபவைகளின் உச்சரிப்புத் தன்மை, அவைகள் தரும் சரியான பொருளை அந்தந்த குருமார்கள் அல்லது ஆசிரியர்கள் கூறும் வகையை சரிவர பின்பற்றினால் தான் முழுப்பலன் கிடைக்கும். எழுத்தறிவித்தவர் இறைவனாகிறார் என்பது நம் முன்னோர்கள் அருளிய பொன் மொழியாகும்! எனவே கற்பிக்கும் ஒரு குருவோ அல்லது ஆசிரியரோ பாடம் கேட்போரின் பக்திக்கு இப்படி உரியவராகி விடுகிறார். தக்க குரு அல்லது ஆசான் உச்சரிக்கும் ஒரு மந்திரமோ, பாடலோ, பாசுரமோ, கேட்போரால் சரிவர உச்சரிக்கப்படாமல் போனால், அது விபரீதமான பலன்களை அளித்து விடும் என்பதற்கு நிறைய புராண சம்பவங்கள் உள்ளன.

கர்ணபுரி என்ற நாட்டின் சிற்றரசனான பவபூதி என்பவனின் அரசவையில் அமைச்சர் பதவியில் இருந்த கௌதம பட்டர் என்ற அந்தணர் சாஸ்திரங்களைத் தக்க குருவிடம் கற்றுத் தேர்ந்த புத்திமான். அவர், தான் சார்ந்த அந்தணர் வகுப்பின் நெறிமுறைகளை தவறாது என்றும் கடைபிடிப்பவர்.

அன்றொரு நாள் கௌதம பட்டர் அரசவை பணிகளை முடித்துவிட்டு வழக்கம்போல் மாலை நேரத்தில் வீடு திரும்பி விட்டார் அரண்மனையிலிருந்து. தன் அன்றாட வழக்கப்படி மாலை நேர குளியலை முடித்துவிட்டு நித்திய கடமையான சந்தியா வந்தனத்தை சிரத்தையுடன் செய்து கொண்டிருந்தார் பட்டர்.

அச்சமயம் அமைச்சரின் தகுந்த ஆலோசனை ஏதோ ஒரு விஷயத்திற்காக முக்கியமாய்த் தேவைப்பட்டதால், அரசன் ஒரு சிப்பாயைக் கூப்பிட்டு, “உடனே இங்கே அமைச்சர் கௌதம பட்டரை அழைத்து வா!” என உத்தரவிட்டான். அக்கட்டளையை முடிக்க, அமைச்சரின் இல்லம் விரைந்தான் அவன்.

சிப்பாய் அமைச்சரின் இருப்பிடத்திற்கு வந்த நேரத்தில் அவருடைய துணைவி, யதேச்சையாக வீட்டிற்கு வெளியே வரவே, சிப்பாய் அரசரின் உத்திரவை அவளிடம் பணிவுடன் தெரிவித்தான். தன் கணவர் நித்திய சந்தியா வந்தனக் கடனை இப்போது புரிந்து கொண்டிருப்பதால் சிப்பாயை சற்று காத்திருக்கும் படி சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

சுமார் ஒரு மணி நேரம் கழித்து, தனது சந்தியா வந்தனக் கடனை முடித்துவிட்டு வெளியே வந்த கௌதம பட்டர், காத்திருந்த சிப்பாயிடம் விஷயம் அறிந்து கொண்டு தன் வழக்கமான அமைச்சர் உடுப்புகளை போட்டுக்கொண்டு கிளம்பினார், அரண்மனையை நோக்கி.

இவ்வளவு நேரம் கடந்தும் அமைச்சர் தன்னைச் சந்திக்க வரவில்லையே என்ற சினமுடன் அரசன் குறுக்கும் நெடுக்குமாய் அந்தப்புரத்தில் நடந்து

கொண்டிருந்தான். தன்னைச் சந்தித்து வணங்கிய அமைச்சரிடம் அவன் கோபமாக, “அமைச்சரே! இங்கு வர ஏன் இவ்வளவு காலதாமதமானது?” என வினவினான். “அரசரே! மன்னிக்க வேண்டும். எனது நித்திய மாலைக் கடனான ‘சந்தியாவந்தனம்’ முடித்து வந்ததால் வர நாழிகையாகிவிட்டது. என பதில் தந்தார்.

“சந்தியாவந்தனமா! அதென்ன? நான் கேள்விப்பட்டதே இல்லையே” என வெகுளியாக அரசன் கேட்கவே, அமைச்சர் காயத்ரி மந்திரம் உள்ளிட்ட சந்தியாவந்தனக் கடன் பற்றி விளக்கிக் கூறினார்.

“சந்தியா வந்தனத்தில் என்னவோ முக்கியமாய் காயத்ரீ மந்திரம் என்று சொன்னீர்களே!?” என அரசன் ஆவலோடு கேட்கவே, கௌதம பட்டர் அதனை முறைப்படி உச்சரித்து காட்டினார். தவிர அம்மந்திரம் கொண்ட பொருள், அதன் பலன்கள் எத்தகையது என விரிவாக எடுத்தும் சொன்னார்.

“அப்படியா அமைச்சரே, எனக்கு இப்பொழுதே அந்த காயத்ரீ மந்திரத்தைக் கற்றுக்கொடுங்கள்” என அவசர அவசரமாக அரசன் கோரினான். இதற்கு அமைச்சர், “மன்னவா! மன்னிக்க வேண்டும். எந்த மந்திரத்தையுமே தக்க குருநாதர் அல்லது ஆச்சாரியார் மூலமே கற்றறிந்துகொள்ள வேண்டும் என்பது நியதி. அப்பொழுதுதான் கேட்பவருக்கு மந்திரத்தின் நற்பலன் கிட்டும்” என எடுத்துச் சொன்னார். அதைக் கேட்டு சட்டென்று உணர்ச்சி வசப்பட்ட அரசன் “சரி சரி” என கூறிவிட்டு எதற்காக அமைச்சரை வரவழைத்தானோ அந்தப் பணி குறித்து ஆலோசித்து விட்டு, “நீர் புறப்படலாம்!” என உத்தரவு தந்தான். அமைச்சர் கிளம்பி வாயிற்புறம் வந்த போது, அரசனே அவரிடம் அங்கு வந்து, “ஏதோ காயத்ரீ மந்திரம் என்றீர்களே, அதை ஒரு ஓலையில் எழுதி, உடனே சிப்பாய் மூலம் போனவுடன் எனக்கு அனுப்பி வையுங்கள்” எனக் கூறி அவரை அனுப்பி விட்டான். அதன்படியே காயத்ரீ மந்திர ஓலையை சற்று நேரத்தில் எழுதி அவர் அனுப்ப, அது அரசரை அடைந்தது.

தனக்கு வந்த ஓலையைப் பிரித்துப் பார்த்த அரசனுக்கு அதில் உள்ள காயத்திரி மந்திரத்தை எப்படி படித்து உச்சரிப்பது என்று தெரியாமல் திணறினான். வேறு யாரையாவது கேட்போம் என ஒரு கணம் யோசித்த அவனை சுயமரியாதை தடுத்து விட்டது.

சுக்கு, மிளகு, திப்பிலி என்ற சொற்களை சுக், குமி, ளகுதி, ப்பிலி என்பது போல் உச்சரித்தான், அந்த காயத்ரீ மந்திரத்தை! நல்லவேளை, அங்கே விஷயம் தெரிந்த எவரும் இல்லை!

(தொடரும்)



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

# மந்திர மகிமை

## நல்ல தூக்கத்தைப் பெற...



நெஞ்சம் நெகிழ இறை தரிசனம் செய்யும் ஒரு பக்தன், தான் காணும் அன்னையின் தோற்றத்தினை இறைத்தன்மை கொண்ட - இயற்கை எழில் கொண்ட அனைத்தோடும் ஒப்பிட்டு நோக்குதல் போல் அகிலத்தை ஆளும் அன்னையின் அருள் வடிவைக் கண்ணாரக் கண்டு, அந்த அழகிலே லயித்து, அன்னையின் பேரழகினை வியந்து பாராட்டும் விதமாக ஆதிசங்கரர் அருளிய பாடல்கள் தான் 'சௌந்தர்ய லஹரி'. அவர் அருளிய அத்தனை பாடல்களும் தெள்ளமுதாய்த் திகழ்வதோடு, அன்னையின் அருட்கடாட்சத்தால் மந்திரமாக மாறியுள்ளது என்பதுதான் உண்மை!

அப்படிப்பட்ட மந்திரப் பாடல்களில், சௌந்தர்ய லஹரியின் 62 ஆவது பாடலானது, நல்ல தூக்கத்தைப் பெற உதவும் மந்திரமாகத் திகழ்கிறது.

தூக்கம் வராமல் தவித்து, ஆரோக்கியம் இழந்து, உடல் நலம் சீர்கெட்டு மருத்துவரைத் தேடிப்போகும் நிலையில் பெரும்பாலானோர் உள்ளதை இன்று காண்கிறோம்.

இந்த நிலையில் இருப்போர்க்கு மன அமைதி தந்து, நல்ல தூக்கத்தைப் பெற உதவும் மந்திரப்பாடலை பார்ப்போம்.

**மந்திரப் பாடல்:**

"ப்ரக்ருத்யா (ஆ)ரக்தாயாஸ் -தவ ஸுததி தந்தச்சத -ருசே

ப்ரவக்ஷ்யே ஸாத்ருச்யம் ஜனயது பலம் வித்ருமலதா

நபிம்பம் தத்பிம்ப -ப்ரதிபலன -ராகா தருணிதம்

துலாமத் யாரோடும் கதமிவ விலஜ்ஜேத கலயா"

இந்தப் பாடலின் பொருள்:

தாயே! முத்துப் பல்வரிசையை மூடி வைத்துள்ள உன் இதழ்களின் சிவப்புக்கு இணை ஏதம்மா?!... பவளக்கொடியும், கோவைக்கனியும் கூட இதற்கு உவமை கொள்ள ஒப்பாதே! உன்னுடைய அழகுதானே அவற்றிற்கு சிவப்பினை கொடையாய்த்தந்தது! நியாயமாக அவை வெட்கித் தலைகுனிவது தானே இயல்பு!?..

மந்திரப் பாடலை பிரயோகிக்கும் முறை:

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கத் தகட்டில் வரைந்து கொள்ள வேண்டும். அதனை பூஜையில் வைத்து வடகிழக்கு முகமாக அமர்ந்து, 8 நாட்கள், தினமும் 1000 முறை வீதம் மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

ஜாதிப் பூக்களைக் கொண்டு அர்ச்சனை செய்யவேண்டும். உளுந்து, தேன், அன்னம் சேர்த்து நைவேத்யம் செய்தல் நலம்.

இந்த மந்திர ஜெபத்தை முறைப்படி செய்தால், உடல் ஆரோக்கியம் பெருகி, முகம் வசீகரத்தன்மை பெறுவதோடு, நல்ல தூக்கத்தினையும் பெற முடியும்.



ரா. பன்னீர்செல்வம்





சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்

# ஆன்மிகத் தேடல்

## சத்தமும் சித்தமும் !

முதல் சத்தம் அழுகை! முடிவிலும் சத்தம்! மீளா துயில்! தான் அழுவதில்லை; பிறரை அழ வைப்பது! என்னவொரு படைப்பின் வினோதம்!

குழந்தை அழுதால்தான் ஆரோக்கியமான குழந்தை. அழவில்லை என்றால் மற்றவர்கள் அழுவார்கள்! அழுகை குழந்தை பருவத்திலிருந்தே தொடர்கிறது. வலியினால் – பசியினால் - இயற்கை உபாதைகளால் – பிடிவாதத்தால் - கோபத்தால் அழும் குழந்தை, வயது ஏற ஏற எடுத்ததற்கெல்லாம் அழுகிறது.

இந்த அழுகை நியாயத்தின் வெளிப்பாடாக இருக்கலாம். அநியாயத்தின் வெளிப்பாடாக இருந்தால் அது நீலிக்கண்ணீர், முதலைக்கண்ணீர் என்று சொல்லப்பெறுகிறது. எது எப்படியோ! சத்தம் மனித உணர்வை வெளிப்படுத்த உதவுகிறது. விலங்குகளைப் போல சத்தம் போட்ட மனிதன், சைகைகளைக் கொண்டு தன் உணர்வுகளை வெளிப்படுத்தினான். மெல்ல மெல்ல நாகரீகம் வளர, மொழியைத் தோற்றுவித்தான். சத்தத்தை மொழிக்குள் வரையறுத்தான். சொற்களை வடிவமைத்தான்.

சொற்களை உருவாக்கி வந்தான். ஒலி வடிவில் அமைந்த பேச்சு மொழியை, எழுத்து வடிவில் மாற்றிக் காட்டினான்! ஒலியின் ஓசைக்கு ஏற்ப கொடுக்கப்படுகிற வரிவடிவமே எழுத்து என்றான். எழுதப் பெறுவதை எழுத்து என்றும், பேசப் பெறுவதை பேச்சு என்றும், இதற்கு உதவ எழுத்துக்களையும், இலக்கண வரையறை செய்து சத்தத்தை மெருகூட்டினான். குறைந்த ஓசையைக் கொண்ட எழுத்தை குறில் என்றும், நீண்ட ஓசையைக் கொண்ட எழுத்தை நெடில் என்றும் வகைப்படுத்தினான். பாடல்கள், உரைநடை என பரிணாம வளர்ச்சி கண்டான்.

ஔவை மூதாட்டி, தமிழ் களஞ்சியமாகத் திகழும் விநாயகர் அகவலில்,

“சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி

சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி” என்று எழுதியிருப்பார். இப்போது இந்த வரிகளை நோக்குங்கால் சைவ சித்தாந்தமே தெளிவாகிறது.

உயிர்களின் சத்தமே சிவனின் மூலாதாரம். சத்தம் தோன்றுவதற்கு பேருதவி புரிவது சிந்தை!

“சித்தமெல்லாம் எனக்கு சிவ மயமே - உன்னை

சேவித்த கரங்களுக்கு இல்லை பயமே!” என்ற பாடல் நம் வினாவிற்கு விடை அளிப்பது போல் இருக்கிறது அல்லவா!

மொத்த உலகமும், மொத்த உயிர் இனங்களும் இடும் சத்தம் அளவிடற்கரியன.

இடி - மின்னல் - மழை - சூறாவளி புயல் காற்று - அருவி சத்தம் - கடல் அலை இப்படி பெரும் சத்தங்கள், பெரும் முழக்கங்கள் கூட படைத்தவன் அருளால் தான். இல்லை எனில் மௌனமாகி விடுகின்றன. ஆவேசமோ - ஆர்ப்பரிப்போ எல்லாம் இறைவன் நினைத்தால் தான். இறைவனை மீறி எதுவுமே நிகழாது. நிகழ்வதும் இல்லை. கடல் - கோள்கள் - நில அதிர்வு - பெரும் புயல் - பெருமழை வெள்ளம் என அணிவகுத்து சத்தமிட்டாலும், இறை சித்தத்தில் ஓர் முடிவு ஏற்பட்டுவிட்டால் அனைத்தும் அமைதியாகி விடுகின்றன. இயற்கையின் வழியாக இறைவன் நமக்கு உணர்த்தும் உன்னத ஞான பாடம் இதுவே. சத்தத்தில் சதாசிவத்தையும், சித்தத்தில் சிவமகா மந்திரத்தையும் ஒன்றி வாழ்ந்தால் ஒரே பரம்பொருளான சர்வேஸ்வரனின் மலர்க்கருணையை பெறலாம்.



# மகான் ஷீர்டி சாய்பாபா உண்மை பக்தி!

வடக்கே பாந்த்ரா என்ற ஊரில் உள்ள பலராம் மாங்கர் என்ற செல்வந்தரின் மனம் தனது தீவிர பக்திக்குரிய ஷீர்டி சாய்பாபாவைச் சுற்றி, சுற்றியே வந்து கொண்டிருந்தது. அன்று சமீபத்தில் அவர் மனைவி திடீரென உடல் நலக்குறைவால் இறைவனடி சேர்ந்து விட்ட துக்கத்தையும், பெரும் இழப்பையும் ஈடுகட்ட, அவர் மகான் பாபாவை தரிசித்து தொண்டு புரிய வேண்டும் என்ற ஓயாத சிந்தனையிலேயே எப்பொழுதும் இருக்க நேர்ந்தது. இந்த தன் விருப்பத்தை பல முறை தன் பிள்ளை, மருமகளிடம் அவர் தெரிவித்தும், அவர்களுக்கு அவரை தனியே அனுப்ப தயக்கமாக இருந்தது.

ஒருநாள் தன் தகப்பனாரின் சோக நிலையைக் கண்டு, அதற்கு ஒரே நிவாரணம், அவருக்கு ஷீர்டி பயணம் தான் என்று அப்பிள்ளை உணர்ந்து பலராமிடம், “அப்பா! நீங்க உங்க இஷ்டப்படியே மகான் பாபா தரிசனம் பெற ஷீர்டிக்குச் செல்ல சம்மதிக்கிறேன். ஆனா, நீங்க ஒரேயடியாக அங்கேயே தங்கிவிட வேண்டாம். உங்களை ரொம்ப நாள் பிரிந்து நானோ, உங்க மருமகளோ, பேரன்களோ இருக்க முடியாது. சரியா?” என்று நிபந்தனை விதித்து, அவருடைய ஷீர்டி பயண ஏற்பாடுகளை உடனடியாகச் செய்து கொடுத்தான்.

நாலைந்து நாட்களில் தன்னுடைய மூட்டை, முடிச்சுகளுடன் பாந்த்ரா நகரை விட்டு பலராம் ஷீர்டிக்கு கிளம்பி விட்டார். அங்கே வாடா ஒன்றில் தங்கிக் கொண்ட பலராம், மறுநாளே மகானின் தரிசனத்தைப் பெற்று அகமகிழ்ந்தார். அவர் மீது முன்பே கருணை கொண்டிருந்த பாபா பலராம் விரும்பியவாறே அவரை தனக்குத் தொண்டுகள் புரிய அனுமதித்து விட்டார்.

தன் குடும்பத்தினர் மீது அளப்பரிய பாசம் கொண்ட பலராமிற்கு அவ்வப்போது அவர்களுடைய ஞாபகம் வரும். ஆனால் ஒரு தடவை பாந்த்ரா போய்விட்டால் மீண்டும் ஷீர்டி திரும்பி வர, அவர்கள் யாரும் அனுப்பி வைக்க மாட்டார்கள் என்ற அச்சம் தோன்றி, அந்த எண்ணத்தை விட்டு விடுவார் அவர்.

சில மாதங்கள் பாபாவின் சேவைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட பலராமிற்கு நாட்கள் ஓடியதே தெரியவில்லை. அன்றொரு நாள் மகான் தரிசனத்திற்கு வந்திருந்த கூட்டத்தினரை அவர் ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கையில், மகான் அவரை தன்னருகே வரச் செய்தார்.

“சொல்லுங்கள் ஐயனே!” என பணிவுடன் தன்னிடம் கோரிய பலராமை சில வினாடிகள் உற்று நோக்கி விட்டு மகான் பாபா, “பலராம் மாங்கரே! இன்றோடு நீர் ஷீர்டி மசூதி வாசத்தை முடித்துக் கொள்ளலாம். அடுத்து முன்பே உங்களுக்கு அறிமுகமான மச்சீந்திர் கட் ஊர் உங்களுக்காக காத்திருக்கிறது! பிடியும் இந்த பனிரெண்டு ரூபாயை! அவ்வூர் செல்லத்தான் இந்த பயண கட்டணம்” என்று சர்வ சாதாரணமாகக் கூற அதிர்ந்து போனார் பலராம்.

“பகவானே! ஏன் இந்த திடீர் ஏற்பாடு? யான் ஏதேனும் தங்கள் சேவையில் பிழைபுரிந்து விட்டேனா? எஞ்சிய வாழ்நாளை தங்களிடம் பணிபுரிந்தே கடைத்தேற நோக்கம் கொண்டுதானே, இங்கு வந்து தஞ்சமானேன். தங்களுடைய உத்திரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்” என கண்ணீர் மல்க, பாபாவிடம் பிரார்த்தனை செய்தார் பலராம். அதற்கு எவ்வித பதிலும் தராமல் மகான் வாத்சல்ய முகத்துடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த பார்வையின் தீட்சண்யத்தால், ஒரு கணம் யோசித்த பலராம், காரணமின்றி பாபா இப்படிக் கட்டளையிட மாட்டார் என்று உணர்ந்து கொண்டு, “ஐயனே! தங்கள் சித்தப்படி இன்றே ஷீர்டியை விட்டு அவ்வூருக்கு பயணமாகிறேன். இதுவரை தாங்கள் எனக்கு அருளி வந்த கருணையை, அன்பு வெள்ளத்தை என் இறுதிநாள் வரை வழங்கி வந்தால் அதுவே போதும்” என துக்கம் தொண்டையை அடைக்க, நெகிழ்ச்சியுடன் கூறி, மகான் அளித்த ரூபாயையும் பெற்றுக் கொண்டு, நமஸ்கரித்து விட்டு அரை மனதுடன் விடை பெற்றுக் கொண்டார்.

பலராம் பத்தடி தூரம் நடந்திருப்பார். அதற்குள் “பலராம் மாங்கரே, என்னிடம் வாரும்!” எனக் கூப்பிட்ட பாபா, “நீர் பூமியில் எப்பகுதியில் வாழ்ந்தாலும் நான் உம்மீது செலுத்தும் கருணை எள்ளளவு கூட குறையாது. புரிந்ததா? அப்புறம் மச்சீந்திர் கட் வாழ்க்கையில் உமது எண்ணம் எப்போதும் இறை சிந்தனையில் தான் இருக்கணும். அத்தோடு மூன்று வேளை தியானமும் நித்திய கடமையாக இருக்க வேண்டும். சரியா!?” என புன்னகையுடன் கூறி ஆசீர்வதித்து பலராமை அனுப்பி வைத்தார்.

மச்சீந்திர் கட் ஊருக்கு வந்துவிட்ட பலராம், மகான் பாபா வழிகாட்டி அருளியபடியே இறை சிந்தனையோடு, தினமும் தவறாது மூன்று வேளை தியானத்தையும் அர்ப்பணிப்போடு செய்து வரலானார். அதன் நற்பலன்களை உணரும் வகையில் அவருடைய மனம் படிப்படியாய் லேசாகி, பரவச நிலையும் கூட தன்னைப் பற்றுவதை உணர்ந்தார். ஓஹோ! காரணமில்லாமல் மகான் மச்சீந்திர் கட்டுக்கு தன்னை அனுப்பவில்லை என்று ஆனந்தித்த அவர், மானசீகமாய் நன்றியையும், நமஸ்காரத்தையும் சமர்ப்பித்தார், ஷீர்டி மகானுக்கு!

அன்றொருநாள் தன் இருப்பிடத்தில் கடும் தியானத்தில் ஈடுபட்டிருந்தார் பலராம். அப்பொழுது தோன்றிய ஒரு பேரொளியில் ஷீர்டி மகான் காட்சியருளி, “பலராம்! உம்மை நான் ஷீர்டியை விட்டு இங்கு ஏன் அனுப்பினேன் தெரியுமா? என்னிடம் வந்த தருணத்தில் உமது மனநிலை சோகத்தில் மூழ்கி எப்போதும் அலைபாய்ந்து கொண்டே இருந்தது. சரியான மனப்பக்குவம் நீர் அடையவே, இந்த மச்சீந்தர் கட் பயணம். புரிந்ததா?” என கருணையுடன் கூறிவிட்டு, “நீர் ஷீர்டியில் இல்லாவிடில் என்ன, நான் இங்கே உம்மை பார்க்க வரவழைத்து விட்டதல்லவா நீர் என் மீது கொண்டுள்ள ஆழ்ந்த பத்தி!” எனக் கூறி புன்சிரிப்புடன் மறைந்து விட்டார்.

மச்சீந்தர் கட் பயணம் பலராமிற்கு மனநிறைவு தந்து கொண்டிருக்க, ஒருநாள் அவருக்கு தன் குடும்ப நினைவு வந்து பாசம் தலைதூக்க, இரண்டொரு நாளில் பாந்த்ரா ஊருக்குச் செல்ல தன் மூட்டை, முடிச்சுகளுடன் கிளம்பிவிட்டார், பூனே புகைவண்டி நிலையத்திற்கு!

விரைவில் ஏதோ இந்து பண்டிகை வர உள்ளதால் பூனே புகைவண்டி நிலையம் முழுவதும் கூட்டமயமாக இருந்தது. டிக்கெட் கவுண்டரைப் பற்றி கேட்கவே வேண்டாம். க்யூ வரிசையில் நூற்றுக் கணக்கானவர்கள் தங்கள் முறைக்காக காத்துக் கிடந்தனர். இதெல்லாம் பார்க்க, பலராமிற்கு தலை சுற்றியது. அவர் புறப்பட வேண்டிய புகைவண்டி இன்னும் கொஞ்ச நேரத்தில் பிளாட்பாரத்துக்கு வர இருந்தது.

பலராம் அந்த க்யூவில் கடைசி ஆளாக நின்றுகொண்டு “மகான் பாபாவே நான் என்ன செய்வேன்?” எனத் தவித்தவாறு இருந்த சமயத்தில் எங்கிருந்தோ விரைவாக அவரருகே வந்த விவசாயி தோற்றத்தில் காணப்பட்ட ஒரு நபர், “அய்யா! நீங்க எந்த ஊருக்கு போகணும்?” என அக்கறையுடன் கேட்டார். முன்பின் பலராம் பாத்திராத முகமாகக் கேட்டவர் இருந்தாலும், தன்னுணர்வின்றியே அவர், “தாதர் போகணும்” என பதில் சொன்னார்.

“அப்படியா!” என வினாவை எழுப்பிய அந்த நபர், “அய்யா! சற்று முன்பே நான் தாதர் செல்ல டிக்கெட் வாங்கி விட்டேன். எனக்கு வேறொரு அவசர வேலை வந்து விட்டதால் நான் என் பயணத்தை ரத்து செய்யும் நிலையில் இருக்கிறேன். பிடியுங்கள் டிக்கெட்டை” என்று கூறிய நபர் பலராமின் நீட்டிய கையில் அதை வைத்து விட்டு, பலராம் தன் பையிலிருந்து பயணத் தொகையை எடுப்பதற்குள் வேகமாய் நடந்து அங்கிருந்த கூட்டத்தினர் இடையே புகுந்து மாயமானார்.

டிக்கெட் பெறும் வரிசையில் நின்று பலராம் அதனை கவுண்டரில் வாங்கியிருந்தாலும், கொஞ்ச நேரத்தில் புகைவண்டி நிலையத்தில் வர இருந்த தாதர் வண்டியை பிடிக்க முடியாத நிலையில் இப்படி அறிமுகம் இல்லாத ஒருவர் பயணச்சீட்டுக்குரிய கட்டணத்தைக் கூட பெறாமல் டிக்கெட்டை திணித்து மறைந்து போனது எல்லாம் நம்ம பாபாவின் கருணைதான் என அவர் தன் மனதிற்குள் வியந்து போனார்.

அதே சமயம் பலராம் செல்ல வேண்டிய தாதர் வண்டி பிளாட்பாரத்தில் வேகமாய் வந்து கொண்டிருந்தது. உடனே அதில் ஏறி அமர்ந்து விட்ட பலராமின் காதில் மட்டும் விழும் வகையில் மகான் பாபாவின் குரல் இப்படி மொழிந்தது, “அப்பனே! திருப்தியா? உன் பயணம் இனிதாகட்டும்!” என.

தான் நினைத்தபடி பாபாவே அந்த விவசாயி தோற்றத்தில் வந்து தனக்கு பயணச்சீட்டை அளித்துள்ளார்” என அவர் நினைத்து நன்றியுணர்வுடன் மெய்சிலிர்த்துப் போனார். பாந்த்ரா இல்லத்துக்கு தன் தந்தை ஆச்சர்யத்தில் ஆழ்த்தும்படி வந்துவிட்டாரே என பலராமின் பிள்ளையும், பேரப்பிள்ளைகளும், மருமகளும் அவர் மீது பொழிந்த பாச மழையில் நனைந்தார் பலராம்! அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகிச் சொட்டியது.

தன் ஆசை தீர, குடும்பத்தினருடன் சில நாட்களைக் கழித்து விட்ட பலராம் மாங்கருக்கு மகான் பாவாவின் நினைவு வந்துவிடவே, குடும்பத்தினரின் பூரண சம்மதத்தை பெற்று, பாந்த்ராவிலிருந்து ஷீர்டிக்கு கிளம்பினார்.

பல்லாண்டுகள் ஷீர்டி மகானுக்கு பணிவிடைகளை வழக்கம் போல் சிறப்புடன் செய்து வந்த பலராம் மாங்கர் தனது வயது மூப்பு காரணமாக ஒரு புண்ணிய நாளில் இறைவன் திருவடியை அடைந்து விட்டார்.

உண்மை பத்தி கொண்டு தன் குருவை சரண்புகும் எவரும் நற்பேற்றைத் தவிர வேறெதுவும் அடைவதில்லை!

**மகான் ஷீர்டி பாபாவின் வாக்கு!**

“என்னை நம்பி சரண் புகுந்தோர்க்கு அவர்கள் எங்கிருந்தாலும் என் துணை முன்வந்து நிற்கும்!”

**ஜெய் சாய்ராம்**



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்



# ஆன்மிக கிசுகிசு

“மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்” என்பது உண்மைதான். முற்றிலும் உண்மைதான். ஆனால் அதே நேரம், “மனம் செம்மையாக ஆக மந்திரம் ஜெபிக்க வேண்டியது அவசியம்!” இதை மறந்து விடக்கூடாது.

ஒரு குதிரையில் இரண்டு பேர்கள் செல்ல முடியும். ஆனால் இரண்டு குதிரைகளில் ஒருவர் செல்ல முடியாது. அதுபோல ஆன்மீக சாதனைக்கு, பரமார்க்கத்திற்கு ஏக குருவே சிறந்தது.

பற்றற்று இருக்க வேண்டும் என்பார்கள். ஆனால் அதுவல்ல. பற்றில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று இகப்பற்று. மற்றது பரப்பற்று. பரமார்க்கத்திற்கு இகப்பற்று ஆகாது. அதே நேரம் பரப்பற்று இருக்க வேண்டும். பரத்தின் மீது பற்று இருந்தால் தான் பரத்திற்குச் செல்ல முடியும். இந்த இகத்திலுள்ள எல்லோரிடமும் ஏதாவது ஒரு பற்று இருக்கும். இருக்க வேண்டும். அது ஒன்று இகப்பற்றாக இருக்கும் அல்லது பரப்பற்றாக இருக்கும்.

பைத்தியத்திற்கு மட்டும் இரண்டு பற்றும் இருக்காது!

‘வாசல்’, ‘ஓட்டை’ என்ன வித்தியாசம்?

வாசல் என்பது திறக்கவும் செய்யும் மூடவும் செய்யும். போகவும் முடியும் வரவும் முடியும். இரண்டு வழிப்பாதை போன்றது. ஆனால் ‘ஓட்டை’ ஒரு வழிப் பாதையாகும்! வெளியேறுவது மட்டும் தான்!

நமது தேகத்தைப் பற்றி பேசும் போது,

“இது ஓட்டை வீடு, ஒன்பது வாசல் என்பார்கள்” ஒன்பது வாசல்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஓட்டை? அது ‘பிரம்மரந்திரம்’

‘எது’, ‘எதில்’ ஒடுங்குகிறதோ ‘அது’, ‘அதிலிருந்து’ தான் வெளிப்படவும் செய்யும். “பிறப்பும், இறப்பும் நியாயத்தில் ஒடுங்குகிறது!” என்று ஞான கீதை பேசுகிறது. எனில் பிறப்பும், இறப்பும் நியாயத்திலிருந்து தான் வெளிப்பட்டிருக்க வேண்டும். எனில் பிறப்பிற்கும், இறப்பிற்கும் அதிபதி ‘நியாயம்’ ஆகும். அதாவது ‘நியாயாதிபதி’ ஆவார். எனவே பிறப்பு பற்றியோ, இறப்பு பற்றியோ குறை கூறுவது பெரும் தவறாகும். இவை இரண்டும் நியாயப்படி நடக்கின்றன. அதனால் தான் பிறப்பு, இறப்பு பற்றி யார் எப்படி தூற்றினாலும், சாபமிட்டாலும் அவைகள் ஒன்றும் ஆவதில்லை. சிரஞ்சீவிகளாக இருக்கின்றன.

நம்மிடம் இரண்டு switchகள் உண்டு. மேலே நெற்றியில், புருவ மத்தியில் ஒரு switch உண்டு. இன்னொரு switch கீழே மர்ம ஸ்தானத்தில் இருக்கிறது. இரண்டு switchகளில் ஏதாவது ஒன்றுதான் ON ல் இருக்கும். ஒரே சமயத்தில் இரண்டு switch களும் ON ஆகாது.

கீழேயுள்ள switch ஆனது ONல் இருந்தால் மேலே உள்ள switch ஆனது OFF ஆகிவிடும். வேலை செய்யாது. ஆனால் ஆன்மீக சாதனை செய்து, அதில் வெற்றி பெற்றால் மேலே உள்ள switch ஆனது ON ஆகிவிடும். கீழே உள்ளது தானாகவே OFF ஆகிவிடும்.

தன்னம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கை வேண்டும் என்று மக்கள் அடிக்கடி பேசுவார்கள். ‘தன்’ என்றால் சுயம்பு என்று பொருள். சுயம்புவாக இருப்பது ‘சிவம்’ மட்டுமே! ‘மெய்ப்பொருள்’ மட்டுமே! ‘பிரம்மம்’ ஒன்றே சுயம்புவாக இருக்கிறது!

ஆகவே ‘தன்னம்பிக்கை வை!’ என்று சொன்னால் ‘இறைவன் மீது நம்பிக்கை வை!’ என்றே பொருளாகும்.

நம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறை தீர்ப்பு அல்லவா!

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்!

**ஹரிதா**

# நாயன்மார் வரலாறு

# மூர்க்க நாயனார்

# அடியார்கள் பசிபோக்க...






சைவ சித்தாந்தமே அடியவர்களை அடிப்படையாய்க் கொண்டதாகும். இங்கு ஆண்டவன் மீது காட்டப்படுகின்ற அதே அளவிற்கான பக்தியும், அன்பும் அடியவர்கள் மீதும் காட்டப்படுவது இறைவழிபாடாகவே இன்றியமையாத ஒன்றாய் கருதப்படுகிறது.

இறைவன்பால் வைத்த பற்றினைக் காட்டுவதற்காக, சிலையெழுப்புதல், ஆலயம் அமைத்தல் போன்ற திருப்பணிகளை பலரும் செய்துள்ளனர். சிவனின் அருளைப் பெற, சிவனடியார்களுக்கு சேவை செய்தலே அந்த ஆதிசிவனின் அன்பைப் பெறுகின்ற ஒரே வழி என்றே, அடியார்களின் உருவத்தில் ஆண்டவனைக் காணும் பெரும்பேறு பெற்ற பலர் வாழ்ந்த மண் இது!

எப்பாடு பட்டேனும் இறைப்பணி செய்தே தீரவேண்டும் என்ற விழைவோடு அரும்பெரும் தொண்டாற்றிய தூய தொண்டர்கள் யாவரும் நாயன்மார்கள் என்ற சிறப்பினைப் பெற்று வணங்கத்தக்க நிலையினை சிவனருளால் பெற்றிருக்கிறார்கள்.

இவர்களில் சிலர், தான் செய்யும் செயல் என்ன? தொழில் என்ன என்றெல்லாம் சிந்தியாமல் தங்களது நோக்கம் ஒன்றே பிரதானம்; அது எவ்வகையிலும் தடைபடக் கூடாது என்கிற எண்ணம் கொண்டோராய் இருந்துள்ளனர். இதனை பக்தியின் உச்சகட்டம். அதாவது முற்றிய நிலை என்றும், இறைவனின் திருவடி நிழலே துணை என்றும் எண்ணி தொண்டாற்றிய ஒருவரைப் பற்றி இங்கே காண்போம். அவர்...

திருவேற்காடு என்னும் சீர்மிகு பதியில் தோன்றி, சிவனின் சிந்தையை ஆட்கொண்ட சிறப்புமிகு தொண்டர் பெயர், மூர்க்கன் என்பதாகும். மூர்க்கத்தனம் என்கிற குணம் பலராலும் அஞ்சப்படுவதாக இருந்தாலும் கூட இந்த மூர்க்கரின் குணம், சிவத்தொண்டு - அடியார் சேவை என்கிற பக்தி நோக்கத்தில் நிலைத்திருந்தது!

காலிலே எதற்கு பாதணிகளை அணிகின்றோம்?... கல்லோ முள்ளோ காலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக் கூடாது என்று தானே!? சரி... கால்களிலே ஏதோ பாதிப்பு என்றால் என்னாகும்? கண்கள் கலங்கும்; கண்ணீர் பெருகும்; மனது வலிக்கும்!

இதனைத்தான் மூர்க்கர் தனது சிவபக்தியின் அளவுகோலாக வைத்திருந்தார்! அதாவது...

சிவனடியார் யாவரும் தங்களை இறைவனின் பாத தூளிகைகளாகவே எண்ணி, எங்கும் இறைவனைக் காண்பவர்கள். அந்த சிவனடியார்களுக்கு ஓர் துன்பம் நேர்ந்ததெனில், கண்கள் கலங்குவது போல இறைவனின் கண்களும் மனமும் சோகத்தில் ஆழ்ந்து விடும். அப்படி, இறைவன் துன்பப்பட்டால், உள்ளம் குளிரவேண்டும் என்றால்... இறைவனின் திருப்பாதங்களாய் உலவுகின்ற அடியார்களுக்கு எவ்வித துன்பமும் நேராமல் அவர்களைத் தாங்க வேண்டும்; அடியவர்கள் இன்புற்றிருந்தாலே போதும், அந்த ஆண்டவனின் மனம் குளிரும்! கருணை மழை

பொழிவான் என அறிந்து, சிவனடியார்களை போற்றி வணங்கி, சேவையாற்றி வந்தார் மூர்க்கர்!

மூர்க்கருக்கு சுமாரான வசதி வாய்ப்புகள் இருந்தது. வயல்வெளியில் விளைகின்ற தானியங்கள் அனைத்தும் இறைசேவைக்கே என்னும் எண்ணத்தோடு, தன் வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்டவரானார்.

அடியார்களுக்கு அமுது படைப்பதற்காகவென்றே பல சமையல்காரர்கள்; பக்திநெறி மாறாமல் - மீறாமல் உணவு சமைப்பதற்கு என்றே அவரிடம் பணியாற்றினார்கள். நாடிவரும் அடியார்கள் எத்தனை பேராயினும் அத்தனை பேருக்கும் அரும்பசியாற்ற இடைவிடாது உழைத்தனர்.

காலைப் பொழுதிலேயே சிவபூஜைகள் செய்து முடித்து, அடியார்களுக்கு சமைப்பதற்காக பொருட்களைக் கொடுத்து ஏற்பாடு செய்துவிட்டு, ஊரின் எல்லையில் போய் நின்று கொள்வார் மூர்க்கர்! ஊருக்குள்ளே நுழையும் அத்தனை சிவனடியார்களையும் பணிந்து, வணங்கி தன் மாளிகைக்கு அழைத்து வருவார்.

அவர்களுக்குத் தேவையான உபசாரங்கள் எல்லாம் குறைவின்றி செய்யப்படும். அனைவரையும் அமரவைத்து உணவருந்தச் செய்வார். இப்படி... எத்தனை அடியார்கள் வந்தாலும் அனைவரையும் வரவேற்று, அறுசுவை உணவளித்து, அனைவரும் பசியாறிய பின்னர் இறுதி பந்தியில் தான் உண்ணுவார்! இது என்றோ ஒருநாள் நடக்கின்ற நிகழ்வு அல்ல; பல ஆண்டுகளாக ஒரு நாளும் மறவாமல் - மாறாமல் நடந்து வரும் நிகழ்வாகும்! இறைவனின் இன்னருளால் இந்த நிகழ்வு இனிதே நடந்து வருவதை எண்ணி உள்ளம் மகிழ்ந்திருந்தார், மூர்க்கர்!

காய்கறிகள், அரிசி போன்ற சமையலுக்குத் தேவையான அனைத்தையும் சமையல் காரர்களுக்கு எடுத்துக் கொடுக்க கட்டளையிட்டுவிட்டு, தன் உதவியாளர்களுடன் ஊரின் எல்லையில் அடியார்களின் வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பார்.

அடியார்களுக்காக தினந்தினம் இப்படி இவர் காத்திருப்பது வழக்கமான ஒன்றுதான். அப்படிக் காத்திருந்து எதிரே வருகின்ற அடியார் ஒருவரோ அன்றி பலரோ... அவர்களைக் கண்டுவிட்டால், அந்த கயிலைநாதனே தன் கண்முன்னால் வருவதைப் போல் பூரிப்படைவார்!

அவர்களை பணிவுடன் வணங்கி அழைத்து வந்து உபசாரங்கள் செய்து, அவர்கள் பசியாறி, களைப்பு நீங்கிச் செல்லும் வரை அந்த இறைவனையே அடியார் உருவில் கண்டு அகமகிழ்வார்! ஆனால்...

இவர், பெருந்தனக்காரரும் அல்ல; சொத்து சுகம் பலவற்றுக்குச் சொந்தக்காரரும் அல்ல! சாதாரணமான பிரஜை. ஏதோ, தனக்கென்று கொஞ்சம் நிலமுண்டு. அதில் கிடைக்கும் நெல்லும் வருவாயும் அடியார்களின் பசிபோக்க பயன்படவேண்டும் என்கிற இவருடைய நல்லெண்ணத்திற்கு பங்கம் ஏற்படாமல் இறைப்பணி தொடர்ந்தது.

‘குந்தித்தின்றால் குன்றும் மாளும்’ என்பது சான்றோர் வாக்கு! இது இந்த சிவனடியாரையும் விட்டு வைக்கவில்லை!

ஒருநாள்... காலை நேரத்தில், சமையல் வேலைகளைத் தொடங்கி வைத்துவிட்டு, வழக்கம்போல் ஊர் எல்லை நோக்கி புறப்பட யத்தனித்தார், மூர்க்கர்!

அப்போது பணிவுடன் ஓடிவந்த சமையல்காரர்களின் தலைவர், “அய்யா... இன்னும் இரண்டு நாட்களுக்கு மட்டுமே அரிசி முதலான சமையல் பொருட்கள் இருக்கும்... அவை தீருவதற்குள் அடுத்தடுத்த நாட்களுக்கான அனைத்தையும் வாங்கியாக வேண்டும். தங்களுக்கு இதனை நினைவூட்டவே தெரிவிக்கின்றேன்!” என்றார்.

இதனைக் கேட்டு மூர்க்கர் ஒரு கணம் திகைத்து நின்றாலும், அடுத்த கனமே அவரது சிந்தனை இன்று எத்தனை அடியார்கள் வருவார்கள்?! என்பதை நோக்கியே இருந்தது. அதனால் “அவ்வளவு தானே!? அதை நான் பார்த்துக் கொள்கிறேன்; இறைவன் இருக்கின்றான் எனக்கு உண்டானதைக் கொடுக்க” என்று கூறி சிரித்தபடியே நடந்தார்.

அன்றும் நிறைய அடியவர்கள் வந்தார்கள்! ஏனோ தெரியவில்லை... வழக்கத்திற்கு அதிகமான அடியார்கள் வந்தவண்ணம் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் விருந்து, உபசாரம் என அமர்க்களப்படுத்தி,

அடியார்களின் அன்பினையும் ஆசியையும் பெற்றுக் கொண்டார். இரண்டு நாட்கள் வரவேண்டிய பொருட்கள், இன்றோடு தீர்ந்து விட்டன! நாளை...?



நாளை... என்னும் சொல் விஸ்வரூபமாய், வினாக்குறிபோல் அவரது நெஞ்சைப் பிசைந்தது! "என்ன செய்வது?... என்ன செய்வது? உணவுப் பொருட்களோ, பொற்காசுகளோ... கையிருப்பில் இல்லை. இத்தனைக் காலமாய் செய்துவந்த அரும்பணி இன்றோடு முடிந்து விடுமா? என் இறைப்பணிக்கு இன்று முடிவுரை எழுத, சிவன் சித்தம் கொண்டானா? எனது தூய தொண்டு, ஆண்டவனுக்கு சலித்து விட்டதா? இறைவா! இது எனக்கல்ல; என்னுடைய தொண்டிற்கு நீ வைக்கும் சோதனையா? இந்த சோதனையால் நான் துவண்டு போவேனா? கூடாது!.. முடியாது!.. எனது சிவத்தொண்டுக்கு அந்த சிவனே தடைபோட்டாலும் தகர்த்தெறிவேன்!... என்னை சிவத்தொண்டாற்றப் பணித்தவன் இறைவன்!... நான் தொண்டு செய்தே பழகிவிட்டவன். நான் நிறைவேற்றி வரும் இத்தொண்டு என் இறுதி மூச்சு உள்ளவரை தொடரும்! அதனை தொடர்ந்து செயல்படுத்த எந்த எல்லைக்கும் செல்வேன்!... எப்படிப்பட்ட சோதனைகளையும் வெல்வேன்!... எப்படிப்பட்ட பாதகம் செய்தேனும் அடியார் துயர் போக்க, அவர்தம் பசியாற்ற... எதை வேண்டுமானாலும் செய்வேன்! இதில் ஏதும் என் செயல் அன்று எல்லாம் இறைவன் செயல்! அவனது ஆணை!"

இப்படி உள்ளத்திலே சங்கல்பம் செய்துகொண்டு படுக்கையை நோக்கி சென்றார். "நாளை என்ன செய்யப் போகிறாய்? எப்படி அரும்பசி போக்குவாய் நீ? அடியார்கள் வருவார்களே... அவர்களுக்கு உணவளிப்பது எங்ஙனம்?" என்கிற சிந்தனை படுக்கையில் முள்ளாய் பரவிக்கிடக்க... மாளிகையை விட்டு வெளியேறி தனியாய் நடந்தார்.

அந்த இரவு வேளையில் பல தெருக்களைக் கடந்து, ஊரின் எல்லைவரை வந்துவிட்டார். இங்கே ஏன் வந்தோம்? எதற்காக வந்தோம் என்ற எண்ணமே அவர் மனதில் எழவில்லை! நாளை அடியார்களுக்கு உணவளிக்க தன்னிடம் ஒன்றுமே இல்லையே! என்ன செய்யலாம்? என்னும் சிந்தனையே மனப்பரப்பு முழுவதும் விரவிக் கிடந்தது.

ஊரின் எல்லைப்பகுதி இருளில் மூழ்கிக் கிடந்தது. ஏன்! விளக்குகள் கூட எரியவில்லை. அப்போதுதான் கூர்ந்து கவனித்தார்! எண்ணெய் சட்டியுடன் வந்த ஊர்க்காவல் புரியும் பணியாள், விளக்குக் கம்பத்தில் ஏறி, எண்ணெயை விளக்கில் ஊற்றி, பற்ற வைத்தான்! இப்போது சாலை ஓரளவுக்கு தெளிவாகத் தெரிந்தது.

காவல் புரிவோன், விளக்குக் கம்பத்திலிருந்து கீழே இறங்கினான். அப்போது... யாரோ இரண்டு பேர்கள் அவசரமாக ஊருக்குள் வந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்துவிட்ட காவலன் குரல் கொடுத்தான்... "யாரது... இந்த நேரத்துல... எங்கே போய் வர்றீங்க?" குரலில் சற்றே அதட்டல் தெரிந்தது.

வந்தவர்களில் ஒருவன், "யாரு?... பெரியசாமி காவலரா?" என்றான்.

"ஆமா... நீங்க...?" என்றான்.

"நான்.. மாடசாமி மகன்... பிச்சாண்டி" என்றான் வந்தான்!

சற்றே நிம்மதியடைந்த காவலன், "ஓ! பிச்சாண்டியா... இந்த நேரத்துல எங்க?..." என காவலன் இழுக்க,

"கும்பகோணத்துக்கு போயிட்டு வரோம்"

"சரி.. சரி.. வெரசா ஜாகைக்கு போங்க" என்றவாறு அடுத்த விளக்குக் கம்பத்தை நோக்கி எண்ணெய் சட்டியுடன் சென்றான்.

போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்தியபடி மூர்க்கர் அவர்கள் தன் அருகில் வரும்வரை காத்திருந்தார். வந்ததும் எதிரில் போய் நின்றார். வந்த இருவருமே அவரை அடையாளம் கண்டு கொண்டு வணங்கினர்! பதில் வணக்கம் சொன்ன மூர்க்கர், "இந்த நடுநிசியில் இப்படி வரலாமா? கும்பகோணத்திலேயே ஏதாவது ஒரு மண்டபத்திலோ, சத்திரத்திலோ படுத்திருந்துவிட்டு, விடிந்ததும் எழுந்து வரவேண்டியது தானே!?" என கனிவுடன் கேட்டார்.

தயக்கத்துடன், தலையைச் சொறிந்தபடி பிச்சாண்டி சொன்னான், "மன்னிக்க வேண்டும் அய்யா... நீங்கள் நல்ல காரியங்கள் செய்து வருகின்றீர்கள்! எதற்குமே அஞ்சாமல் துணிவோடும் இறையருளோடும் இருப்பவர் நீங்கள்! ஆனால் நாங்கள்..." என நிறுத்தினான்.

"என்ன... சொல்லப்பா?..." மூர்க்கர்.

“பொழுதெல்லாம் கும்பகோணதைச் சுற்றிவிட்டு, கடைசியாக... அங்கே சிலர் ஆடிக்கொண்டிருந்த சூதாட்டத்தை வேடிக்கை பார்க்கப் போய், பின் விளையாடிவிட்டு செலவுக்கென்று வைத்திருந்த பணத்தில் பெரும் பகுதியை தோற்று விட்டோம். அவர்களோ முரடர்கள். மிரட்டவும் செய்கிறார்கள். இருக்கும் கொஞ்ச பணத்தைக் காப்பாற்றிக்கொள்ள உடனே புறப்பட வேண்டியதாகிவிட்டது. இரவில் கூட அவர்களின் விளையாட்டு தொடர்கிறது. எத்தனை பேர் இருப்பதையெல்லாம் இரவுக்குள் இழக்கப் போகிறார்களோ தெரியவில்லை அய்யா!... நாங்கள் வருகிறோம்” என்றபடி விடை பெற்றுச் சென்றனர்.

சுமார் இரண்டு நாழிகை கடந்திருக்கும்! கும்பகோணம் சத்திரம் ஒன்றில் ஆர்ப்பாட்டமாக நடந்து கொண்டிருந்தது சூதாட்டக் கச்சேரி! அருகில் நின்றபடி நடப்பதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார், மூர்க்கர்! தன்னை யாரும் எளிதில் அடையாளம் காண முடியாதவாறு தலைப்பாகை... முகம் மறைக்கும் போர்வை என உன்னிப்பாக ஆட்டத்தை கவனித்துக் கொண்டிருந்தார்... அல்ல... அல்ல... கணித்துக் கொண்டிருந்தார்.

அடுத்த ஆட்டம் தொடங்கியது! ‘நானும்...!’ என்றபடி அமர்ந்தார். தன்னிடம் இருந்த பணத்தில் பாதியை பத்திரப்படுத்திக்கொண்டு, மீதியை ஆட்டத்தில் கட்டினார்!

“நெறிதவறாத ஒரு சிவத்தொண்டன், சூதாட்டத்தில் ஈடுபடலாமா? இந்த ஆட்டம்... நியாயமானதா? தர்மத்திற்கு உட்பட்டதா? தவறல்லவா? தவறு தான்!.. இல்லை, இல்லை... தவறே இல்லை! அடியார்கள் பசியாற வேண்டும்... அதற்காக எதையும் செய்வேன்!..” தீர்மானமான முடிவோடு ஆட்டத்தில் ஈடுபட்டார்!

தோல்வி! முதல் ஆட்டமே தோல்வி! ‘இறைவா’, என்றபடி கண்களை மூடி ஐந்தெழுத்தினை மனதிற்குள் அசை போட்டார்! தன்னிடம் மீதம் இருந்த பணத்தினை எடுத்து வைத்தார். இவருடன் வந்திருந்த உதவியாளரும், சமையல் கலைஞர் ஒருவரும் என்ன ஆகுமோ? என்கிற படபடப்போடு ஆட்டத்தை நின்றபடி கவனித்தார்கள்.

இரண்டாவது ஆட்டத்தில் மூர்க்கருக்கே வெற்றி! சற்றே தைரியம் கொண்டார். இறைவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, தான் பெற்ற அத்தனை பணத்தையும் கட்டினார். அதிலும் வெற்றி! தொடர்ந்து மூன்று ஆட்டங்கள்! வெற்றி மேல் வெற்றி! பணத்திற்கு மேல் பணம்!

தன் சமையல்காரரைப் பார்த்து சைகை செய்தார். அவர், பணத்தையெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டார். யார் கையிலும் பணம் இல்லை; ஆட்டம் முடிந்தது.

மூர்க்கர், “இறைவா! சூதாட்டம் தவறே என்றாலும் இதில் வெற்றிபெற நான் எந்த சூதும் செய்யவில்லை. என் இறைப்பணி தடைப்படக்கூடாதே என்றுதான் இதில் ஈடுபட்டேன்! தீயிலே வெந்துவிட்டால் தீமைகள் ஒழிந்து விடும்; அதனால் என் சமையல் காரரே பணத்தை எடுத்து தேவையானதைப் பெற்று வருவார். இந்த சூதின் மூலம் கிடைக்கும் யாவும் சிவப்பணிக்கே! இதனை நான் கையாலும் தொடமாட்டேன்”. என உறுதி எடுத்துக் கொண்டார்!

மறுநாள்... வழக்கம் போல் அடியார் கூட்டம்... மூர்க்கரை வாழ்த்தியது. அறுசுவை உணவு அடியவர்களின் அரும்பசியாற்றியது. கடைசி பந்தியில் அமர்ந்து இறுதியாக உணவுண்டார், மூர்க்கர்!

சமையல்காரர் அருகிலே ஓடிவந்து மூர்க்கரிடம், “அய்யா! நேற்றிரவு தாங்கள் வென்றெடுத்த பணத்தினைக் கொண்டு இன்று உணவளித்தோம்! இன்னும் மூன்று தினங்களுக்கு கவலையே இல்லை. அடியவர்களுக்கு அன்னம் அளிப்பது இன்னும் மூன்று தினங்கள் தொடரும்” என மகிழ்வோடு சொன்னார்.

இறைவனின் திருவருள் தனக்கு என்றும் உண்டு என்னும் நம்பிக்கையோடு இரண்டு தினங்கள் கழித்து, மீண்டும் கும்பகோணம் சென்றார், மூர்க்கர்! இறைப்பணி செய்வதற்காகவே சூதாட்டம் அவரை சுண்டியிழுத்தது.

முதல் ஆட்டத்தில் முற்றிலும் தோல்வி! அடுத்தடுத்த ஆட்டங்களில் ஆண்டவன் அருள் மூர்க்கரின் பக்கமே நின்றது! வென்றார்! தொடர் வெற்றி!

பார்த்தார்கள், பரம்பரை சூதாடிகள்! “யார் இவன்?... முதல் ஆட்டத்தில் தோற்கிறான்... ஆனால் அடுத்தடுத்த முடிவு இவனுக்குச் சாதகமாக இருக்கிறது. ஒருசில நாட்கள் விளையாடியதிலேயே பெரும் செல்வத்தை

இவனிடம் இழந்து விட்டோமே... விடக்கூடாது” என கங்கணம் கட்டிக் கொண்டனர்!

ஒருநாள்... வழக்கமான விளையாட்டு! முதல் ஆட்டம் தோல்வி! அடுத்தடுத்து வெற்றி! பெரும்பணத்தினை மூர்க்கரிடம் தோற்றார்கள்!

“இதை இப்படியே விடக்கூடாது!” என்றான் ஒருவன்.

“ஏய்... பணத்தைப் போட்டுவிட்டு ஓடிவிடு!” இன்னொருவன்.

“உனக்கு வேண்டியது, உயிரா?... பணமா?” என்றபடி கத்தியை எடுத்து நீட்டினான் மற்றொருவன்.

அதைப் பார்த்து வெகுண்டார்! கோபத்துடன், “சூதாட்டம் என்பதே தவறு; இதில் கொள்ளை வேறா?” என்றவாறு தாவி, அவர்களில் ஒருவனை தன் உடைவாளால் குத்தினார்; இவரது மூர்க்கத் தனத்தைக் கண்டு எதிரிகள் சிதறி ஓடினர்!

இவரது தொடர் வெற்றிகளும் தொடர்ந்தது. மேலும் இவரது மூர்க்கத்தனமும் தொடர்ந்தது. இப்படி தன் செயலுக்கு எதிரானவர்களை எமனுலகுக்கு அனுப்பும் மூர்க்கத்தனம் கொண்டதாலேயே இவருக்கு மூர்க்கர் எனும் பெயர் வந்ததோ? தெரியவில்லை.

தன் மூர்க்க குணத்தினைக் கொண்டு இறைப்பணியாற்றி, சிவத்தொண்டர்களின் பசி போக்கிய இந்த சிவனடியார், தன் இறுதி மூச்சு உள்ளவரை அடியார்களுக்கு சேவைசெய்து இறைவன் திருவடியை அடைந்தார். தன் தூய தொண்டினால் மூர்க்க நாயனார் என்னும் சிறப்போடு வணங்கப்படுகிறார்.



ரா. பன்னீர்செல்வம்

# வீட்டு வைத்தியம்



பல வியாதி நிவாரணி!

வீட்டுத் தோட்டப்பகுதியில் சுலபமாக வளரும் இயல்பு கொண்டது நெருஞ்சில் செடி. ஆங்கிலத்தில் அதற்கு உள்ள பெயர் TRIBULUS TERRESTRIS என்பது.

உட்சூடு, சிறுநீர்க்கட்டு, கல்லடைப்பு, நீர் எரிச்சல், காமாலை, கண் நோய்கள், ரத்தப்போக்கு, தாது நஷ்டம், சதையடைப்பு போன்ற நோய்களை நெருஞ்சி குணமாக்கும் தன்மை கொண்டுள்ளது. தவிர நறுமணப் பொருளும் இதன் மூலம் கிடைக்கிறது.

சிறுநீர் தொடர்புடைய நோய்கள் வந்தால், நெருஞ்சில் சமூலத்துடன் (அடிவேருடன் கூடிய முழு செடி) அருகம்புல்லும் கலந்து கொதிக்க வைத்து சாப்பிட குணமாக்கிவிடும், இந்த நெருஞ்சில்!

மேலும் நெருஞ்சில் செடியின் காயையும், வேரையும் பச்சரிசியோடு வேகவைத்து, அதனை கஞ்சி வடித்த பிறகு அதில் சர்க்கரையை கலந்து கொடுத்தால் நீர்க்கடுப்பு, வெள்ளைபடுதல் முதலியவை நீங்கிவிடும்.

பீன்ஸ் காய்

புரதச்சத்து, கால்சியம் ஆகியவற்றை கொண்ட பீன்ஸ் காயை சமைத்து சாப்பிட ருசியாக இருக்கும். கல்லீரலில் ஏற்படும் உஷ்ணத்தை சமனப்படுத்தும் தன்மையுள்ள பீன்ஸ், எலும்புகளுக்கும், பற்களுக்கும் வலிமை சேர்க்கும் குணமுடையது.

எப்பொழுதுமே பீன்ஸை நீராவியில் வேக வைப்பது நல்லது. நீர் விட்டு அக்காயை வேக வைத்தால் அது கொண்டுள்ள சத்துக்கள் குறைந்து விடும்.

கால் ஆணி பாதிப்பு

கால் ஆணியால் ஏற்படும் வலியைப் போக்க மூன்று வழிகள் உள்ளன.

மஞ்சள், வசம்பு, சிறிதளவு கற்பூரம், மருதோன்றி இலை சேர்த்து அரைத்து காலில் பற்று போல போட வேண்டும்.

நாட்டு மருந்து கடையில் கிடைக்கக்கூடிய வெள்ளை அரதை அரைத்து, கால் ஆணி பகுதியில் வைத்துக் கட்ட நிவாரணம் கிட்டும்.

மருதாணியுடன் மஞ்சளையும் சேர்த்து அரைத்து இரவுப் பொழுதில் கால் ஆணி மீது கட்ட, கால் ஆணி தொல்லை நீங்கிவிடும்.

சீதபேதி நிவாரணி

பனம் நுங்கை தோலுரிக்காமல் சாப்பிட்டு வந்தால் உடன் குணம் கிட்டும்.

அவரை இலைச் சாறு 25 மில்லி, பசுந்தயிர் 50 மில்லி சேர்த்து வெறும் வயிற்றில் சாப்பிட சீத பேதி நின்று போகும்.

அதற்கு இன்னொரு நிவாரணி; வெந்தயத்தை வறுத்து இடித்து, அத்துடன் வெல்லம் கொஞ்சம் சேர்த்து பிசைந்து 4 முறை சாப்பிட்டால் நலம் பெறலாம், சீத பேதித் தொல்லையிலிருந்து!

## 'காயம்' குண நிவாரணிகள்
'காயமே இது பொய்யடா' என்பது தத்துவரீதியாக ஏற்றுக் கொள்ளப்படும் உண்மைதான். ஆனால் அந்த காயம் என்ற உடம்புக்கு வெட்டுகள் மூலமும், இதர வகையில் ஏற்படும் புண்ணிற்கு, அவைகள் ஆற, இந்த நிவாரண வைத்திய முறைகள் தேவைப்படுகின்றன.

வாழை இலைகளை துண்டாக்கி விட்டு, ஆறாத புண்ணில் கட்டு போட்டு வந்தால் சில தினங்களில் அவை ஆறிவிடும்.

கருவேல் மரத்தின் தளிர்களை பறித்து நிழலில் காயவைத்த பின்பு அதை தூள் செய்து, புண்ணில் தூவி வந்தால் புண் குணமாகும்.

புண்ணின் மீது இலவம் மர பட்டைகளை நன்றாக அரைத்து விட்டு, வெட்டுக் காயத்தில் பூசிவர குணம் கிடைக்கும்.

## தலையில் ஊறும் பேன்கள் ∴ பொடுகு அகல
நல்ல கெட்டித் தயிரில், எலுமிச்சம் பழச்சாற்றை எடுத்து அத்துடன் கலந்து விட்டு உச்சந் தலையில் தினமும் தேய்த்துக் குளித்து வர, அத்தொல்லை தொடராது!

எலுமிச்சம் பழச்சாறு, துளசிச்சாறு இரண்டையும் சம அளவு சேர்த்துக் கொண்டு வாரத்திற்கு ஒருமுறை தலையில் தேய்த்துக் குளிக்க, பொடுகு உதிர்ந்து தலைப்பேன்கள் செத்துவிடும்.

## வயிற்று வலியா?
பனைவெல்லத்தை சாறாக்கி விட்டு, அரை டீஸ்பூன் விளக்கெண்ணெய் கலந்து 3 மணி நேரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டு வர, சூட்டினால் உண்டாகும் வலியாக இருந்தாலும் அல்லது அது திருகு வலியாக இருந்தாலும் அகலும். பலன் கிடைக்கும்.

ஒரு கோப்பை வெந்தயப் பொடியை சாதாரண மோரில் கலந்து குடித்தால் விரைவில் அஜீரணம் நீங்கி வலி குணமாகிவிடும்.

கொஞ்சம் எள்ளை எடுத்து அதனை விழுது போல் அரைத்து விட்டு, அடிவயிற்றில் தடவிவிட, கொஞ்ச நேரத்தில் வயிற்று வலி விட்டு விடும்.

## வரும் வாந்தி நிற்க!
புடலங்காயை சாறு செய்து ஒரு டீஸ்பூன் அதில் தேனைக் கலந்து சாப்பிட வாந்தி எடுத்தல் நின்றுவிடும்.

ஒரு டீஸ்பூன் அளவுக்கு கிராம்புகளை எடுத்து, அதனை நன்றாக வறுத்து பொடியாக்கிக்கொண்டு ஒரு டீஸ்பூன் தேனில், ஒரே ஒரு சிட்டிகை அளவுக்கு பொடியை எடுத்துக்கொண்டு, அதில் கலந்து உண்டால் வாந்தி சட்டென்று நின்று விடும்.

தேனில் கடுக்காய் தூள் போட்டு நன்றாகக் குழைத்து விட்டு உட்கொண்டால் வாந்தி எடுப்பது தடுக்கப்படும்.

குடந்தை நாராயணி

# பல்சுவை பக்கம்

## குறளும் பொருளும்

தமிழ் வசந்தன்



சுந்தரமூர்த்தி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்! அவரது மனைவி அதை காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. பயணம் புறப்படத் தயாரானார்கள். மனைவியின் பேச்சை தட்ட முடியாமல் புறப்பட்டு விட்டாரே தவிர, இதில் அவருக்கு உடன்பாடே இல்லை.

ஆனால், அவர் மனைவி சாந்தாவுக்கு அப்போதிருந்த சூழ்நிலையில் இதை விட்டால் வேறு வழியே தெரியவில்லை.

அப்படி என்ன சூழ்நிலை?!...

நேர்மையான மனிதரான சுந்தரமூர்த்தி, கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி ஒரு வருடத்திற்கு முன்னால் பணி ஓய்வு பெற்றார். தனக்கு நிறுவனம் வழங்கிய பணிக்கொடை மற்றும் இதர வருவாயினைக் கொண்டு இரண்டு மகள்களின் திருமணத்தையும் இனிதே நடத்தி முடித்தார்.

இரண்டாவது மகளின் திருமணம் முடிந்து மூன்று மாதம் ஆன நிலையில் மூத்த பெண்ணுக்கு குழந்தை பிறந்து, தாத்தா, பாட்டி என்ற பதவி உயர்வினை பெற்றார்கள் இந்த தம்பதியினர்.

இதில் தான் ஒரு சிறு பிரச்சினை!... பணப்பிரச்சினை வந்து சேர்ந்தது.

இளைய மகளுக்கு தாலி பெருக்க வேண்டும் என தன்னிடம் இருந்த பணத்தை வைத்து ஒப்பேற்ற நினைத்தார்கள். அதே நேரத்தில் மூத்த மகளின் பிரசவத்திற்கான மருத்துவச் செலவு இணைந்து கொண்டது. மருமகளையும் பேரக் குழந்தையையும் வீட்டிற்கு அனுப்பச் சொல்லி சம்பந்தி வீட்டார் கேட்டுக் கொண்டதால், பேத்திக்கு நகை நட்டு, சீர் செனத்தி செய்து மூத்த மகளை புகுந்த வீட்டிற்கு அனுப்பிவைக்க வேண்டும். பிறகு பார்க்கலாம் என தள்ளிவைத்து நகை போடலாம் என நினைத்தால் மூத்த சம்பந்தியின் கறாரான பேச்சும் அடாவடிகளும் நினைவிற்கு வந்தன.

8 ஆயிரம் ரூபாய் பென்ஷன் வாங்கும் சுந்தர மூர்த்தி அதிலேயே வீட்டு வாடகை, சாப்பாடு, மகள்களின் சீராட்டு என அனைத்தையும் பார்த்துக் கொள்வதால் இந்த முக்கிய செலவுகளுக்கு என்ன செய்வது என தெரியாமல் தவித்தார்!

நேர்மையும் நாணயமும் கொண்ட ஒரு நபர் பணிபுரியும் காலத்திலேயே எந்த மரியாதையையும் எதிர்பார்க்க முடியாது. இப்போது வருமானமே இல்லாமல் பென்ஷன் பணத்தையே நம்பி இருப்பவருக்கு சோதனை இப்படித்தானே வரும்?!

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ வேண்டும் என்னும் சிந்தனை கொண்ட சுந்தரமூர்த்தி இதுவரை கடன் வாங்கியதே இல்லை; காரணம்... ஆடம்பர வாழ்வுக்கு ஆசைப்பட்டதே இல்லை! தன் வருமானம் அறிந்து, அதற்குள்ளாகவே வாழப் பழகியவர். இதுவரை யாரிடமும் கை நீட்டியதும் இல்லை... கையேந்தியதும் இல்லை!...

இந்த இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்கத்தான் சாந்தா தன் கணவரை... தன் அண்ணன் முருகேசனிடம் அழைத்துச்செல்லப் போகிறார். அதற்குத்தான் இந்த பயண ஏற்பாடு!

திருமணமாகி 30 ஆண்டுகள் கடந்த நிலையில் இதுவரை மைத்துனர் வீட்டுக்கு இரண்டு முறை மட்டுமே சென்றிருக்கிறார். அதுவும் சம்பிரதாயம் கருதி!

இவரது மைத்துனர் முருகேசன், அந்த கிராமத்தின் பண்ணையார் போல பந்தா காட்டுபவர்! நிலபுலன், சொத்து என நிறைந்த செல்வாக்கு கொண்டவர்; ஆணவம் மிகுந்தவர்; சிரமமான வாழ்க்கையை சிரசில் சுமக்கும் சுந்தரமூர்த்தியை மனிதனாகவே மதிக்காதவர்! அதனால் தான் மனிதத் தன்மை இல்லாத தன் மைத்துனரைப் பற்றி சுந்தரமூர்த்தி நினைத்துக் கூட பார்க்க மாட்டார்!

இப்போது ஒரு தேவைக்காக, அவரிடம் கையேந்த வேண்டுமா? முடியாது என்னும் தீர்மானத்தோடுதான் இருந்தார். ஆனால், எனக்கு உரிமை உள்ளது; என் சிரமத்தைப் போக்கும் கடமை என் அண்ணனுக்கு உள்ளது என, தன் உரிமையை நிலைநாட்ட இவரையும் அழைத்தாள் சாந்தா!

'நெருப்பின் சுடுதன்மை சொன்னால் விளங்காது; சுட்டால்தான் தெரியும்' என எண்ணி, மனைவியுடன் வர ஒப்புக்கொண்டார்.

பரந்து விரிந்த கிராமத்து வீடு. மாமர நிழலில் நாற்காலியில் அமர்ந்திருந்தார் முருகேசன். ஏழைகளை அலட்சியமாக பார்க்கும் அதே தோரணை. சுற்றிலும் ஊர்க்காரர்கள் பலர்! ஒரே சத்தமாக இருந்தது.

முருகேசன் யாரையோ கோபமுடன் கண்டித்தார்... "கூலியா கெடைக்கற நெல்ல வச்சு குடும்பம் நடத்துற நீ... எந்த தைரியத்துலடா கடன் வாங்கின?! மரியாதையா இன்னும் ரெண்டு நாள்ல திருப்பிக் கொடுக்கணும்... இல்லைனா உன் வீட்ட எழுதி கொடுத்துட்டு போயிடனும். இதுதான் முடிவு!" என்றார்.

அவன் அலறினான்; "அய்யா... எனக்குன்னு இருக்கற அந்த ஓலக் குடிசையும் இல்லாம போனா நான் என்ன பண்ணுவேன்... எங்கய்யா போவேன்?" என கதறினான்.

"போடா... மரத்தடி, மலையடிவாரம்னு எவ்ளோ இருக்கு... போ அங்க!..." என ஏளனமாக பதிலளித்தார்.

"அய்யா... உங்க கால்ல விழுறேன்... இந்த வருஷம் பொறுத்துக்கோங்க!..."

"பொறுத்தா?... அடுத்த வருஷம் என்ன 600 மூட்ட நெல்லா அறுக்கப்போற?! அடுத்தவன் நெல்ல அறுத்து, கூலி தானடா வாங்கப்போற?!... போ, போ!... யோவ்... இவன கூட்டிட்டு போங்க" என எழுந்து நடக்க, கூட்டம் விலகிச் சென்றது. பாதிக்கப்பட்டவன் தலையிலடித்து அழுதபடி சென்றான்.

வீட்டிற்குள் நுழையப் போனவர், அங்கே நின்றிருந்த தங்கை சாந்தாவையும், மைத்துனர் சுந்தர மூர்த்தியையும் பார்த்தார்! பார்த்த மாத்திரத்திலேயே அவரது முகம் மாறியது. இதை இருவருமே கவனித்தார்கள்.

முருகேசன், "நீங்க எப்ப வந்தீங்க?... என்ன விஷயம்?... நான் கொஞ்சம் வெளியில போயிட்டு வந்துறேன். போங்க... போய் சாப்பிடுங்க!.. நான் வாரேன்" என ஒப்புக்காக பேசிவிட்டு வீட்டுக்குள் செல்லாமல் வெளியில் கிளம்பினார்.

சுந்தரமூர்த்தியின் வீட்டு நிலை முருகேசனுக்கு நன்றாகவே தெரியும். பணம் கேட்டுத்தான் வந்திருப்பார்கள் என புரிந்து கொண்டார். அதிகம் பேச்சு கொடுத்தால் பணத்திற்கு தான் கேடு என அவருக்குத் தெரியாதா?... விடுவிடுவென வெளியே நடந்தார். வந்தவர்களை வரவேற்றது போலவும் ஆனது; அவர்களைத் தவிர்ப்பதை தெரியப்படுத்தியது போலவும் ஆனது, என எண்ணி நடந்தார்.

அவர் போவதையே அர்த்தமான புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்த சுந்தர மூர்த்தி, மனைவியை அதே புன்னகையோடு பார்க்க... பார்வையின் பொருள் புரிந்து சாந்தா தலை குனிந்தாள்.

"வாங்க, வாங்க... எப்படி இருக்கீங்க? பேத்தி எப்படி இருக்கா? தாத்தா, பாட்டி ஆகிட்டீங்க..! முதல்ல உள்ள வாங்க" அப்படிங்கற வார்த்த உன் அண்ணன் வாயில இருந்து வந்திருந்தா, நாம வந்த விஷயத்தையாவது சாவகாசமா சொல்லியிருக்கலாம். நாம வந்ததையே விரும்பாததால தான் எப்ப வந்தீங்க? என்ன விசேஷம்னு கேள்விகள கேட்டாரு, உங்க அண்ணன்... இதுக்கு மேலயும்... நீ..." என சிரித்தவர், "சாந்தா... செடியில பூத்துக் குலுங்கற பூவ எடுத்து மோந்து பார்த்தா லேசா வாடும்! ஆனா, வாடுறது தெரியாது. ஆனா, இந்த அனிச்ச மலர் இருக்குதே... மோந்து பார்க்கும் போதே வாடிடும்! இப்ப நாமும் அதுபோல தான் வாடி நிக்கிறோம். இதத்தான் வள்ளுவர் சொன்னாரு...

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" ன்னு.

சரி, வா... போகலாம்! வீட்டுக்கு வர்றவங்கள வரவேற்கிறதுக்குன்னு ஒரு பண்பாடு இருக்கு! அந்த பண்பாடு உன் அண்ணனுக்குத் தெரியலன்னா நாம ஒன்னும் செய்ய முடியாது. அவருடைய முகமாற்றமே நம்ம மனவாட்டம்... வா, போகலாம்! ஏதாவது வழி கிடைக்கும்" என்றார்.



# அரிய ஆன்மிக தகவல்

நம் தமிழக அரசின் சின்னமாக இருப்பது, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோவிலின் கோபுரம் ஆகும். மதச்சின்னங்களோ, புராண சிற்பங்களோ ஏதுமின்றி, அருமையான கட்டடக் கலைக்கு அடையாளமாய், தனிப்பட்ட சமய அடையாளங்கள் ஏதுமின்றி தலைநிமிர்ந்து நிற்கிறது இந்த ஆலயத்தின் ராஜகோபுரம்!

ஸ்ரீவில்லிபுத்தூர் என்றதுமே ஆண்டாள் அருள்புரியும் ஆலயமும், அழகான கோபுர வடிவமும்தான் நம் நினைவுக்கு வரும்! அதே புண்ணிய தலத்தில் வரலாற்று சிறப்பினைப் பெற்ற சிவாலயம் ஒன்றும் உள்ளது. அது எத்தனை பேருக்குத் தெரியும்?!

அது வைத்தியநாத சுவாமி ஆலயம்! ஆண்டாள் ஆலயத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் மதுரை செல்லும் சாலையிலேயே இவ்வாலயம் அமைந்துள்ளது.

இந்த சிவாலயத்தின் கோபுரமும் சற்றொப்ப ஆண்டாள் கோவில் கோபுரம் போன்ற அனைத்து அம்சங்களும் பொருந்தியதாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாலயம் அமைந்திருக்கும் பகுதியின் பெயர் மடவார் வளாகம் என்பதாகும்! இப்பகுதிக்கு இந்தப்பெயர் வந்ததற்கு ஒரு புராண நிகழ்வு குறிப்பிடப் படுகின்றது.

அடைக்கலம் தேடிவந்த ஆடல் மங்கையர் இருவருக்காக, ஆண்டவனே அர்ச்சகர் உருவில் வந்து அருள்பாலித்ததும், அந்த மங்கையர் தங்கி, நலமுடன் வாழ பொன், பொருள் தந்து வீடு கட்டிக் கொடுக்க உத்தரவு தந்ததாகவும், அதனாலேயே இந்த இடம் மடவார் (மடவார் – பெண்கள்) வளாகம், அதாவது பெண்கள் பகுதி என்னும் பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.

மதுரையை மையமாக வைத்து சிவனார் 64 திருவிளையாடல்கள் புரிந்ததை அனைவரும் அறிவோம். அதே போல இந்த மடவார் வளாகம் தலத்திலும் இறைவன் 24 திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார்!

உடல் நோய்களை தீர்த்து வைக்கும் ஒப்பற்ற தலைவனே இங்கு உறையும் வைத்தியநாத சுவாமி ஆவார். அதற்கு ஓர் வரலாற்று நிகழ்வும் மிக முக்கியமானதாக குறிப்பிடப்படுகிறது.

மதுரையை ஆண்ட மன்னர் திருமலை நாயக்கருக்கு தீராத வயிற்று வலி வந்து சேர்ந்தது. மருத்துவர் எவராலும் அதனைத் தீர்க்க முடியவில்லை. அவதியில் தவித்த மன்னரின் கனவிலே வந்த சொக்கநாத பெருமான், "உடனே மடவார் வளாகம் செல்; வைத்தியநாதர் உன் வயிற்று வலியைப் போக்குவார்" என கருணையுடன் கூற, மதுரையிலிருந்து, தன் அரண்மனையிலிருந்த தந்தப்பல்லக்கு ஒன்றில் ஏறி இத்தலத்திற்கு வந்து சேர்ந்தார்.

தினமும் தரிசனம் செய்து, அபிஷேக தீர்த்தம் அருந்தி, சரியாக 48 நாட்கள் விரதமிருந்து, இவ்வாலயத்திலேயே தங்கியவர், வயிற்று வலி அகன்று பூரண நலம் பெற்றார். தன் நோய் தீர்த்த வைத்தியநாத சுவாமியின் இவ்வாலயத்தில், மதுரை ஆலயத்தில் இருப்பது போலவே ஒரு மண்டபத்தைக் கட்டினார். அருமையான கலை நுட்பத்தோடு அந்த மண்டபம் 'நாடக மண்டபம்' என்னும் பெயரில் இன்றளவும் பொலிவுடன் விளங்குகின்றது.

அது மட்டுமின்றி, தான் ஏறிவந்த தந்தத்தால் ஆன பல்லக்கினை இவ்வாலயத்திற்கு வழங்கினார். இப்போதும் இத்திருக்கோவிலின் விசேஷ காலங்களில் இந்த தந்தப் பல்லக்கில் தான் அம்மன் பவனி வருகிறார். அன்னை சிவகாமியின் தந்தப் பல்லக்கு உலா இன்றளவும் இங்கே பிரசித்தம்!

இவ்வாலய இறைவனை பிரிய மனமின்றி மன்னர் திருமலை நாயக்கர் வருத்தப்பட்டுள்ளார். தினந்தினம் விரதமிருந்து, உச்சிகால பூஜையை தரிசனம் செய்தபின்னரே உணவருந்துவதை இத்தனை நாள் வழக்கமாகக் கொண்டவரால் அதை லேசாக விட்டுவிட மனமில்லை. இங்கே இறைவனுக்கு உச்சி கால பூஜை முடிந்த பின்பே உணவருந்த வேண்டும் என எண்ணிய திருமலை மன்னர், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மதுரை வரை பல கல்மண்டபங்களை அமைத்து, அவற்றில் மணிகளை கட்டி, பணியாளர்களை நியமித்தார்.

அதன்படி, உச்சிகால பூஜை தொடங்கியதும் ஆலயமணி ஒலிக்கும்; அந்த ஓசையைத் தொடர்ந்து அடுத்தடுத்த மண்டபங்களில் மணி ஒலிக்கும். இறுதியாக அரண்மனையில் மணி ஒலித்ததும் உச்சி கால பூஜை நடப்பதை அறிந்து மன்னர் இறைவனை மனதார தரிசித்து, அதன்பின் உணவருந்துவாரம்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட இவ்வாலய தூண்களும் அதில் உள்ள சிற்ப வேலைப்பாடுகளும் தமிழக சிற்பக்கலைக்கு சிறந்த உதாரணமாக திகழ்கிறது.

ஆலயத்தின் உள்ளே நுழைந்தால் கொடிமரத்தின் முன்னால் ஆமைக்கல் அமைந்திருக்கிறது. தரையில் மிகப்பெரிய அளவில் கற்பாறை ஒன்று ஆமை வடிவில் தென்படுகிறது. ஆலயத்திற்கு வரும் பக்தர்கள், அந்த ஆமைக் கல்லில் அமர்ந்து தியானம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஒரு ஆமையானது, தன் ஓட்டுக்குள் உடலைக் குறுக்கிக்கொண்டு, தன் உடலையும் உயிரையும் எப்படி காப்பாற்றிக் கொள்கிறதோ அதைப்போல... இங்கே வருகின்ற பக்தர்கள் இந்த ஆமைக் கல்லின் மீது அமர்ந்து, ஆமையைப் போல... தங்கள் ஐம்புலன்களை அடக்கி இறை நினைவில் சிந்தனையை செலுத்த வேண்டும் என்பதே இதன் ஐதீகம்!

இவ்வாலயத்தில் உள்ள நடராஜர் சிலை, கல்லால் ஆன திருமேனியாய் காட்சியளிக்கிறது. இது மிகவும் உயரமான பெரிய கல்லால் ஆன நடராஜர் சிற்பம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும் பக்தர்கள் ஆண்டாள் நாச்சியார் - ரங்க மன்னாரை தரிசிப்பதோடு நில்லாமல் மடவார் வளாக வைத்தியநாத சுவாமியை தரிசனம் செய்து உடல் நோய்கள் நீங்கப் பெறுங்கள்.



ரா. பன்னீர்செல்வம்

# ஜெய். ஜெய். ஜெய் அனுமான்!



நிகழும் சுபகிருது ஆண்டின் மார்கழி மாதத்தில் 8 ஆம் தேதி ( 23-12-22 ) இடம் பெறும்

ஸ்ரீ அனுமத் ஜெயந்தி புண்ணிய நாளையொட்டி, அந்த தீர, சூர, ஆஞ்சநேயரைப் பற்றி புராணம் கூறும் செய்திகளின் தொகுப்பே இது!

### அனுமன் பிறப்பு

தேவேந்திரனின் புதல்வனே வாலி என்னும் அனுமார்கள் வம்சத்து இளவரசன். இவன் கிஷ்கிந்தாவை ஆண்டு வந்தவன்.

அஞ்சனாதேவி என்பவள் அப்போது கர்ப்பிணியாக இருந்தாள். யதேச்சையாக வாலி ஒரு நாள், தன் எதிர்காலம் குறித்து சில சோதிட வல்லுனர்களை ஆலோசனை கேட்ட போது, அவர்கள் அனைவருமே ஏகோபித்த குரலில், "அஞ்சனையின் வயிற்றில் உள்ளவன் உங்கள் மரணத்திற்கு காரண கர்த்தாவாக விளங்கப் போகிறான்" என எச்சரிக்கை விடுத்தார்கள். அதனால் என்னதான் தைரிய, பராக்கிரமாசாலியாக வாலி இருந்தாலும் அவனுக்கு மரண அச்சம் ஏற்பட்டு விட்டது. விதியை வெல்ல வாலி கங்கணங் கொண்டான்.

அஞ்சனையின் கருவை அழித்து விட்டால் தனது உயிரின் அபாய நிலையை தவிர்த்து விடலாம் என்ற தந்திர எண்ணத்துடன், உலோக கலவையினால் ஆன ஒரு கூரிய அம்பை தயாரிக்கச் செய்தான் வாலி. ஒரு நாள் அஞ்சனை ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கையில் அவள் இருப்பிடஞ்சென்று, தனது உலோக அம்பால் வயிற்றில் ஓங்கி குத்தி விட்டான் அவன்.

சிவனருள் பெற்றவள் அஞ்சனை. ஈசன் கொண்ட கருணையினால் அவள் வயிற்றில் தாக்கிய அந்த அம்பு உருகிப் போய்விட, அஞ்சனைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

இப்படி கருவிலேயே இறைவன் திருவருளைப் பெற்று வாழ்வில் வெற்றி வாகைகள் சூடிய அனுமனைப் பற்றிய செய்திகள் அனேகம்!

## இராம காதையில் உள்ள செய்தி

இராமரின் தீவிர பக்தரான சமர்த்த ராமதாசரின் படைப்பில், மராத்தி மொழியில் உள்ள 'இராம காதையில்' இச்சம்பவம் குறித்து ஒரு முக்கிய நிகழ்வை அருளியுள்ளார்.

பிள்ளைப்பேறு வேண்டி அயோத்தி மன்னர் தசரதர், பெரிய அளவில் புத்திர காமேஷ்டி யாகம் புரிந்தார். அதன் நற்பலனாக அபூர்வ பாயசம் கிடைத்தது. அதனை தனது பட்டத்தரசிகளான கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று பேர்களுக்கும் சரிசமமாக 'பாயாசத்தை' மன்னர் பிரித்துக் கொடுத்தார்.

அச்சமயம் எங்கிருந்தோ புறப்பட்டு வந்த கருடன் ஒன்று சுமித்திரையின் கையில் இருந்த பாயாசத்தை பறித்துச் சென்று விட்டது. இதனால் ஏமாற்றமும், மனவருத்தமும் அடைந்த அவளை கோசலையும், கைகேயியும் தக்க முறையில் சமாதானப்படுத்தி, தங்கள் பங்கிற்கு பெற்ற பாயாசத்தை சரிசமமாக்கி அவளிடம் வழங்கி குடிக்கச் செய்தார்கள்.

கருடன் பறித்துச் சென்ற பாயாசம் எப்படியோ அஞ்சனா தேவிக்கு கிடைத்தது, அதனை அவள் உட்கொண்டாள். அதன் நல்விளைவாக அவள் வீர அனுமனை ஈன்றெடுக்கும் பாக்கியம் கிடைத்ததாம்!

## அனந்த மங்கல அனுமன்!

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அனந்த மங்கலம் சிற்றூரில் கோயில் கொண்டுள்ள வீர ஆஞ்சநேயர், ஈஸ்வரனைப் போன்று முக்கண்களுடன், தனது 10 திருக்கரங்களில், ஒரு திருக்கரத்தில் வெண்ணெய் ஏந்தியும், மீதி ஒன்பது கரங்களில் பல ஆயுதங்களுடனும் வித்தியாசமாக, தெற்கு நோக்கி அருட்காட்சி தருகிறார். இங்கு அவர் கொண்ட திருநாமம் 'த்ரி நேத்திர தச புஜ வீர ஆஞ்சநேயர்' என்பது.

இந்த அனுமனுக்கு, உரிய வெண்ணெய் சாற்றி வழிபட, அந்த பக்தர்கள் கொண்ட துன்பங்கள் தீயில்பட்ட வெண்ணை போல் கரைந்து விடும் என்பது தலபுராணச் செய்தியாகிறது.

## கொடிய நோய் தீர்த்த இறைவன்!

ஆஞ்சநேயரின் தீவிர பக்தரான மகான் ஸ்ரீ வியாசராயர் நாட்டின் பல பகுதிகளில் 732 எண்ணிக்கையில் பிரதிஷ்டை செய்த ஆஞ்சநேய மூர்த்திகளில் 89 ஆவதாகத் திகழ்கிறார். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தாராபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காடு ஹனுமந்தராய சுவாமி ஆலயத்தில் திருக்காட்சியளிக்கும் அந்த ராம பக்தன்!

சுமார் 200 ஆண்டுகளுக்கும் முன்பு கோவை மாவட்ட கலெக்டராக பணிபுரிந்த 'டீலன்' என்ற ஆங்கிலேயருக்கு கொடிய ராஜபிளவை தாக்கி மிக அவஸ்தை பட்டார். ஸ்ரீ காடு ஹனுமந்தராய அனுமனை பக்தியுடன் துதித்தால் அந்நோய் தீரும் என அவர் மீது அக்கறை கொண்ட சிலர் ஆலோசனை கூறியபடி நம்பிக்கையுடன் கலெக்டர் அவ்வாலய தரிசனம் செய்தார். தொடர்ந்து அந்த வழிபாட்டை அவர் மேற்கொள்ளவே, பூரண குணம் பெற்றுவிட்ட அதிசயம் நிகழ்ந்தது. அதற்காக கலெக்டர் அனுமனுக்கு கர்ப்பக்கிரகமும், கோபுரமும் தன் செலவில் கட்ட முன் வந்தார். ஆனால் பக்தர் ஒருவர் கனவில் அனுமன் காட்சி தந்து, கோபுரம் கட்ட வேண்டாம் எனக் கூறி விடவே, இன்றும் அவ்வாலயம் கோபுரமின்றி காட்சி தரும்.

இவ்வாலய சிறப்புகளில் ஒன்று அனுமனுக்கு வேண்டுதலாகச் செய்யப்படும் வடை மாலை, வெற்றிலை மாலை சூடும் வழக்கம் இல்லை என்பதாகும்.

இங்குள்ள கோபுரக் கொடிமரத்தில் 'துணி' கட்டி வழிபட்டால் குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு அப்பாக்கியமும், தீராத நோய் கொண்டு இங்கு பூஜிப்போருக்கு அது நீங்கி விடும் என்பதும் பக்தர்களின் நம்பிக்கையாகும்!

## பால அனுமான் திருக்கோயில்

இராமநாதபுரம் நகரில் உள்ள பழைய அரசர் அரண்மனையின் கிழக்குக் கோட்டையில் எழுந்தருளியுள்ளார் ஸ்ரீ பால அனுமன்!

ஒரு காலத்தில் துறவி ஒருவரால் ஒரு ஆலமரத்தின் அடியில் பிரதிஷ்டையான இந்த பால அனுமான் ஆலயத்திற்கு கடந்த 1964ஆம் ஆண்டில் நிகழ்ந்த பெரிய புயலால் அந்த ஆலமரம் முழுமையாய் சேதமாகி விட்டது. ஆனால் அனுமன் திரு உரு எவ்வித பாதிப்புமின்றியும் இருந்து விட்டது! அத்துடன் பூமியில் சாய்ந்த அந்த ஆலமர வேரில் ஸ்ரீ பால அனுமானைப் போன்ற உருவம் இன்றும் கட்சி தருவதாகக் கூறப்படுகிறது.

மன சஞ்சலம் கொண்ட பக்தர்களின் குறை போக்கும் இந்த பால அனுமன் திகழ, இது போன்ற அமைப்பு வேறெங்கும் கிடையாது எனப்படுகிறது.

### அபிஷேகமில்லா அனுமன்!

கும்பகோணம் சமீபமுள்ள திருப்பனந்தாள் அருகே உள்ள கீழக்காட்டூர் தலத்தில்

ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலயம் உள்ளது. இங்கே குடிகொண்டு ஆசிகள் வழங்கும் ஆஞ்சநேயர் ‘தாரு’ எனப்படும் அபூர்வ மரத்தால் உருவாக்கப்பட்டவர். எனவே அவருக்கு அபிஷேகம் செய்யப்படுவதில்லை.

தினசரி சாம்பிராணி தைலம் சாற்றலாகும் இந்த ஆஞ்சநேயரை வழிபடுபவர்களை ஆட்கொண்ட தீய சக்திகள் அழிந்துவிடும் எனப்படுகிறது!

### வித்தியாச வழிபாடு

இராமனின் தூதுவராக முதன் முதலில் இலங்கைக்கு வான்வழியே பயணமான அனுமன், விண்ணில் பாய்வதற்கு முன்பாக ஒரு பெரிய குன்றைத் தேர்ந்தெடுத்து அதில் நின்றார். அதனை நினைவுப் படுத்தும் வகையில், கேரளா மாநில திருருக்கு சமீபமுள்ள ஆலயத்தியூர் என்ற புகழ்பெற்ற தலமுள்ளது. திருருலிருந்து சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தில் ஆலத்தியூர் அமைந்துள்ளது.

மகரிஷி வசிஷ்டர் பிரதிஷ்டை செய்த இந்த அனுமன் குடிகொண்ட ஆலயத்தின் மூலவராக ஸ்ரீராமர் காட்சி அருள்கிறார். அவரருகே அனுமன் தன் இறைவன் அருள்வதை செவிமடுக்கும் கோலத்தில் காணப்படுகிறார்! ஆஞ்சநேயர் முன்பு பெரிய குன்றின் மீது ஏறிநின்று வானில் பாய்ந்ததை ஞாபகப்படுத்தும் முறையில் இக்கோயிலில் ஒரு நீளமான மேடை வைக்கப்பட்டு, கடலைக் குறிக்கும் முறையில் ஒரு கருங்கல் பீடமும் அமைந்துள்ளது.

இவ்வாலய தரிசனம் பெற வரும் பக்தர்கள், இராம, அனுமன் தரிசனத்தை முடித்துவிட்டு, மேலே சொன்ன மேடையில் நின்று எதிரே உள்ள கருங்கல் பீடத்தை தாண்டும் சடங்கையும் பின்பற்றுகிறார்கள். இவ்வாறு செய்வதின் மூலம் தங்களுக்கு அனுமன் நல்ல உடல் ஆரோக்கியம், வலிமையான உடல், நீண்ட ஆயுள், நல்ல கல்வி, வளமான வாழ்வு அருள்வார் என நம்புகிறார்கள்.

### ஆஞ்சநேய ஜயந்தி



தமிழகத்தில் நாம் மார்கழி மாத அமாவாசை திதி கூடிய மூல நட்சத்திரத்தில் அனுமத் ஜயந்தியை கொண்டாடுகிறோம். ஆந்திர மாநிலத்தில் அப்படி ஜெயந்தியைக் கொண்டாடும் முறை இல்லை. அங்கே உள்ளவர்கள் சித்திரை மாதத்தில் இடம் பெறும் பௌர்ணமி திதியில் தான் அனும ஜயந்தியைக் கொண்டாடுகிறார்கள்.

சில வடமாநிலங்களிலோ வைகாசி மாதத்தில் வரும் பௌர்ணமிக்கு அடுத்து வரக்கூடிய செவ்வாய்க் கிழமையில் அனுமத் ஜயந்தியை சிறப்பாக நடத்துவார்கள்.

### சமர்த்த ராமதாசர் பிரதிஷ்டை செய்த அனுமன்

பூனே நகரில் அமைந்த கணேச் பேட்டையில் குடிகொண்ட அனுமனின் திருநாமம் குல்யா மாருதி என்பது. இம்மூர்த்தி சாளக்கிராம சிலையினால் ஆனதாகும். இந்த மாருதி ஐந்து அடி உயரமும், அடித்தளம் இரண்டரை அடியிலும் அமைந்திருக்க, அவரது கருங்கல் திருமேனியில் பலவித ஆபரணங்கள் செதுக்கப்பட்டு மிக நேர்த்தியாக இருக்கும். மேற்கு திசைநோக்கி காட்சியருளும் குல்யா மாருதியின் சந்நிதி எதிரே உள்ள மகா மண்டபத்தை கி.பி 1778 ல் நிறுவப்பட்ட ஒரு வெண்கல காண்டாமணி அலங்கரிக்கும். அது எழுப்பும் ஓசையே ஒரு இனிய நாதமாக செவியை ஆனந்தப் படுத்துமாம்.

### இரண்டுமுக அனுமன்

ஆந்திர மாநில கோதாவரி நதிக்கரையில் அமைந்த அஹல்யா குண்டம், சாரங்கபாணி குண்டம் என்ற பகுதியின் நடுவில் கட்டப்பட்ட ஒரு அழகான திருக்கோயிலில் எட்டடி உயரமுடைய இரண்டு முகங்கொண்ட

ஆஞ்சநேயர் தரிசனம் கிடைக்கும். இதில் ஒரு முகம் கிழக்கு நோக்கியும், மறுமுகம் மேற்கு நோக்கியும் வித்தியாசமான காட்சியை அருள, அவருடைய ஒரு திருக்கரத்தில் கதாயுதம் இருக்க, மறுகரம் தலைக்கு மேல் தூக்கி அமைந்திருக்கும். அவரது காலில் மிதிபட்ட நிலையில் அபஸ்மார புருஷன் என்பவர் காணப்பட, அவரெதிரே அனுமன் குண்டம் காட்சியாகும்.

### இராம நாமமே சிறந்தது ஏன்?

அயோத்தி மாநகரில் கோலாகலமாய் ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் நடைபெற்று முடிந்தது. அச்சந்தர்ப்பத்தில், தங்களுக்கு பல வகைகளில் சேவை புரிந்து வரும் ஆஞ்சநேயரை கௌரவிக்க விரும்பிய சீதா பிராட்டி அவருக்கு அன்புடன் ஒரு விலை உயர்ந்த முத்து மாலையை பரிசளித்தார்.



அம்மாலையை வினையமுடன் பெற்றுக் கொண்ட அந்த இராமபக்தர், ஒரு தனி இடத்தில் உட்கார்ந்து கொண்டு மாலையில் ஒவ்வொரு முத்தாக பிய்த்தெடுப்பதும், அதை உற்றுப் பார்த்துவிட்டு தூக்கி எறிவதுமாக இருந்தார். தற்செயலாய் அவ்விடம் வந்த இளவல் லட்சுமணன், “என்ன அனும இது! அன்புடன் உனக்கு பிராட்டி தந்த மாலையை இப்படி சீரழிப்பது சரியா?” என்று உணர்ச்சிவசப்பட்டு அனுமனிடம் கேட்டார்.

“என்னை மன்னித்து விடுங்கள் சுவாமி, இந்த என் செய்கைக்கு. நான் மாலையில் உள்ள ஒவ்வொரு முத்தையும் உடைத்துப் பார்த்தேன். அதில் எந்த முத்திலுமே ‘இராம நாமம்’ இல்லை. அந்த திருநாமம் அற்ற எதுவுமே எனக்குத் தேவையில்லாத ஒன்றுதான்” என மரியாதையுடன் பதில் சொன்னார்.

“அப்படியா, அனும! சரி… மண், நீர், நெருப்பு, காற்று இவை அத்தனையும் சேர்ந்த, மண்ணாலான உடலை மட்டும் ஏன் வைத்துக் கொண்டுள்ளாய்? அதையும் விட்டு விடுவது தானே?” எனக் கேட்டு லட்சுமணன் அவரை மடக்கினார்.

அதற்கு அனுமன் சளைக்காமல், “கோபிக்க வேண்டாம் சுவாமி இந்த என் பதிலுக்கு. இந்த சரீரம் எப்படிப் பட்டது தெரியுமா? இதில் இராமனுடைய கிருபை என்ற நறுமணமும், சாந்தி என்ற தித்திப்பும், தாஸ்யம் என்கிற உப்பும், அவருடைய வாத்சல்யம் என்ற நாக்கில் ஊறுகின்ற புளிப்பும், நட்புடன் இணைந்த மிகவும் கண்ணிற்கு பரவசம் தரும் ஸ்வரூபமும் மாற்றி, மாற்றி ரசிப்பதற்கு கிடைக்கிறதே! தவிர சாதுக்களாகிய சுற்றுப்புறமும், வாசனைப் பூக்கள் போன்று கமகமவென துளைக்கின்ற ராமநாமங்களும் மாலையாக என் கழுத்தை அலங்கரிக்கையில் இந்த ‘இராமபக்தி’ ஆரத்தைவிட, தாங்கள் விலையுயர்ந்ததாகக் கூறும் இம் முத்துமாலை எவ்விதத்தில் உயர்ந்ததாகிறது? இராமபிரானுடைய கிருபையால் கிடைத்த அந்த அரும் மாலையை விட இந்த முத்துமாலை எவ்விதத்தில் சிறந்தது எனக் கருதியே, இப்படி செயல்பட்டேன்” என விரிவான விளக்கம் தந்த அவரை லட்சுமணன் கண்டு மெய்சிலிர்த்துப் போனார்.

### இராம தூதனைப் போற்றும் கர்நாடகா

அனுமன் அவதாரமான ஆஞ்ஜநாதரி என்னும் தலம் கர்நாடகாவுடன் தொடர்புடையது. தவிர அவர் வளர்ந்த கிஷ்கிந்தையும் அம் மாநிலத்தில்தான் உள்ளது. அங்கு வசிக்கும் பல பேர்கள் கொண்ட பெயர்கள் அனுமன் பெயருடன் சம்பந்தப்பட்டு ஹனுமான், ஹனுமந்தா, ஹனுமந்தையா, ஹனுமந்தப்பா, ஹனுமந்தராயா, ஹூச்சுராம, ஹூச்சப்பா, கடவிராம என்று இப்படி அமைந்திருக்கும்.

கர்நாடகா மாநிலத்தில் உள்ள பல கிராமங்களில் ஹனுமனே கிராம தேவதையாகக் கொண்டாடப்படுகிறார். அப்பக்க கன்னட பழமொழிகளில் இதுவும் ஒன்று…

“ஊரு ஹத்தி உருமுத்தித்தரு ஹனுமந்தக ராம ஹோ”

இதன் தமிழாக்கம்: “ஊரே பற்றி எரிந்தாலும் அனுமான் இருப்பார்!” என்பது.

சுவாமி விவேகானந்தர் வாக்கில் அனுமன்

ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் தன் சீடர்களுடன் உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள், “எங்கள் குருவே! நாங்கள் எதனை லட்சியமாகக் கொள்ள வேண்டும்?” என ஆவலுடன் கேட்டனர்.

அப்பொழுது சுவாமிகள் இப்படி சீடர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

“எனக்கு அருமையானவர்களே! சாதாரண நேரங்களில் சோம்பலின்றி உழைப்பதையும், பரோபகார சிந்தனையையும் அந்த வீர தீர சூர அனுமானிடமிருந்து கற்றுக் கொள்க!

நெருக்கடி ஏற்படும் சமயங்களில் தைரியத்தையும், சாகசத்தையும், சாதுர்த்தியமாக சமாளிப்பதையும் அவரிடமிருந்து கற்றுக் கொள்க! உங்கள் பகைவர்களைக் கூட வெறுக்காமல் நேசத்தோடு இருங்கள்! ஒரு சம்பவம் கூறுவேன், கேட்டுக் கொள்ளுங்கள்.

இலங்கைக்கு தூதுவனாக ஆஞ்சநேயர் ஒரு சமயம் சென்றபோது அவருடன் போரிட அட்சகுமாரன் என்ற வீரங்கொண்ட இளைஞன் வெகு உற்சாகமாக வந்தான். அவனை முதலில் சீண்டி விட்டு விளையாடினார் அனுமன். இதனால் மிக ரோஷங்கொண்டு அந்த அரக்கன் அனுமனை பலமாகத் தாக்கினான். புன்சிரிப்புடன் அவனை நோக்கி விட்டு அவர், அவனை பல விதத்தில் அலைக்கழித்து தப்பிவிட்டார். இதனால் சினமுடன் அட்சகுமாரன் கொதித்தெழுந்து, அனுமனை மீண்டும் வேகமாகத் தாக்க முயலுகையில் பளாரென ஓங்கி அவன் கன்னத்தில் அனுமன் ஒரு அறை விட, அதிலே சுருண்டு விழுந்தான் அந்த அரக்கன். அத்தகைய அனுமனே! உங்கள் லட்சிய நாயகனாக இருக்க வேண்டும். புரிந்ததா?!” என்று.

**ஆர். வைத்தியநாத சுவாமி**



# பயனளிக்கும் வீட்டுக் குறிப்புகள்

பாதாம் பருப்பை வெந்நீரில் சுமார் 5 நிமிட காலம் ஊற வைத்துவிட்டு, பிறகு அதை குளிர்ந்த நீரில் போட்டு எடுத்தால் அதன் தோலை சுலபமாக நீக்கிவிட முடியும்!

* * * * *

சாதம் அதிக ருசி, அதிக வெண்மை பெற செய்ய வேண்டியது; சாதம் வேகும் நேரத்தில் அதில் ஒரு சிட்டிகை உப்பும், ஒரு டீஸ்பூன் நெய்யும், ஒரு டீஸ்பூன் எலுமிச்சம் பழ சாற்றையும் சேர்த்து விட வேண்டும்.

* * * * *

ரொம்ப நாட்கள் பயன்படுத்தாமல் பிளாஸ்கை வைத்திருந்தால் வாடை வந்துவிடும். அதனைப் போக்க, எப்போதும் அதில் ஒரு டீஸ்பூன் ஜீனியை போட்டு வைத்தால் வாடை வராது தவிர்த்து விடலாம்!

* * * * *

பாகற்காயை கூட்டாக சமைக்கையில் அதில் இரண்டு மாங்காய் துண்டை சேர்த்து விட்டால், அக்காயின் கசப்பு குறைந்து நிற்கும்.

* * * * *

மிளகாயை நிறைய நறுக்கினால், அதன் விளைவாக கை எரியும். அதற்கு நிவாரணம், கையில் நல்லெண்ணையை தடவிவிட்டு, சில நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவினால் எரிச்சல் போய்விடும்.

* * * * *

பிரிஜ் யின் துணையின்றி எலுமிச்சம் பழங்கள் காய்ந்து விடாமல் காக்க, அப்பழங்களை ஈரத்துணி ஒன்றில் சுற்றி வைத்து விடவும்.

* * * * *

பூரிக்கு மாவை பிசையும் போதே, அதில் சிறிதளவு ஜீனியை சேர்த்து விட்டால், அதன் பலனாக மென்மையான, ருசியான பூரி கிடைக்கும்!

* * * * *

மாங்காய், மாம்பழம் ஆக அதை கோதுமைக்குள் வைத்து விடவும்.

* * * * *

தலை துவட்டும் துண்டை தினமும் பயன்படுத்தி வர வாடை கிளம்பும். அத்துண்டை உப்பு கலக்கப்பட்ட இளஞ்சூடு கொண்ட வெந்நீரில் கொஞ்ச நாழிகை முக்கி எடுத்தால் வாடை போயே போச்சு!

* * * * *

சுவையான உருளைக்கிழங்கு 'சிப்ஸ்' சாப்பிட ஆசையா...?

உருளைக் கிழங்கை துண்டு துண்டாக 'சிப்ஸ்'க்காக வெட்டிய பின்பு அவைகளை குளிர்ந்த நீரில் போட்டு எடுத்து, பின்பு ஈரம் போக துடைத்து எண்ணெயில் வறுக்க வேண்டும்.

* * * * *

அதிக சுவை கொண்ட பக்கோடாவை தயாரிக்க இதுவும் ஒரு முறை; இரு மடங்கு கடலைமாவும், ஒரு மடங்கு பார்லி மாவும் சேர்த்தால் போதும், தூள் கிளப்பும் பக்கோடா!

* * * * *

சில சமயங்களில் ரொட்டியை சரியாக வெட்ட முடியாது. அதற்கு வெட்டும் கத்தியில் கொஞ்சம் வெண்ணெய் தடவினால் போதும்.

* * * * *

மொறுமொறுப்பான பூரியை எவருமே உண்ண விரும்புவார்கள். சோளமாவை, பூரி மாவுடன் கொஞ்சம் கலந்து விட்டால் எதிர்பார்த்த மொறுமொறுப்பான பூரி தயார்!

* * * * *

பாலைக் காய்ச்சுவதற்கு முன்பு, பால் பாத்திரத்தின் வளையப் பகுதியைச் சுற்றி எண்ணெயை தடவி விட்டால், அதனைக் காய்ச்சுகையில் பால் பொங்கி வழிவதை தடுத்துவிடும்.

* * * * *

முறுமுறுப்பான, அதிகம் செலவாகாத வகையில் உளுந்து வடை தயாரிக்க, வடைக்கான மாவில் சிறிதளவு நெய் சேர்த்தால் போதுமானது. அதன் ருசியும் கூடிவிடும்.

* * * * *

**பத்ரி நாராயணன்**

# சற்குரு



இக அறிவை நீக்கி, பரஞானப் பேரறிவை அளித்து, சீடனின் வினைகளை நீக்கி, விதி என்ற வளையத்தை காடாக்னியால் எரித்து சாம்பலாக்கி, அதை கலைத்துவிட்டு, ஞானாக்னியை ஏற்றி வைத்து, பூரணமாக்கி, பரிபூரணமாக்கி, ஜீவனை சிவமாக்கி, சிவத்தில் ஐக்கியமடையச் செய்கிறார் சற்குரு.

சிவம், ஜீவன்களை படைத்து, விதவிதமான ஜீவன்களைப் படைத்து, கோடானகோடி விதவிதமான ஜீவன்களைப் படைத்து இங்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறது. ஜீவன்களை விதிப்படி விட்டுவிட்டு சாட்சிப் பொருளாக இருந்து வேடிக்கை பார்க்கிறது. சற்குரு வெட்டவெளியிலிருந்து புறப்பட்டு, தலைவாசல் (தாயின் மடி) வழியே இந்த இகத்திற்கு வருகிறார். இங்கு வந்ததும் நமக்கெல்லாம் சிவத்தை, பிரம்மத்தை, வெட்டவெளியைச் சுட்டிக் காட்டுகிறார். எது மெய்ப்பொருள் என்பதை சுட்டிக் காட்டுகிறார்.

சற்குரு, சீடர்களின் கடந்தகால, சென்ற பிறவிகளில் செய்த வினைகளை அவரவர்களின் அந்தராத்மா மூலம் அறிந்து கொள்கிறார். அந்தராத்மா என்பது நமக்குத் தெரியாமல், நமக்குள்ளே இருக்கும் இறைவனின் உளவாளியாகும்! அந்தராத்மா மூலம் கடந்தகால வினைகளை அறிந்ததும், அதற்கு ஏற்ப அவரவர்களுக்கு பொருத்தமான சாதனைகளை வகுத்துத் தருகிறார். சாதனையைச் செய்ய வைக்கிறார். சாதனையைச் செய்து முடிக்கத் தேவையான ஆற்றலை தமது அருளாசி மூலம் வழங்குகிறார். உத்தமமான சாதகர்களுக்கு, சாதனையின் போது வரும் இடையூறுகளை நீக்கி அருள்பாலிக்கிறார். தமது தவசக்தியை தாராளமாக அள்ளித் தருகிறார். செய்த சாதனைக்கான வெற்றியையும் அவரே அருள்கிறார்.

சாதனையில் வெற்றிபெறச் செய்து, பூரணமாக்கி, பரிபூரணமாக்கி, ஜீவனை சிவமாக்கி, பரத்திற்கு அழைத்துச் சென்று, சிவத்தில் ஐக்கியமடையச் செய்து விட்டு ஆசிகள் அருள்கிறார், சற்குரு!
சிவம் செய்து கொண்டிருக்கும் பணிக்கு எதிர் பணியை சத்குரு செய்கிறார்!
அதாவது பரத்திலிருக்கும் சிவம், ஜீவன்களைப் படைத்து இகத்தில் விடுகிறது. ஆனால் சற்குரு ஜீவன்களை சிவமாக்கி பரத்தில் விடுகிறார். எனில் சற்குரு, சிவத்திற்கு எதிரானவர் என்று மாயை பேசிவிடக் கூடாது.

எதிரெதிர் பணிகள் போன்று இருக்கும் இவ்விரு பணிகளையும் செய்பவர்கள் ஒருவரே ஆவார்! சிவம் வேறு, சற்குரு வேறு அல்ல. இருவரும் ஒருவரே!
சிவம் தந்த சாபத்தை சற்குரு மன்னிப்பார். ஆனால் சற்குரு தந்த சாபத்தை சிவம் மன்னிக்காது. அதாவது சிவம் தந்த சாபத்தை சற்குரு மன்னித்து விட்டால், சிவம் அதை ஏற்றுக்கொண்டு, சாபத்திலிருந்து ஜீவனுக்கு விலக்கு அளித்து விடும். ஆனால் சற்குரு சாபமிட்டிருந்தால் சிவம் மன்னிக்காது. விதிப்படி விட்டுவிடும்.
ஆனால் அதே நேரம் சற்குரு யாருக்கும் சாபம்

கொடுப்பதில்லை. அவர் எப்போதும் ஆசிகள் மட்டுமே வழங்குவார். சற்குருவியிடம் ஆசி பெற்ற ஜீவன்கள், பெற்ற ஆசியை மறந்துவிட்டு ஆசிக்கு எதிராக வினையாற்றினால் அந்த ஆசியே, அந்த ஜீவனுக்கு சாபமாக மாறிவிடும். தவிர சற்குரு தனியே யாருக்கும் சாபம் கொடுப்பதில்லை.

ஏனெனில் ஒரு பிரம்மஞானி, சிவம் வகுத்த எல்லாக் கட்டுப்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு, கட்டுப்பட்டுதான் கட்டுப்பாடுகளை வெல்கிறார். அதாவது சிவம், எல்லா கட்டுப்பாடுகளிலிருந்தும் அவருக்கு விலக்கு அளித்து, 'சற்குரு' என்ற பதவியை அளித்து, மகுடம் சூட்டுகிறது. சிவம் வேறு, சற்குரு வேறு அல்ல என்ற நிலை கிடைக்கிறது.

சற்குரு சக்தி சொரூபமானவர். எனவே பெருங்கருணையாளராக இருப்பார். சக்திக்குப் பிடிக்காத ஒன்று அகங்காரமாகும். யார் சற்குருவிடம் பரிபூரணமாகச் சரணாகதி அடைகிறார்களோ, அவர்களை சிவத்திடம் அழைத்துச் சென்று, சிவத்தோடு ஐக்கியமாக்கி விடுவார். அங்கு சிவமாய் இருப்பதும் சற்குருவே ஆகும்!

சற்குரு நிராமயமானவர். நிர்மலமானவர். நிர்குணமானவர். நெற்றிக்கண்ணை திறந்து வைக்கும் அருளாளர். விதியை மாற்றும் வித்தகர். அவர் சத்தியமானவர். தர்மமானவர். நியாயமானவர். அவர் ஒரு உத்தம ஜோதி. சிவத்தின் வல்லமையும் அவர்தம் வல்லமையும் ஒன்றே!

வீடு வரை உறவு.<br>
வீதி வரை மனைவி<br>
காடு வரை பிள்ளை<br>
கடைசி வரை சற்குரு!

**ஹரிதா**



# ஆன்மிகச் செய்திகள்

## வாசிப்பவர்: மருதா நல்லூர் ஸ்ரீராம்

**வேதம் அறிந்தவர் எவர்?**

"மனித வாழ்க்கை என்பது ஒரு அரசமரம்; இம்மரத்திற்கு வேர் மேலே உள்ளது. கிளையோ கீழே இருக்கிறது. அது அழிவற்றது. வேதங்கள் தான் அம்மரத்தின் இலைகளாகும் என அவ்வேதங்களே உரைக்கின்றன. அதனை முதலில் அறிந்தவனே வேதத்தை அறிந்தவனாகிறான்" (பகவத் கீதை - 15 ஆம் அத்தியாயம். புருஷோத்தம யோகம்)

**அனைவரின் சிந்தனைக்கும் 'மிக'!**

மிக மிக நல்லநாள் எது - இன்றுதான்

மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு

மிக வேண்டாதது - வெறுப்பு

மிகப்பெரிய தேவை - சமயோசித புத்தி

மிகக் கொடிய நோய் - பேராசை

மிகச் சுலபமானது - பிறரிடம் குற்றம் காணல்

மிகக் கீழ்த்தரமானது - பொறாமைப் படல்

மிக நம்பக் கூடாதது - வதந்தி

மிக ஆபத்தை விளைவிப்பது - வீண் பேச்சு

மிகச் செய்யக் கூடாதது - பிறருக்கு உபதேசம்

மிகச் செய்ய வேண்டியது - உதவி

மிக விலக்க வேண்டியது - வீண் விவாதம்

மிக உயர்வதற்கு வழி - உழைப்பு உழைப்பு உழைப்பே!

இவையெல்லாம் நம் முன்னோர்கள் கண்டுபிடித்து மிகமிக அருளியவைகள்தான்!

**விதியும், பகுத்தறிவும்**

அந்த குருநாதர் தன் ஆசிரமத்திற்கு வெளியே ஏகாந்தமாக அமர்ந்திருந்த வேளை அது. அந்த ஆசிரமத்தில் புதிதாகச் சேர்ந்திருந்த மாணவன் ஒருவன், அந்த குருநாதரை வணங்கிவிட்டு, "மகா குருவே! எனக்கு ஒரு ஐயம்" என பணிவுடன் சொன்னான்.

"என்ன அது?"

"ஐயனே! பகுத்தறிவு, விதி இவற்றுக்கான விளக்கம் அருள வேண்டும்"

"சரி சிஷ்யா! எங்கே உன் வலது காலை மேலே தூக்கு!"

"செய்து விட்டேன் சுவாமி"

"இப்பொழுது வலது கால் மேலே தூக்கிய நிலையிலேயே இருக்க, உனது இடது காலையும் தூக்கு!"

"குருவே! அது எப்படி சாத்தியமாகும்?"

"அப்பனே! உன்னால் ஒரு காலை மட்டும் தூக்க முடிந்தது அல்லவா? இதுதான் பகுத்தறிவு! உன்னுடைய இரண்டு காலையும் ஒரே சமயத்தில் தூக்க முடியாத நிலை உள்ளதே, அதுதானப்பா விதி! புரிந்ததா?"

என குருஜி வினவ, சீடன் ஆனந்தமுடன் கைகூப்பி "புரிந்து கொண்டேன் குருநாதரே!" என விடையளித்தான்.

**இதிகாச வித்தியாசம்**

அருள்மிகு கிருபானந்த வாரியார் சுவாமிகள் சென்னை ஆஸ்தீக சமாஜத்தில் இராமாயண விரிவுரை ஆற்றிக் கொண்டிருந்தார். பலத்த கூட்டம்!

அப்பொழுது அங்கு கூடியிருந்த மக்களிடம் இக்கேள்வியை எழுப்பினார்.

"யார் வேண்டுமானாலும் இக்கேள்விக்கு பதில் சொல்லலாம். இராமாயணத்திற்கும், மகாபாரதத்திற்கும் உள்ளது ஒரே ஒரு வித்தியாசம் தான் - அதாவது அக்காவியங்கள் கொண்ட நீதியால்" என்று.

பொதுக் கூட்டத்தினருக்கு விடை தெரியவில்லை. அனைவரும் 'கப்சிப்' பைக் கடைபிடித்தனர். இதனை புரிந்து கொண்டுவிட்ட வாரியார் சுவாமிகளே...

இராமாயணம் - பெண் ஆசை கூடாது

மகாபாரதம் - மண் ஆசை கூடாது

என எச்சரிக்கும் நீதியை அருளும் எனச் சொல்லி முடிக்க, கூட்டத்தினரின் கைதட்டல் வானையே பிளக்கும்படி இருந்தது.

**கல்லைக் கண்டால்...**

நாம் பிறரிடம் வார்த்தையாடுகையில் சில பழமொழிகளைக் கூறும் சந்தர்ப்பம் ஏற்படும். அதுபோன்ற ஒரு பழமொழி இது...

கல்லைக் கண்டால் நாயைக் காணோம்!

நாயைக் கண்டால் கல்லைக் காணோம்!!

நாம் ஒரு சிவாலயம் செல்கிறோம். அங்கே கல்லால் வடிக்கப்பட்ட காலபைரவர் திருவுருவைத் தரிசிக்கையில் அவர் அருகே ஒரு நாய் நிற்கிறது. அப்பொழுது ஒருவர் சொல்கிறார், "சுவாமியின் உருவச் சிலையைவிட, அந்த நாய் எப்படி காட்சியளிக்கிறது!" என்று. அந்த கல்லில் வடிக்கப்பட்ட நாய் தான் மனதில் பதிகிறது. ஆனால் அப்போது அந்தக் கல் நினைவில் பதிவதில்லை அவருக்கு.

எனவே சிற்பத்தை கல்லாக நினைத்து விட்டால் அங்கே கல் தான் மனதில் நிற்க, நாய் மறைந்து போகிறது. எனவே இப்ப பழமொழி பிறந்தது என்பார்கள்.

**பீஷ்மரும், மழையும்!**

புராண காலத்திற்குச் செல்வோம். மகாபாரத புருஷரான பீஷ்மர், தன் அரண்மனையின் வாயிலில் நின்று கொண்டிருக்க, திடீரென வானம் கறுத்து, இடி, மின்னலுடன் பெரும் மழை கொட்டும் முன்பாக சிறு சிறு தூறல்கள் தொடங்கின. அப்படிப் பெய்த தூறல்கள் பீஷ்மரின் உடலின் மீதும் விழுந்த தாக்கத்தால், அவர் 'நச்" என்று தும்மிவிட நேர்ந்தது.

அப்பொழுது மழை பீஷ்மரைக் கேட்டது...

“பிரபோ! பல்லாயிரம் கரங்கள் கொண்ட என்னை எவர் வில்லேற்றி எய்கிறார்கள்?” என்று. பிறகு மேலும் கேட்டது

“நான் எதை இலக்காகக் கொண்டு பாயும் அம்பு?” எனவும்.

சிரித்தவாறே பீஷ்மர் இப்படி விடையளித்தார் மழையின் கேள்விக் கணைகளுக்கு...

“ஏ! மழை என்னும் விசித்திர அஸ்திரமே! நீ எய்யப்படுகையில் ஒரு துளி, உனது வேகம் உன்னை பல்லாயிரமாய் உருமாற்றி விடுகிறது! ஒரு வேப்பந்தரு பூக்களைச் சொரிவது போல், வானம் பூப்புக் கொண்டு சொரிகிறது அற்புதமாய்! உன் பூத்தலின் வேகவே உனக்கு வசீகரம் வழங்குகிறது.

பூமி கொண்ட வனப்பின் மீது தீராத மோகம் கொண்ட ஆகாயம், அப்பூமியை அணைத்துக் கொள்ள, உன் சரபாணங்களை அனுப்பி கவ்விக் கொள்வதாகவே அறிகிறேன். எனவே நீ கடமை தவறாமல் சஞ்சாரம் புரி! அதனால் பூவுலகம் பெறும் பேரானந்தம்!” என்று.

அவ்வளவுதான் இதனைக் கேட்டு பூரண திருப்தி கொண்ட மழை கூட நனைந்தது, ஆனந்த மழையில்!

(‘உப பாண்டவம்’ என்ற பண்டைய நூலில் இது பொழியப்பட்ட ஒரு துளியே!)

**ஏன் கோபம்?**

நாம் செய்யும் அனைத்துப் பாவங்களுக்கும் அதிபதி கோபம் தான்!

நாம் எண்ணிய காரியம் நடக்காமல் போகையிலும், விருப்பப் பட்டதை அடைய முடியாத போதும், நம் எதிரி எனக் கருதப்பட்டவன் உயர்ந்த நிலையில் இருப்பதைக் காணும் போதும், நம்மை ஒருவர் ஏளனம் செய்யும் போதும் நமக்கு ‘பட்’டென்று கோபம் பிறக்கும்.

இந்தப் புயல்! வேகங்கொண்ட நேரத்தில், “தெய்வமே! எனக்கு பொறுமையை வழங்கு; இனியும் கோபப்பட்டு என்னைப் பாவத்தில் தள்ள வேண்டாமே!” என்று மனமுருக தியானிக்க வேண்டும். கோபம் என்பது நரகத்திற்கான கதவுதான்! இதன் பிறப்பிடம் வேறென்ன நம் முட்டாள்தனமே!

புலவர் நக்கீரர் பாடியருளிய ‘கோபப்பிரசாதம்’ எனும் நூலில், இறைவன் பரமேஸ்வரனால் அழிந்து போன தேவ, அசுர, மானிடர்களைப் பற்றிய விவரங்களை 87 வரிகளில் விவரமாகக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இருபத்து நான்கே நிமிடங்கள் செய்த தவத்துக்காக காட்சி அளித்த,

# யோக நரசிம்மப்பெருமாள்...!

## விளக்கும் எளிய கதை*

ஆழ்வார்கள் பாடிய நூற்றிஎட்டு திவ்ய தேசங்களுள் ஒன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள சோளசிம்மபுரம் எனப்படும் சோளிங்கர்.

திருக்கடிகை என்ற திருப்பெயரில் இவ்வூரை ஆழ்வார்கள் பாடியுள்ளார்கள்.

கடிகை என்பது ஒரு நாழிகைப் பொழுதைக் குறிக்கும். ஒரு நாழிகை இந்தத் திருத்தலத்தில் தங்கி இருந்தாலே, இத்தலம் முக்தியை அளிக்க வல்லது. அதனால் தான் திருக்கடிகை என்று இதனை ஆழ்வார்கள் அழைத்துள்ளார்கள்.

நரசிம்ம அவதாரத்தைத் தரிசிக்க விரும்பிய சப்த ரிஷிகள் எனப்படும் ஏழு முனிவர்கள், சோளிங்கர் மலைக்கு மேல் நரசிம்மர் யோக நிலையில் தவம் புரிவதை அறிந்து கொண்டார்கள்.


திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்




750 அடி உயரம் கொண்ட அந்த மலைக்கு மேல் சென்ற முனிவர்கள், யோகத்தில் இருக்கும் நரசிம்மர் தங்கள் முன்னே வந்து காட்சி அளிக்கவேண்டும் என்று வேண்டி ஒரு நாழிகை தவம் புரிந்தார்கள்.

ஒரு நாழிகை என்பது இருபத்து நான்கு நிமிடங்கள் ஆகும். அந்த இருபத்து நான்கே நிமிடங்கள் செய்த தவத்துக்காக விரைவில் மனம் உகந்து, யோக நரசிம்மப்பெருமாள் அவர்களுக்குக் காட்சி அளித்தார்.

அந்த யோக நரசிம்மரை அங்கேயே அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள்.மேலும், வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் வாங்க விழைந்த விசுவாமித்திரர், இந்த சோளிங்கர் மலைக்கு மேல் இருப்பத்து நான்கு நிமிடங்கள் தவம் புரியவே, வசிஷ்டர் அவரைத்தேடி வந்து பிரம்மரிஷி பட்டத்தைக் கொடுத்து விட்டுச் சென்றார்

மலைக்கு மேல் அம்ருதவல்லித் தாயாரோடு யோக நரசிம்மராகத் திகழும் திருமால், அந்த மலையின் அடிவாரத்தில் பக்தவத்சலப் பெருமாளாகக் காட்சி அளிக்கிறார்.

மேலும் திருக்கடிகை மலைக்கு அருகிலேயே 350-அடி உயரத்தில் சிறிய மலை ஒன்று உள்ளது. அந்த மலையிலே யோக ஆஞ்சநேயர் யோகம் செய்யும் நிலையில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கிறார்.

திருக்கடிகை யோக நரசிம்மப் பெருமாளை அக்காரக்கனி என்றும் ஆழ்வார்கள் அழைக்கிறார்கள்.

நரசிம்மருக்கு பிரதோஷ கால வழிபாடு மற்றும் பானகம் நெவேத்யம் செய்து வர ஜாதகத்தில் குறிப்பாக செவ்வாய் பகவானின் தோஷங்களும் மற்றும் கோப குணங்கள் போன்ற கெட்ட பலன்கள் குறைந்து நற்பலன்கள் உண்டாகும்.

யோகத்தில் கண்மூடி இருக்கும் நரசிம்மர், கார்த்திகை மாதத்தில் மட்டும் கண்திறந்து பார்த்து அடியார்களுக்கு அருள்புரிவதாக ஐதிகம் உள்ளது.

## ஸ்ரீ நரசிம்ஹர் ருண விமோசன ஸ்தோத்திரம்

நம் மனித வாழ்வீல் அனைவருக்கும் கடன், தீராத நோய், எதிரிகள் தொல்லை மற்றும் அவயோக கிரக பிடியில் சிக்கி தவித்து வருகிறோம். அவ்வாறு இருக்கும் அனைத்து சங்கடங்கள் மற்றும் பிரெச்சனைகளிலிர்ந்து விடுபட கீழே கொடுக்கப்பட்டுள்ள ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் ருண விமோசனா மந்திரைதை பாராயணம் செய்து வர மேன்மையான பலன்கள் கிட்டும்.

ஸ்ரீலக்ஷ்மிநரசிம்மப்பெருமாள் திருவடிகள் சரணம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ விமோசன ஸ்தோத்திரம்

தேவதாகார்ய ஸத்யர்த்தம் ஸபாஸ்தம்பம் ஸமுத்பம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மாஹாவீரம் நமாமி ருணமுக்தயே.

லக்ஷ்ம்யாலிங்கித வாமாங்கம் பக்தாநாம் வரதாயகம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மாஹாவீரம் நமாமி ருணமுக்தயே.

ஆந்த்ரமாலாதரம் சங்க சக்ராப்ஜாயுத தாரிணம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மாஹாவீரம் நமாமி ருணமுக்தயே.

லீமரணாத் ஸர்வ பாபக்நம் கத்ருஜ விஷநாசநம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மாஹாவீரம் நமாமி ருணமுக்தயே.

ஸிம்ஹநாதேந மஹதா திகதந்தி பயநாசநம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மாஹாவீரம் நமாமி ருணமுக்தயே.

ப்ரஹலாத வரதம் ஸ்ரீசம் தைத்யேச்வர விதாரிணம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மாஹாவீரம் நமாமி ருணமுக்தயே.

க்ருரக்ரஹை பீடிதாநாம் பக்தாநாம் மபயப்ரதம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மாஹாவீரம் நமாமி ருணமுக்தயே.

வேதவேதாந்த யஜ்ஞேசம் ப்ரஹ்மருத்ராதிவந்திதம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மாஹாவீரம் நமாமி ருணமுக்தயே.

யஇதம் படே நித்யம் ருணமோசந ஸம்ஜ்ஞ்தம்

அந்ருணீ ஜாயதே ஸத்யோ தநம் சீக்ரமவாப்நுயாத்.

சர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

# அஷ்ட லிங்கங்கள்

இது சித்தர்கள் தேடிவரும் சொர்க்கபூமி; ஞானியர் மனம் கவர்ந்த நல்லதோர் கருணை மலை!

சிவபெருமானின் திருவடியையும் திருமுடியையும் தேடிய பிரம்மனும், திருமாலும் தங்கள் முயற்சியில் தோற்றுவிட... இருவருக்கும் இறைவன் ஜோதி வடிவில்... அக்கினியாய்த் தோன்றி காட்சி கொடுத்த அன்பு மலை!

இந்த மலையின் உச்சியில் தான் கார்த்திகை மகாதீபத்தன்று இறைவனின் தரிசனம் அக்கினி வடிவாய்த் தோன்றுகிறது. இந்த நெருப்புப் பிழம்பினை விண்ணுலக தேவர்களும், மண்ணுலக மாந்தர்களும் உலகாளும் ஈசனாய் வழிபட்டு நெஞ்சம் நிறைகின்றனர்.

மலையின் சிறப்பே கிரிவலம் எனப்படுகிறது. அப்படி, இந்த மலையினை வலம் வரும்போது, எட்டுத்திக்கிலும்... திசைக்கொன்றாய் எட்டு லிங்கங்கள், கிரிவலம் வருகின்ற பக்தர்களுக்கு பேரருளை புரிகின்றன.

இந்திரலிங்கம், அக்னிலிங்கம், எமலிங்கம், நிருதிலிங்கம், வருணலிங்கம், வாயலிங்கம், குபேரலிங்கம், ஈசான்யலிங்கம் இவை அனைத்தும் அழகுடன் அமைந்து அண்ணாமலையாரின் ஆன்மிக அருளை அள்ளி வழங்குகின்றன.

கிரிவலப் பாதையில் இருப்பது, திருநேர் அண்ணாமலை எனப்படும் ஆலயமாகும். இறைவனின் இடப்பாகம் பெற்ற அன்னை உமையவள், தீப தினத்தன்று இங்கிருந்தே மலையின் உச்சியில் ஜோதி வடிவில் தோன்றும் இறைவனை வணங்குவதாக ஐதீகம்!

இது, ஆதி அண்ணாமலை என்றும், பாமர பக்தர்களால் அடி அண்ணாமலை என்றும் வழங்கப்படும் ஆலயம்.

இன்றிருக்கும் அருணாசலேஸ்வரர் ஆலயம் அமைவதற்கு முன்பே இந்த ஆலயம் பிரம்மனால் உருவாக்கப்பட்டது என்பார்கள்.

இந்த கிரிவலப் பாதையில் மேலும் ஒரு சிறப்பாக அமைந்துள்ளது இடுக்குப் பிள்ளையார் கோவில். இங்கிருக்கும் சிறிய இடுக்கின் வழியாக உட்புகுந்து வந்தால் நமது தோஷங்களும் துன்பங்களும் நீங்குவதாக பக்தர்கள் நம்புகின்றார்கள்.

இந்த மலையின் வடிவத்திலேயே பிரபஞ்ச சூட்சுமம் உள்ளது. அதாவது, இந்த மலையை ஓரிடத்தில் நின்று பார்த்தால் ஒரு முகடாகத் தோன்றும்.

இது, 'இறைவன் ஒருவனே; என்பதை உணர்த்தும்.

இன்னொரு இடத்தில் மலையின் தோற்றம் இரண்டு முகமாகக் காட்சியளிக்கும்.

இது, 'சிவசக்தி' என்னும் இரு நிலையை உணர்த்தும்.



# அற்புத பலன்களைக் கொடுக்கும் செல்லப்பிராட்டி பரப்பிரம்ம சக்தி ஸ்ரீ அக்ஷரலலிதா செல்வாம்பிகை!




ஆதி ரூபமாக எல்லோரையும் படைத்த மூலசக்தியாக விளங்கும் ஆதிபராசக்தியை பரப்பிரம்ம சக்தி, பரம் பொருள் என்றெல்லாம் அழைக்கின்றனர். காலப் பிரம்மம் ஆகிய காலத்தின் சக்தி வடிவம் தான் பார்வதி. அர்த்தப் பிரம்மம் ஆகிய ஒளியின் சக்தி வடிவம் லெக்ஷ்மி. நாதப் பிரம்மம் ஆகிய ஒலியின் சக்தி வடிவம் சரஸ்வதி. இந்த மூன்று தேவிகளும் ஒன்றாக இணைந்த சக்தி வடிவம்தான் லலித்தை என்கின்ற ஆதிபராசக்தி.

இந்த முப்பெரும் சக்திகளை தனித்தனியாகவும், ஒரு சில இடங்களில் சேர்ந்தும் அருள்பாலிக்கும் கோயில்கள் சில உண்டு. ஆனால், இந்த மூன்று சக்திகளும் சேர்ந்து பரப்பிரம்ம சக்தியாக விழுப்புரம் மாவட்டம் , செஞ்சி வட்டத்தில் உள்ள செல்லப்பிராட்டி என்ற சிற்றூரில் ஸ்ரீ அக்ஷ்ர லலிதா செல்வாம்பிகை அம்மனாக அருள் பாலித்து வருகிறார்.

ரிஷ்ய சிருங்க மகா ரிஷி தமது தவ வலிமையால், இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்கிற மூன்று சக்திகளையும் ஒருங்கிணைத்து உலகைக் காக்கும் அன்னையாகிய லலித்தையின் மூல ஒலிக் கோடுகளைக் கொண்டு உலகை இயக்கும் ஆதார சக்திகளை பன்னிரண்டு அக்ஷரங்களாக யந்திர வடிவில் பிரதிஷ்டை செய்து கருவறையில் உள்ள கல்லில் பதித்து வழிப்பட்டார். இந்த யந்திரம் தான் இந்த ஆலயத்தின் மூலவர். பிற்காலத்தில் கீழே அம்மன் விக்ரகம் வைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அம்மன் வீரமும், செல்வமும், கல்வியும் தரும் பார்வதி, லெக்ஷ்மி, சரஸ்வதியாக மூன்று சக்திகளும் ஒரே சக்தியாக விளங்கி இங்கு பரப்பிரம்ம சக்தியாக தம்மை நாடி வந்து வணங்கும் பக்தர்களுக்கு அற்புத பலன்களைக் கொடுத்து அருளுகின்றார்.

**ஸ்தல வரலாறு:**

இந்த ஸ்தலம் மிகவும் பழமை வாய்ந்தது. இராமாயண காலத்தில் (திரேதாயுகம்) இராமபிரானது அவதாரத்துக்குக் காரணமான புத்திர காமேஷ்டி யாகத்தை, தசரத சக்கரவர்த்திக்குச் செய்து கொடுத்த ரிஷ்ய சிருங்கர் என்ற முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்ட ஸ்தலம்.

இராமன் சீதையை மீட்க இலங்கை செல்வதற்காக இத்தலத்தில் நவராத்திரி ஒன்பது நாட்களும் தச மகா வித்யா யாகங்கள் செய்து வழிப்பட்டு இராவணனை வென்றார் என்று ஸ்தல புராணம் கூறுகிறது.

ஆதிசங்கரர் காஞ்சிபுரம் செல்லும் வழி தெரியாத நிலையில் ஒரு இரவு வேளையில் இத்தலத்தில் தங்கிச் சென்றிருப்பதாகவும் அப்போது அம்பாள் இவருக்கு இங்கே காட்சி கொடுத்திருக்கிறார் என்றும் வரலாறு கூறுகின்றது.

15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் செஞ்சியை

ஆட்சி செய்த விஜய நகரப் பேரரசு மன்னர் தீராத நோயால் அவதிப்பட்டு பலவித சிகிச்சை செய்தும் குணமாகாததால் இந்த கோயிலுக்கு வந்து ஸ்ரீ லலிதா செல்வாம்பிகை அம்மனை வழிபட்டதால் மன்னரின் வியாதி பூரணமாகக் குணமானது என்று தொல்லியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

செஞ்சியை ஆண்டு வந்த தேசிங்குராஜா போருக்குச் செல்லும் முன் இத்தலத்திற்கு வந்து அம்மனை வணங்கிவிட்டு போருக்குச் செல்வது வழக்கமாகக் கொண்டு இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஸ்தல அமைப்பு:

ஐந்து நிலையுடன் கூடிய கிழக்கு நோக்கி இராஜகோபுர வாயில் உள்ள இக்கோயிலில், முன்மண்டபம், மகா மண்டபம், கருவறை மற்றும் ஒரு பிரகாரம் என அமைந்துள்ளது. மகா மண்டபத்தில் மூன்று திருவாயில்கள் உள்ளன. பிரகாரத்தில் பலி பீடம். சிம்ம வாகனம் ஆகியவை அமைந்துள்ளது. பிரகாரத்தில் சிவ சக்தி, விஷ்ணு சக்தி, பிரம்ம சக்தி உள்ளனர்.

கருவறையில் மூலவரான கற்பலகை, அலங்காரத்துடன் ஒரு பீடத்தின் மேல் தரிசனம் தருகிறது. இதன் வடக்கு முகம் சற்று ஏறியும், தெற்கு முகம் சற்று இறங்கியும் காட்சி தருகிறது. கற்பலகையின் முன் உற்சவர் கோலத்தில் எட்டு திருக்கரங்களுடன் நீண்ட சூலாயுதம் தாங்கி, நாகக் குடையுடன் அமர்ந்த கோலத்தில் ஸ்ரீ லலிதா செல்வாம்பிகை கம்பீரமாகக் காட்சி தருகிறார். மற்றும் ஸ்ரீ செல்வ விநாயகர், ஸ்ரீ சூலினி, ஸ்ரீ அய்யனார், ஸ்ரீ எல்லைப் பிடாரி, ஸ்ரீ சப்த கன்னியர், ஸ்ரீ அம்மச்சார், ஸ்ரீ வனதுர்கா மற்றும் ஸ்ரீ வேடியப்பன் சந்நிதிகள் ஆலயத்தைச் சுற்றி ஓம் என்ற வடிவில் அமைந்து உள்ளன. இந்த ஆலயத்தில் மகா மண்டபத்தில் ரிஷ்ய சிருங்க மகா ரிஷியும் அமர்ந்த நிலையில் அருள்பாலிக்கின்றார்.

### கற்பலகையின் சிறப்பு:

உருவ வழிபாட்டிற்கு முன்னர் ரிஷிகளும், மகான்களும் அட்சரங்கள் வடிவிலோ, சக்கரங்கள் வடிவிலோ வணங்கி வந்தனர். பின்னர் பல கோவில்களில் அம்மனை சிலை வடிவமாகப் பிரதிஷ்டை செய்திருப்பார்கள் ஆனால் இங்கு மூலவராக வணங்கப்படும் அம்மன் கற்பலகை வடிவில் இருக்கிறார். இந்த கற்பலகை நான்கு அடி, அகலமும், ஆறு அடி உயரமும், செவ்வக வடிவம் கொண்டது. கற்பலகையில் பன்னிரண்டு சதுரக்கட்டங்கள் உள்ளன. இந்தக் கட்டங்களைச் சுற்றி, உலக நாயகியான ஆதிபராசக்தியின் பீசாட்சர மந்திரத்தின் சூட்சும எழுத்துக்கள் உள்ளன. வலது மேல் பக்கத்தில் சூரியனும், இடது மேல் பக்கத்தில், சந்திரனும் பொறிக்கப்பட்டுள்ளன. நடுநாயகமாக முப்பெரும் தேவியரின் அம்சங்களையும் ஒருங்கிணைத்து, அம்மனின் திருவுருவம் திரிசூலம் வடிவில் உள்ளது. இங்கு உருவ வழிபாடு கருதி கற்பலகைக்குக் கீழே மூன்று அடி உயரத்தில் அம்பாள் சிலை வைத்துள்ளனர்.

### அம்மனின் திருவுருவம்:

இத்தல அம்மனுக்கு எட்டுக்கரங்கள், நெற்றியில் பிறைச்சந்திரன், ஐந்துதலை நாகம், சூலம் ஆகியவற்றுடன், இடது காலை மடித்து வலது காலை தொங்கவிட்டு தாமரை பீடத்தில் சாந்த சொரூபிணியாக அமர்ந்துள்ளார். வலது திருக்கரம் பக்தர்களைக் காக்கும் படியும், இடது திருக்கரம் பாதத்தை நோக்கியபடியும் அமைந்துள்ளது. மற்ற ஆறு கரங்களில் பார்வதிக்குரிய பாசம், அங்குசம், லெக்ஷ்மிக்குரிய சங்கு, சக்கரம், சரஸ்வதிக்குரிய கமண்டலம், அக்ஷயமாலை ஆகியவை உள்ளன.

### ஸ்தல சிறப்பு:

“புத்திர காமேஷ்டி யாகம் நடத்திய ரிஷ்யசிருங்கர் பிரதிஷ்டை செய்த யந்திரம் இக் கோயிலில் உள்ளதால், குழந்தைப் பேறு இல்லாதவர்கள் அம்பாளுக்கு அபிஷேகம் செய்து, பால் பாயசம்

நைவேத்தியம் செய்தால் பிள்ளைப் பேறு கிடைக்கும் என்பது ஐதீகம்.

இங்கு நவராத்திரி ஒன்பது நாட்களும் இராவணனை வெல்ல இராமன் வழிபட்டதால், இத்தலத்திற்கு வரும் பக்தர்களின் தீர்க்கவே முடியாத எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு வேண்டி, பிரார்த்தனை செய்து கொண்டால் குறித்த காலத்துக்குள் அம்பாள் அதை நிறைவேற்றி வைப்பார்.

திருமணம் ஆகாதவர்கள் பௌர்ணமி நாட்களில் இந்த அம்பாளுக்கு பன்னிரண்டு நெய் தீபங்கள் ஏற்றி கல்யாணமாலை சாற்றினால் திருமணம் நிச்சயம் நடக்கும் என்பது நம்பிக்கை, பிரார்த்தனை நிறைவேறியதும் தம்பதிகளாக வந்து அம்பாளை வணங்கிச் செல்கின்றனர். மற்றும் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் பௌர்ணமி நாட்களில் நடக்கும் யாகத்தில் கலந்து கொண்டால் தீராதநோயும் தீரும் என்பது பக்தர்களின் தீராத நம்பிக்கை.

### கோயில் திருவிழாக்கள்:

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை விரதம், மாதந்தோறும் பௌர்ணமி விரதம் முக்கியமானவை. இங்கு நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஆடி மாத செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இந்த அம்பாளை வழிபடுவது மிகவும் சிறப்பானது.

### கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை 6:00 மணி முதல் 12:00 மணி வரை
மாலை 4:00 மணி முதல் 9:00 மணி வரை
திறந்திருக்கும்.

### கோயிலுக்குச் செல்லும் வழி:

திண்டிவனத்திலிருந்து 30 கி.மீ. தொலைவிலும், மேல்மலையனூரிலிருந்து 10 கி.மீ. தொலைவிலும், திருவண்ணாமலையிலிருந்து 40 கி.மீ. தொலைவிலும் இக்கோயில் அமைந்துள்ளது.
செஞ்சியில் இருந்து சேத்துப்பட்டு செல்லும் சாலையில்
5 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குச் செல்ல பஸ் வசதி உண்டு.
செல்லப்பிராட்டி கூட்ரோடு நிறுத்தத்தில் இறங்கி அரை கி.மீ. நடந்தால் கோயிலை அடையலாம்.
செஞ்சியில் இருந்து ஆட்டோக்களில் செல்லும் வசதியும் உள்ளது.

### காயத்திரி மந்திரம்:

ஓம் ஜெகன் மாத்ருகாய வித்மஹே
பரபிரம்ம தத்துவஜாய தீமஹி
தன்னோ அக்ஷ்ர லலிதாசெல்வாம்பிகாயை ப்ரசோதயாத்!!!



திருவாரூர் சு.சேகர்

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

**திருவண்ணாமலை கிரிவலம் போன்று வேறு எங்கும் அது மேற்கொள்ளப்படுகிறதா?**

ஒரு சில இடங்களில்தான். சிறப்பாக வடக்கே உள்ள மதுரா தலமருகில் கோவர்த்தனகிரி உள்ளது. யாதவர்கள் மீது இந்திரன் கோபமழை வர்ஷித்த போது அம்மலையை கிருஷ்ணர் குடையாகப் பிடித்துக் காத்ததால் அதனை பகவான் கண்ணனாகவே மக்கள் பாவித்து வழிபடுகிறார்கள்.

"பரீக்ரமா" என்னு வடஇந்திய மக்களால் கூறப்படும் கோவர்த்தன கிரிவலம், 23 கி.மீ தூரங்கொண்டது. ஆரம்பித்து முடிக்க சுமார் 6 மணி நேரம் தேவைப்படும்.

கிரிவலம் புரிகையில் ராதாகுண்டம், சியாம குண்டம் என்ற திருக்குள தரிசனமும் கிடைக்கும். மூன்று உலகங்களிலும் மிக மிகப் புனிதமான இடம் ராதா குண்டம்தான் என அங்குள்ள கௌடிய வைஷ்ணவ ஆச்சார்யார்கள் உறுதியாகச் சொல்வார்கள். ராதை - கிருஷ்ணர் தொடர்புடைய பல நிகழ்ச்சிகள் அங்கு நடந்துள்ளதே அதன் காரணம்.

கண்ணன் மீது ராதை கொண்ட காதலால், பக்தியால் கரைந்து கண்ணீர் உருக, அது ராதா குண்டமானது. அது போன்றே தன் நேசத்துக்குரிய ராதை மீது அன்பு அதிகமானதால் பகவான் கிருஷ்ணர் உருக, அதுவே சியாம குண்டமாயிற்று. மிகுந்த அன்பின் வெளிப்பாடான ராதா குண்டம், சியாம குண்டம் போற்றப்பட வேண்டியதுதான். திருச்சி மலைக்கோட்டையும் ஒரு கிரிவலதலமே!

**சுந்தரர் பாடிய "திருத்தொண்டர் தொகை" நூல் பெற்ற சிறப்பென்ன?**

தன்பால் அன்பும், பக்தியும் கொண்ட சிவனடியார்கள் கொண்ட பெருமையை, சிவனே இப்படிக் கூறியுள்ளார். "பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்" என்று கூறியுள்ளார்.

அது மட்டுமல்லாது சுந்தரர் திருத்தொண்டர் தொகை பாடுவதற்கு இறைவனே "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்ற முதலடியும் எடுத்துத் தர, அந்நூல் மேலும் சிறப்பும், புனிதமும் கொண்டதானது.

**கங்கை நதியின் பிறப்பு?**

"புனிதமான திருமாலின் பாத கமலங்களிலிருந்து புறப்பட்டு, பின் பிரம்ம தேவனின் கமண்டலத்திலிருந்து கிளம்பி பரமேச்வரனின் சடையிலிருந்து தாளகதியோடு கங்கை வீழ்வதாக" கங்கையின் பிறப்பை அக்காலக் கவிஞர் தான்சேன் அழகாக எடுத்துரைத்துள்ளார் தனது தாய்மொழியில்.

**சென்னையில் ஒரு குருஸ்தலம் உள்ளதா?**

தொண்டை நாட்டின், பாடல் பெற்ற 32 தலங்களில் சென்னை "பாடி"யும் ஒன்று. இங்குள்ள சிவாலயத்தில் அன்னை தாயம்மை சமேத திருவலிதாய நாதர் குடிகொண்டு அருள் பரிபாலிக்க, இதற்கு திருவலிதாயம் என்ற பெயருமுண்டு.

தன் தந்தை வியாழ முனிவர் பெற்ற சாபத்தால், அவருடைய மகன் வலியன் கருங்குருவியாகப் பிறந்து இங்கே ஈசுவரனை வழிபட்டு சாபம் நீங்கி பலன் பெற்றுள்ளான்.

மூன்று நிலைகள் கொண்ட இந்த சிவாலயத்தில் குருபகவானுக்குத் தனி சன்னிதி உள்ளது. திருமணப் பேறு, மக்கட்பேறு வேண்டுவோர் தோஷப் பரிகாரமாக 9 அல்லது 21 வாரம் (அவரவர்களுக்கு விதித்தபடி) நெய்தீபமேற்றி கடைசி வாரத்தில் அர்ச்சனை, அபிஷேகம் செய்து குருவிற்கு மஞ்சள் நிற ஆடை சார்த்தி பலன் பெறலாம்.

இந்த ஆலயத்தின் ஒரு சிறப்பாக சிவனைத் துதிக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயரை தரிசிக்கலாம்.

**வைணவ ஆசாரிய மரபு விவரமென்ன?**

ஆசாரிய மரபு இப்படித் தொடங்கி செல்கிறது.

ஸ்ரீமந் நாராயணனான பரம்பொருளில் ஆரம்பித்து, குருபரம்பராக்ரமமிருக்கிறபடி, எம்பெருமான், பெரிய

பிராட்டியார், ஸேனை முதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, உடையவர், எம்பார், பட்டர் நஞ்ஜீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதி பிள்ளை, பிள்ளை லோகாச்சார், திருவாய் மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள் என்று கூறுகிறது வைணவ நூல்களில் ஒன்றான "த்ரீம்சத் ப்ரச்நோத்ரம்" என்பது.

**"நீர்க்கோல வாழ்வு" என்று வாழ்க்கையின் தத்துவத்தை மகாகவி கம்பன் ராமாயணக் காப்பியத்தில் எந்த பாத்திரம் மூலம் வெளிப்படுத்துகிறார்?**

"அரிசி மாக்கொண்டுப் போடுவது கோலம். வெறுந் தண்ணீரால் கோலம் போட்டால் என்னவாகும்? அது ஆவியாகிவிடும். இதுதான் மானிட வாழ்வு! ஆனாலும் என் தமையன் இலங்காதிபதி அந்த வாழ்க்கை மீது மிக விருப்புக் கொண்டு என்னை வளர்த்து ஆளாக்கிவிட்டிருக்கிறான். அதற்கு யான் என்னுயிரைக் கொடுத்து தானே ஆக வேண்டும்" என்று தம்பி கும்பகர்ணன் வாயிலாக அந்த "நீர்க்கோல வாழ்வு" வெளிப்படும். அந்த சுவையான கம்பன் பாடல் இதுதான்.

"நீர்க்கோல வாழ்வை நச்சி
நெடிதுநாள் வளர்த்துப்பின்னைப்
போர்க்கோலம் செய்துவிட்டார்க்(கு)
உயிர்கொடா (து) அங்குப்போகேன்"

**பகவான் கண்ணன் தன்னை இடையன் என்று கூறிக் கொண்டாராமே, எப்படி?**

அவர் தான் வளர்ந்த சாதிப்பிரிவை கூறவில்லை. கிருஷ்ணர் கூறிய விதமென்ன என்று பார்ப்போம்.

இடையன் நான். எப்படி? தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையில் நிற்பவன்; தேவருக்கும் தானவருக்கும் இடையில் இருப்பவன்; மேலுக்கும், கீழுக்கும் இடையில் இருப்பவன்; பக்தர்களுக்கிடையில் இருப்பவன்; கீதாஉபதேசத்தை அர்ஜுனனுக்கு போரின் இடையில் அருளியவன்; பாண்டவருக்கும், கௌரருக்கும் இடையே தூதனாகச் சென்றவன்.

ஒரு சமயம் கோகுலத்தில் உரலில் கயிற்றால் கட்டியது என் இடையில்தான். காவிரிக்கும், கொள்ளிடத்திற்கும் இடையில் ஸ்ரீரங்கத்தில் இருக்கும் இடையன்;

பக்தன் புண்டரீகனுக்குக்காக காத்திருக்கையில் என் கையை நான் வைத்திருந்தது இடையில்.

ருக்மணி, சத்யபாமா ஆகிய இரு பத்தினிகளுக்கும் இடையில் மாட்டிக் கொண்டவனும் நானே!

இப்படி "இடை" விடாமல் ஒரு கட்டுரையில் பிரபல எழுத்தாளர் திரு.டி.எஸ். ராகவன் சுவையாகத் தந்ததே மேலே உள்ள விடையாக அமையும்! இதற்கு இடையில் நமது குறுக்கீடு ஏன்?

**செப்பேடுகள் அக்காலத்தில் செய்யும் செயலுக்கு ஏற்ற பெயர்களைக் கொண்டிருந்ததா?**

அரசர்கள் காலத்தில் அறக்கட்டளையின் பொருட்டு பலப்பல செப்பேடுகள் வெளியிடப்பட்டன.

மன்னர்கள் சிற்றூர்களுக்கு சில சமயங்களில் (இக்கால ஜி.ஓ. என்ற அரசாணை போல) வரி நீக்கித் தானம் செய்வார்கள். சிவாலயத்துக்கு வழங்கும் தானங்களை தேவதானச் செப்பேடு என்பார்கள்.

வைணவ ஆலயங்களுக்குத் தரப்படுபவை திருவிடையாட்டம் என்பது.

ஜைன, பௌத்தத் திருக்கோயில்களுக்கு கொடுக்கப்படுபவை பள்ளிச் சந்தம் ஆகும்.

நான்கு வேதங்களையும் கற்ற பண்டிதர்களுக்கு வழங்கப்படுபவை 'சதுர்வேதி மங்கலம்" ஆகும்.

ஒரு நாட்டின் ராஜா சில முக்கியத்துவம் உள்ள அறக்கொடைக்கு ஆணையிட்டால் அது ஓலை வடிவில் வெளியிடப்பட்டு, பிறகு அதனை தானமாக அடைந்தவர் தன் ஈசாந்தத்தை, உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள அரசே அதனை செப்பு உலோகத்தில் ஒரு ஆவணமாக ஆக்கிக் கொள்ள அனுமதி அளிக்கும். அதுவே "செப்பேடுகள்" என கூறப்படுகின்றன.

**ஸ்ரீரங்கம் என்றால் திருவரங்கன் எண்ணம் வருவது போல இன்னும் எவை எவை நினைவுக்கு வரும்?**

காவிரி, கொள்ளிடம் ஆகிய இரண்டு ஆறுகளுக்கிடையே உள்ள திருவரங்கத்தில் உள்ள பெருமாள் ஆலயம் 13 நிலைகளுடன் காட்சி தரும் 236 அடி உயரம் கொண்ட பிரம்மாண்ட தென்புற இராஜகோபுரம்,

156 ஏக்கர் பரப்பில் கொண்டுள்ள ஏழு பிரகாரங்கள், அந்த 7 பிரகாரங்களின் மதில் சுவர்கள் கொண்ட நீளமான 32,592 அடிகள் (ஆறுமைல் நீளம்)

அழகான தைத்தேர்,

ஆலயத்தைச் சுற்றி அமைந்துள்ள அழகிய வீதிகள் கம்பராமாயணம் அரங்கேறிய "அரங்கேற்ற அழகிய மண்டபம்"

993 தூண்கள் உள்ள 1000ங்கால் எழில் மண்டபம்,

14 அடி உயர கம்பீர பெரிய கருடாழ்வார்,

இன்னும் எத்தனையோ, எந்த விழியில் எதைக் கொண்டு வருவது என்ற திகைப்பு நம்மை சூழும்.

**லலித கலைகளுக்கு அதிதேவதையாக விளங்குபவள் யார்?**

கேரளாவில் உள்ள பிரசித்திப் பெற்ற கொல்லூர் முகாம்பிகைதான்.
உற்சவத் திருமேனியாக இங்கே ஆலயத்தில் தேவியின் சரஸ்வதி அம்சம் காட்சி தருகிறது.
இந்த சன்னிதியோடு கூடிய மண்டபத்தில்தான் பிரசித்திப் பெற்ற ஓவியர் மன்னர் ரவிவர்மா இருபது தினங்கள் தங்கி தன்னுடைய எழிலான ஓவியங்களை சரஸ்வதி தேவிக்கு ஒரு காலத்தில் அர்ப்பணித்திருக்கிறார்.

**தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதய்யரும், தெய்வீக நூலாசிரியர் திரு.செங்கல்வராயப் பிள்ளையும் பரஸ்பரம் நெகிழ்ந்த சம்பவம் என்ன?**

ஒரு சமயத்தில் “ஐயனே! இந்த நூலை தாங்கள் பார்வையிட வேண்டும்” என தன்னை விரும்பிக் கேட்ட ஆசிரியர் செங்கல்வராய பிள்ளைப் பார்த்து, “என்ன நூல் அது?” என ஆவலுடன் டாக்டர் உ.வே.சா. வினவினார்.
“யான் திருப்புகழ், சுந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகிய மூன்றையும் ஒன்று திரட்டி புதிய நூலாக யாத்துள்ளேன்” என பதில் வந்தது.
“அப்படியா?” என்ற ஐயர், அந்நூலை சிறிது நேரம் ஊன்றி பார்த்துவிட்டு பெரும் மகிழ்ச்சியுற்றார். உடனே எதிர்பாராத வகையில் அந்நூலாசிரியரின் கரங்களைப் பிடித்து தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். இதனால் பதறிப்போன பிள்ளையிடம், “உமது கைகள் கந்தவேளின் பெருமைகளை ஆராய்ந்த கைகள் என்பதாலேயே அதனை ஒற்றிக் கொண்டேன்” என அதற்கு விளக்கஞ் சொன்னார் தமிழ்த்தாத்தா.
உ.வே.சா. விடமிருந்து செங்கல்வராயப் பிள்ளை விடைபெறுந் தறுவாயில், டாக்டரின் பாதக் கமலங்களைப் பிடித்து நெடுஞ்சாண்கிடையாக நமஸ்காரம் செய்தார் பிள்ளை. இந்நிகழ்வு உ.வே.சா.வுக்கு அதிர்ச்சியைத் தர, அதற்குப் பிள்ளையவர்கள், “எத்தனையோ காலம், சங்க இலக்கியங்களைத் தேடித் திரட்ட அலைந்த கால்களல்லவா, இவை?” என பெருமிதத்துடன் பதிலளித்தார்.
“கற்றாரைக் கற்றாரே காமுறுவர்”

**பாரத மாதாவுக்கு கூட ஆலயமுள்ளதா?**

போர்பந்தர் அனைவரும் அறிந்த ஊர். குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ளது.
இங்குதான் பாரதமாதாவுக்கு ஆலயம் உருவாக்கப்பட்டுள்ளது.
கோவிலின் தரையில் பெரிய இந்தியப் படம் பதிக்கப்பட்டுள்ளது. அதில் அனைத்து மாநிலங்கள், அவை கொண்ட சிறப்புகள் பதிவாகியுள்ளன.
அக்கோயில் சுவர்கள் முழுமையும் சுதந்திரப் போராட்ட விவரங்கள் ஓவியங்களாய் இடம் பெற்றுள்ளன. பாரதமாதாவுக்கு ஜே!

**மகான் அரவிந்தர் இயற்றிய “சாவித்ரி“ காவியச் சிறப்பென்ன?**

ஸ்ரீ அரவிந்தர் உருவாக்கிய ஆங்கில மொழி சாவித்ரி காவியம் பதினான்காயிரத்துக்கும் மேற்பட்ட வரிகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் இடம்பெறும் யமதர்மனுடன், பத்தினி சாவித்ரி நிகழ்த்தும் உரையாடல்களே 1500 வரிகளுக்கு மேல் எழுதப்பட்டுள்ளது. இந்த உரையாடல்களில் மெஞ்ஞானம் மறைபொருளாக ஊடுருவியுள்ளது. இதோ சில வாக்கியங்கள் சாவித்ரி உரைப்பது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல -

"My will is greater than thy law, O Death,

My love is stronger then the bonds of fate

Our love is the heavenly seal of supreme"

இதன் தமிழ் மொழியாக்கமிது

“காலனே! நீ கொண்ட சட்டம், விதி இவைகளை விட எங்களிடையே உள்ள அன்பானது மிக வலுவுள்ளது. அது பேராற்றலின் முத்திரை பதிக்கப்பட்ட தெய்வீக அன்பு” (சாவித்ரி குரலில்)



விஜய்

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# டிசம்பர் மாத பலன்கள் 2022



## மேஷம்

அனைத்து விதமான நன்மைகளும், லாபங்களும் கிடைக்கும் மாதம் ஆகும். வருமானம் அதிகரிக்கும், சேமிப்புகளை உயர்த்த முடியும். வீட்டிற்குத் தேவையான புதிய பொருட்கள் வாங்குவீர்கள். புதிய முயற்சிகள் வெற்றி தரும். பயணங்கள் அதிகரிக்கும், பயணங்களால் லாபம் கிடைக்கும். தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை. வீடு, சொத்து வாங்கும் எண்ணங்களை தள்ளிப்போடலாம். திருமணம் கைகூடும். வாழ்க்கைத் துணைவரால் நன்மைகள் மற்றும் மகிழ்ச்சி கிடைக்கும். குழந்தை பாக்கியம் உண்டு. குழந்தைகளால் நன்மை நடக்கும். கூட்டாளிகளால் தொழில் வளர்ச்சி கிடைக்கும். தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். நீண்டதூர பயணங்களால் நன்மை நடக்கும். ஆன்மிக யாத்திரை மன நிம்மதியைத் தரும்.



## ரிஷபம்


இந்த டிசம்பர் மாதத்தில் உங்களின் பலம் அதிகரிக்கும். அனைத்து செயல்களிலும் வெற்றி காணும் சக்தியைப் பெறுவீர்கள். தன்னம்பிக்கை, தைரியம் அதிகரிக்கும். அனைத்து விதமான பாதிப்புகளையும் வெற்றிகொண்டு முன்னேறுவீர்கள். கடன் பிரச்சனைகள் தீரும். உடல் நலம் சீராகும், மருத்துவ செலவுகள் இருக்காது. வழக்குகளில் இருந்து விடுபடுவீர்கள். திடீர் தன வரவு ஏற்பட்டு பொருளாதாரத்தில் முன்னேறுவீர்கள். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உங்கள் கனவுகள் நனவாக வாய்ப்புகள் உண்டு. காதல் திருமணம் நடக்க வாய்ப்புகள் உண்டு. வீடு, வாகனம், சொத்துகள் வாங்கலாம். நீண்ட தூர பயணங்களைத் தவிர்ப்பது நலம்.



## மிதுனம்

இந்த டிசம்பர் மாதத்தில் நன்மைகள் அதிகரிக்கும். முன்னோர்கள் வழிபாட்டால் முன்னேற்றம் அடைவீர்கள். மிக எளிமையாக உங்கள் இலக்கை அடைவதற்கு முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். சமுதாயத்தில் மதிப்பு, மரியாதை கிடைக்கும். பொதுஜன தொடர்பில் இருப்பவர்களுக்கு உதாரணமாக, அரசு அதிகாரிகள், அரசியலில் இருப்பவர்களுக்கு புகழ் கிடைக்கும். நீங்களாக முன்நின்று நடத்தும் அனைத்து செயல்களும் வெற்றியடையும். மாத பிற்பகுதியில் அதிர்ஷ்டத்தின் மூலம் பொருளாதார உயர்வு பெறுவீர்கள். சிறு செயல்கள் கூட பெரிய லாபங்களைத் தரும். அனைத்து தடைகளும், பாதிப்புகளும் நீங்கும். உங்கள் வாழ்வில் பெரிய மாற்றங்கள், ஏற்றங்கள் கிடைக்கும் மாதம். எதிரிகளிடத்தில் இருந்து விலகி இருப்பது மன நிம்மதியைத் தரும்.






# கடகம்

இந்த டிசம்பர் மாதத்தில் அனைத்து செயல்களிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குருவழிபாடு எந்த பாதிப்பும் இல்லாமல், பாதுகாப்பாக காலத்தை கடக்க உதவும். குருமார்களின் தரிசனமும் அவர்களின் ஆசீர்வாதமும் உங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும். முன்னோர்களின் வழிபாடு தடைகளை நீக்கும் மற்றும் கண்டங்கள் ஏற்படாமல் இருக்கும். தனித்து எந்த முடிவுகளும் எடுக்கக் கூடாது. நீங்களாக பாதிப்புகளில் மாட்டிக் கொள்ள வாய்ப்பு உண்டு. உங்கள் நண்பர்கள் விலகிச் செல்வார்கள். உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது. அனைவரையும் அனுசரித்து செல்வது நலம். தொழிலில் முதலீடுகள் செய்ய வேண்டாம். வாழ்க்கைத் துணைவரை அனுசரித்து செல்வது நன்மை தரும்.



# சிம்மம்

இந்த டிசம்பர் மாதத்தில் நீங்கள் இழந்தவை அனைத்தும் உங்களுக்கு மீண்டும் கிடைக்கும். பெரிய நன்மைகள் நடக்கும் காலமாகும். சமுதாயத்தில் மதிப்பு, மரியாதை, புகழ் அனைத்தும் கிடைக்கும். அனைத்து பாதிப்புகளும் நீங்கி முன்னேற்ற பாதையில் பயணிப்பீர்கள். வீடு, வாகனம், சொத்து போன்றவைகளை வாங்குவதற்கு வாய்ப்புகள் வரும். திருமணம் கைகூடும், புத்திர பாக்கியம் உண்டு. பூர்வீகம் சார்ந்த செயல்களில் ஈடுபடுவதால் புகழ் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் அடையும், வருமானம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்த்து அன்றாட செயல்கள் செய்தாலே முன்னேற முடியும். இந்த மாதம் கிடைக்கும் லாபங்களை சேமிக்க வேண்டும். தொழிலில் முதலீடு செய்யக்கூடாது. வேலை வாய்ப்புகள் வெளிநாட்டில் கிடைக்கும். உங்கள் குறிக்கோள்களில் தீர்க்கமாக இருந்தால் நிச்சய வெற்றி கிடைக்கும்.



# கன்னி

இந்த டிசம்பர் மாதத்தில் உங்கள் தேவைகள் அனைத்தும் நிறைவேறும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் கிடைக்கும். நினைத்தது நடக்கும். வெற்றிகள் கிடைக்கும். கனவுகள் பலிக்கும். அனைத்து விதமான நல்லவையும் பரிபூரணமாக நடக்கும். தாயின் ஆதரவால் முன்னேறுவீர்கள், பூர்வீக சொத்துகள் கிடைக்கும். உங்கள் தகுதி உயரும். புதிய திட்டங்களால் லாபம் கிடைக்கும். சிறுதூர பிரயாணங்கள் அதிகரிக்கும். பயணங்கள் நன்மை தரும். பிறரின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பது மூலம் புகழ் கிடைக்கும். வேலையில் சீரான முன்னேற்றம் இருக்கும். திருமண தடைகள் நீங்கும். நீங்கள் எதிர்பார்த்தவாறு வாழ்க்கைத் துணைவர் அமைவார். தொழில் முதலீடுகளைத் தவிர்ப்பது நலம்.




## துலாம்

இந்த டிசம்பர் மாதத்தில் வருமானம் அதிகரிக்கும், வரும் வருமானத்தை சேமிக்கவும், புதிய முயற்சிகளுக்காக செலவழிக்கக் கூடாது. புதிய முயற்சிகளில் ஈடுபட பல வாய்ப்புகள் தேடி வரும். அனைத்து வாய்ப்புகளையும் முதலீடு செய்யாமல் பயன்படுத்துவது நஷ்டம் ஏற்படாமல் தவிர்க்கும் மற்றும் முன்னேற்றத்தை தரும். கடன் மற்றும் உடல் நல குறைபாடுகளுக்காக வருமானம் செலவாக வாய்ப்புகள் உண்டு. ஆகையால் அனைத்து செயல்களிலும் கவனமாக இருக்க வேண்டும். கூட்டுத்தொழிலில் ஈடுபடக் கூடாது. கூட்டாளிகளால் பாதிப்புகளைச் சந்திக்க நேரலாம். ஆகையால் கூட்டாளிகளுடன் கவனமாக இருக்க வேண்டும். திருமண தடைகள் ஏற்படலாம். தியானம் செய்வதின் மூலம் மன அமைதி கிடைக்கும்.



## விருச்சிகம்


இந்த டிசம்பர் மாதத்தில் அதிகப்படியான நன்மைகள் நடக்கும். தன்னம்பிக்கை கூடும், தைரியம் அதிகரிக்கும். ஆனால் எந்த முடிவெடுத்தாலும் அனைவரிடத்திலும் ஆலோசனை பெற்று முடிவெடுக்க வேண்டும். பிடிவாதத்தை விட்டு விடுவது நன்மை தரும். குலதெய்வ அருளால் போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். பூர்வீகத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்கள் சிறப்பான உயர்வை அடைவார்கள். தடைகள் தோன்றினாலும் விடா முயற்சியால் வெற்றியடைய முடியும். வருமானம் அதிகரிக்கும், சேமிப்பு உயரும். கேளிக்கைகளில் ஈடுபடுவீர்கள், மனமகிழ்ச்சி கிடைக்கும். வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். கிழக்கு மற்றும் வடக்கு திசை அனைத்து செயல்களுக்கும் நன்மை தரும்.



## தனுசு

இந்த டிசம்பர் மாதத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்படும். புதிய சிந்தனைகள் தோன்றும், புதிய சிந்தனைகளால் சிறப்பான வளர்ச்சி அடைவீர்கள். வாழ்வில் தெளிவு பிறக்கும். எடுக்கும் முடிவுகள் சாதகமானதாக அமையும். அனைத்து பாதிப்புகளிலிருந்தும் வெளிவர முடியும். புதிய வீடு, வாகனம், சொத்து வாங்குவதற்கு வாய்ப்புகள் வரும். தாயாரின் ஆதரவால் முன்னேற்றம் கிடைக்கும். புதிய முதலீடு செய்வீர்கள். முதலீடுகள் பெரிய லாபங்களைத் தரும். முன்னோர்கள் வழிபாடு அனைத்து தடைகளையும் நீக்கும். புதிய வாய்ப்புகள் வரும். மாத பிற்பகுதியில் பெரிய வளர்ச்சி கிடைக்கும். எதிரிகளை வீழ்த்த முடியும். எதிர்பாராத பணவரவு அதிர்ஷ்டத்தால் கிடைக்கும். உடல் நிலையில் மனம் பாதிப்படையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.






## மகரம்

இந்த டிசம்பர் மாதத்தில் அனைத்து செயல்களிலும் கவனமாக இருக்க வேண்டும். செலவுகள் அதிகரிக்கலாம். உடல் நல பாதிப்பு ஏற்படலாம், ஆகையால் தொடர்ந்து கவனம் தேவை. தூக்கம் பாதிக்கப்படும். தியானம் செய்வதின் மூலம் மனநல பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும். வருமானம் சீராக இருக்கும், ஆனால் செலவுகளால் சேமிக்க முடியாது. அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க கூடாது. தவறான முடிவுகளால், பெரிய இழப்புகளால், பாதிப்பு ஏற்படும். வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டு. அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடக்கூடாது. சமுதாயத்தில் கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்பு உண்டு. குழந்தைகள் பிடிவாதமாக இருப்பார்கள். வாழ்க்கை துணைவரிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நலம்.



## கும்பம்

இந்த டிசம்பர் மாதத்தில் அதிகப்படியான நன்மைகள் நடக்கும். உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். மனதில் மகிழ்ச்சி இருக்கும். தொழிலில் லாபங்கள் கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வார்கள். அனைத்து தடைகளும் நீங்கும். கடன், வழக்கு போன்ற பாதிப்புகளிலிருந்து வெளிவர முடியும். திருமண தடை விலகும், மனதிற்கு பிடித்தவாறு வாழ்க்கை துணை அமையும். செலவுகள் குறையும். உடல்நலம் சீராக இருக்கும். திடீர் வருமானம் ஏற்படும், புதிய தொழில் துவங்க முடியும். அனைவரின் தேவைகளையும் நிறைவேற்றுவீர்கள், அது மகிழ்ச்சியான சூழ்நிலையை குடும்பத்தில் உருவாக்கும். நீண்ட தூர பிரயாணங்களைத் தவிர்ப்பது நலம்.



## மீனம்

இந்த டிசம்பர் மாதத்தில் புதிய துவக்கம் ஏற்படும். கிழக்கு திசை அனைத்து செயல்களுக்கும் நன்மையானது. அனைத்து தடைகளும் நீங்கும், உங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்கும். உங்கள் தகுதிகளை உயர்த்தி கொள்வீர்கள். மதிப்பு, மரியாதை, புகழ் கிடைக்கும். தலைமை பொறுப்புகள் கிடைக்கும். புதிய பதவிகள் முன்னேற்றத்தை தரும். தொழில் வளர்ச்சி ஏற்படும், புதிய முதலீடுகளைத் தவிர்க்க வேண்டும். வெளிநாடு செல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வீடு மாற்றம், ஊர் மாற்றம் செய்ய வாய்ப்புகள் உண்டு. திருமணம் கைகூடும். அரசு வேலை கிடைக்க வாய்ப்புகள் வரும். குரு வழிபாடு சிறப்பான வளர்ச்சியைத் தரும்.